விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆடி 06 திங்கட்கிழமை (22.07.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 215

## 16 ஆயிரம் பட்டதாரிகளுக்கு மாத இறுதிக்குள் நியமனம்

### அமைச்சர் கபீர் ஹாசிம் அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டிலுள்ள பட்டதாரிகள் 16 ஆயிரம் பேருக்கு இம்மாத இறுதியில் அரச துறைகளில் நியமனம் வழங்கப்படும் என அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

ஹட்டன் நகரில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அமைச்சர் 23

## தந்தையின் இழப்பை தாங்க முடியாத மகன்

உயிர்மாய்ப்பு



23

## வவுனியாவில் இருந்த 16 வெளிநாட்டு அகதிகள் நீர்கொழும்புக்கு மாற்றம்

வவுனியாவில் தங்க வைக்கப்பட்டிருந்த வெளிநாட்டு அகதிகளில் 16 பேர் மீள நீர்கொழும்புக்கு நேற்று முன்தினம் அழைத்து செல்லப்பட்டனர்.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நாட்டில் இடம்பெற்ற தற்கொலை தாக்குதலை 23

# கிழக்கில் பல தமிழ்க் கிராமங்கள் முஸ்லீம் கிராமங்களாக மாற்றமாகியுள்ளது

### நீதியரசர் விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு



(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் பல தமிழ்க் கிராமங்கள் முஸ்லிம் கிராமங்களாக மாறியுள்ளதாக வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் குற்றம் சாட்டியுள்ளார்.

மட்டக்களப்பு - கதிரவெளி கிராமத்தில் மக்கள் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் மக்கள் சந்திப்பு நேற்றைய தினம் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் இடம் பெற்றதாக கூறப்படும் முஸ்லிம் மயமாக்கல் தொடர்பில் அத்துரலிய ரத்ன தேரர் தனக்கு கூறியவற்றை அவர் இவ்வாறு விபரித்தார்.

கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் பலவிதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டது. சுமார் 300 தமிழ் கிராமங்கள் முஸ்லிம் கிராமங்களாக மாறியுள்ளன.

"மட்டக்களப்பு மாவட்டத்தில் நான் சென்ற இடங்கள் எல்லாம், காணிகள், 23

## மானிப்பாய் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த இளைஞன் தொடர்பான தகவல்கள்

* கொடிகாமத்தைச் சேர்ந்த இளைஞனே உயிரிழப்பு



* முதுகுப் பக்கமாக பாய்ந்த துப்பாக்கி ரவை இதயத்தை தாக்கியதாலேயே உயிரிழப்பு

மருத்துவ அறிக்கையில் தெரிவிப்பு

வைத்தியசாலையில்

* சடலத்தை பார்க்கச் சென்ற 4 இளைஞர்கள் கைது

23ஆம் பக்கம் பார்க்க

அன்பு வாசகர்களே...
ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்
எழுதும்
ஆடி மாத இராசி பலன்கள் 2019
இன்று தொடக்கம் உங்கள் வலம்புரியில்
வாசிக்கத் தவறாதீர்கள்!

## கோரிக்கைகள் நிறைவேறும்வரை பதவிகளை பொறுப்பேற்க மாட்டோம்

### முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானம்

(கொழும்பு)

முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் தம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்குத் தீர்வை வழங்கும்வரை அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்பதில்லை என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

இந்தத் தகவலை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். 23

## சிறுபான்மையினரின் வாக்குகளை தேர்தலில் பெற்றுக் கொள்வோம்

### மகிந்த ராஜபக்ஷ நம்பிக்கை

(கொழும்பு)

தமிழ் - முஸ்லிம் மக்களின் வாக்குகளைப் பெறமுடியும் என்ற நம்பிக்கை உள்ளதாக எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன், பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்ற சர்ச்சைக்கு ஒகஸ்ட் 11ஆம் திகதி தீர்வு கிடைக்கும் எனவும் அவர் கூறினார்.

கொழும்பில் இடம் 23

## இன்னொரு சமூகத்தின் காலடியில் கிடப்பதை ஏற்க முடியாது

### மனோ கணேசன் தெரிவிப்பு



(மட்டக்களப்பு)

மற்றைய சமூகத்தினை அரவணைக்கின்றோம் என்று கூறிக் கொண்டு அந்த சமூகத்தின் காலடியில் கிடப்பதை ஏற்றுக் கொள்ளமுடியாது என 23

## சிங்கள இளையோர்களின் கைகளிலேயே இலங்கைத் தேசம் தங்கியுள்ளது

### என்கிறார் ஞானசார தேரர்

(கொழும்பு)

இஸ்லாமிய அடிப்படைவாதத்தை நாட்டில் இருந்து முழுமையாக துடைத்தெறிய வேண்டுமாயின் பௌத்த பிக்குகளும் சிங்கள இளையோரும் ஒற்றுமையாக முன்வரவேண்டும் என்று பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடே அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

கலென்பிந்துனுவெவ பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற பொது பல சேனா அமைப்பின் மக்கள் சந்திப்பில் 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வாகனம் மோதியதில் இளைஞன் படுகாயம்

## வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா காமினி பாடசாலைக்கு முன்பாக நேற்றுக் காலை 8 மணியளவில் வாகனம் மோதியதில் இளைஞன் படுகாயமடைந்துள்ளார். இவ் விபத்து சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது.

காமினி பாடசாலையிலிருந்து மன்னார் பிரதான வீதிக்கு செல்ல முற்பட்ட வாகனத்துடன் குருமன்காட்டிலிருந்து வவுனியா நகர் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்ற 23 வயதுடைய இளைஞனே விபத்துக்குள்ளாகியுள்ளார்.

இதன் காரணமாக தூக்கி வீசப்பட்ட இளைஞன் படுகாயமடைந்துள்ளதுடன் மோட்டார் சைக்கிளும் கடும் சேதத்திற்குள்ளாகியுள்ளது.

மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (3)


## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**பெரியதம்பி இராசையா ஆச்சாரியார்**

தோற்றம் 12.05.1952 மறைவு 17.07.2014



அறங்கள் பல புரிந்தீர்கள்
அன்பு மழை பொழிந்தீர்கள்
ஆல விருட்ச நிழலாக
ஆறுதல் மொழி பகர்வீர்கள்
வானகமும் வையகமும் போற்றிடவே
வாழும் வழிமுறைகள் புகட்டினீர்கள்
எமது குடும்ப விருட்சத்தில் இருந்து
உதிர்ந்து விட்ட உயிர்ப்பூவே!
மானிட வாழ்க்கை தர்மங்களின் உறைவிடமே
வாழ்க்கைத் தர்மத்தை முறையாக வாழ்ந்து
காட்டிய கலங்கரை விளக்கமே!
கற்றோரும் மற்றோரும் போற்றும்
நல்லவரே!
நமது நல்வாழ்வு நலம்பெற
உலைமெழுகாய் தன்னையே உருக்கி
உழைத்த உயிர்த்தெய்வமே!
ஆண்டவனடிகளில் உங்களை நாம்
கண்டறிவோம்
உங்கள் ஆத்மா இறைவனோடு கலந்து
உறவாடட்டும்.

குடும்பத்தினர்
59A, முருகமூர்த்தி வீதி.
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(9664)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



சிவமயம்

அருள்மிகு உடுப்பிட்டி பண்டகைப் பிள்ளையார் திருக்கோவில்

## விகாரி வருட மகோற்சவப் பெருவிழா - 2019

சைவ அபிமானிகளே,

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே அமையப்பெற்ற பண்டகை திருத்தலத்தே கோவில் கொண்டு அருளாட்சி செய்துவரும் கருணைமிகு மஹா கணபதி பெருமானுக்கு நிகழும் விகாரி வருடம் ஆடித்திங்கள் ஆறாம் நாள் (22.07.2019) திங்கட்கிழமையன்று ஆண்டு மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற எம்பெருமான் திருவருள் கைகூடியுள்ளது.

**ஆடித்திங்கள் ஆறாம் நாள் (22.07.2019) திங்கட்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு கொடியேற்றம், நவசந்தி ஆவாகனம்**

**விசேட உற்சவங்கள்**

ஆடி 11ஆம் நாள் 27.07.2019 சனிக்கிழமை வசந்தோற்சவம்.
ஆடி 13ஆம் நாள் 29.07.2019 திங்கட்கிழமை பகல் 12 மணிக்கு வேட்டைத்திருவிழா இரவு 8.00 மணிக்கு சப்பறத்திருவிழா
ஆடி 14ஆம் நாள் 30.07.2019 செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழா காலை 10.30 மணிக்கு பஞ்சமுக விநாயகர் தேர் பவனி
ஆடி 15ஆம் நாள் 31.07.2019 புதன்கிழமை (ஆடி அமாவாசை) காலை 10.30 மணிக்கு எம்பெருமான் கபில தீர்த்தத்திற்கு தீர்த்தவாரிக்கு புறப்படல், தீர்த்தோற்சவம், யாக கும்பாபிஷேகம், இரவு கொடியிறக்கம், மௌனோற்சவம், சண்டேஸ்வரர் உற்சவம், ஆச்சாரியார் உற்சவம்.
ஆடி 16ஆம் நாள் 01.08.2019 வியாழக்கிழமை காலை பிராயச்சித்த அபிஷேகம், மாலை வைரவ பெருமானுக்கு அபிஷேகம், பொங்கல், விஷேட பூஜை.

குறிப்பு : கால கிரம விபரங்கள் ஆலய விளம்பர பலகையில் காணலாம். அடியார்கள் பால், இளநீர், பூக்கள், மாலைகள் வழங்கி, நேர்த்திகள் நிறைவேற்றும் அடியார்கள் ஆலய குருக்கள், பரிபாலன சபையுடன் தொடர்பு கொண்டு செய்து கொள்ளலாம்.

சுபம் இங்ஙனம்
ஆலய பரிபாலன சபையினர்

(9665)


# கோப்பாய் விபத்தில் இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் இருவரும் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் கோப்பாய் வீதி, ஞான வைரவர் கோயிலுக்கு அருகாமையில் நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த இருவரும் உடனடியாக கோப்பாய் ஆதார வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.



விபத்து தொடர்பான மேலதிக விசாரணையை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (3,10)


## மரண அறிவித்தல்

## ராசா சிவலிங்கம்



உரும்பிராய் கிழக்கைப் பிறப் பிடமாகவும், கரந்தன் மற்றும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட ராசா சிவலிங்கம் அவர்கள் 20.07.2019 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ராசா, சௌந்தரம் ஆகியோரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான, பொன்னுத்துரை, கனகம்மா ஆகியோரின் மருமகனும், குனேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், ரவிதாஸ், கவிதாஸ், ரஜீவன், சுஜீவன், துஷாந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், ரேகா, கிரிஜா, கார்த்திகா, நிஷா, நிமல்ராஜ் ஆகியோரின் மாமனாரும், பரமேஸ்வரி, காலஞ்சென்ற துரைசிங்கம் மற்றும் நாகரட்ணம், தர்மலிங்கம், நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் தர்மலிங்கம், சற்குணஆனந்தன், டில்லிராணி, காலஞ்சென்ற தனபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.07.2019 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இவ் அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல் : ரா.தர்மலிங்கம்
சகோதரன் - 021 205 4547

(C-7065)



## அந்தியேட்டி கிரியையும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

**அமரர் சிவப்பிரகாசம் தேவேந்திரராஜா**



கடந்த 23.06.2019 அன்று இறைவனடிசேர்ந்த எம் குலவிளக்கு அமரர் சிவப்பிரகாசம் தேவேந்திரராஜாவின் அந்தியேட்டி கிரியைகள் நேற்று ஞாயிற்றுக் கிழமை (21) கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம்பெற்றது.

அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், மதிய போசன நிகழ்வும் நாளை செவ்வாய்க்கிழமை (23) முற்பகல் 11.00 மணியளவில் மந்துவில் மேற்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

(இவ் அறிவிப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)

மந்துவில் மேற்கு.

தகவல் :
குடும்பத்தினர்

(C-7063)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர்.இராசதுரை விஜயரத்தினம்



பிறப்பு
21 . 07 . 1946

இறப்பு
19 . 07 . 2019

எமது நிறுவனத்தில் பல வருடங்களாக கொள்வனவாளராகவும் கணக்காய் வாளராகவும் கடமையாற்றிய **இராசதுரை விஜயரத்தினம்** அவர்கள் 19.07. 2019 அன்று காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக!

(C-7064)

எஸ். வி.முருகேசு
இல. 154, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

S.V.M நிறுவனத்தின்
உரிமையாளரும்
ஊழியர்களும்.

எஸ்.வி.எம். பிறைவேற் லிமிட்டெட்,
இல. 122, டாம் வீதி, கொழும்பு-12.

எஸ்.வி.முருகேசு, A9 வீதி,
கரடிப்போக்கு, கிளிநொச்சி.

# தோனி 'மறுப்பு' அஷ்வின், தவான் 'வாய்ப்பு'

## இந்திய அணி அறிவிப்பு

மே.தீவுகள் அணிக்கு எதிரான 'ரி20', ஒருநாள் தொடரில் பங்கேற்கும் இந்திய அணியில் தோனிக்கு இடம் கிடைக்கவில்லை. காயத்தில் இருந்து மீண்ட ஷிகர் தவான் தேர்வானார். டெஸ்ட் அணியில் அஷ்வின், விரிதிமன் சகா இடம் பிடித்தனர்.

மே.தீவுகளுக்கு சுற்றுப் பயணம் செல்லவுள்ள இந்திய அணி, அங்கு மூன்று 'ரி20', மூன்று ஒருநாள் மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதல் 'ரி20' போட்டி வரும் ஓக. 3ல் புளோரிடாவில் நடக்கவுள்ளது.


அஸ்வின்

**சகா வாய்ப்பு**

கடந்த 2018ல் நடந்த ஐ.பி.எல்., தொடரின் போது கண்ட தோள்பட்டை காயத்துக்கு 'சத்திரசிகிச்சை' செய்து கொண்ட விக்கெட் கீப்பர் விரிதிமன் சகா, முழு உடற்தகுதி பெற்றதால் டெஸ்ட் அணிக்கு திரும்பினார். இவர், கடைசியாக 2018ல் தென்னாபிரிக்காவில் நடந்த டெஸ்டில் விளையாடினார். சமீபகாலமாக ஒருநாள், 'ரி20' அணிகளில் புறக்கணிக்கப்பட்டு வரும் தமிழக சுழற்பந்துவீச்சாளர் அஷ்வின், டெஸ்ட் அணியில் மட்டும் இடம் பிடித்தார். மற்றபடி துணைத் தலைவர் ரகானே, புஜாரா, இஷாந்த் சர்மா ஆகியோர் டெஸ்ட் அணியில் தங்களது இடத்தை உறுதி செய்தனர்.

**தவான் வருகை**

சமீபத்தில் இங்கிலாந்தில் நடந்த உலகக் கிண்ண தொடரின் போது கட்டை விரலில் ஏற்பட்ட எலும்பு முறிவு காரணமாக பாதியில் திரும்பிய ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஷிகர் தவான், பூரண குணமடைந்துவிட்டதால், ஒருநாள், 'ரி20' அணியில் இடம் பிடித்தார். ஒருநாள் மற்றும் 'ரி20' அணியில் இளம் வேகப்பந்துவீச்சாளர் நவ்தீப் சைனி அறிமுக வாய்ப்பு பெற்றார். 'நடுத்தர வரிசை' துடுப்பாட்ட வீரர்களான ஸ்ரேயாஸ் ஐயர், மணிஷ் பாண்டே, வேகப்பந்துவீச்சாளர் கலீல் அகமட் ஆகியோர் ஒருநாள், 'ரி20' அணிக்கு மீண்டும் தேர்வாகினர்.

**சகார் வாய்ப்பு**

ராஜஸ்தானை சேர்ந்த இளம் சுழற்பந்துவீச்சாளர் ராகுல் சகார், 'ரி20' அணியில் அறிமுக வாய்ப்பு பெற்றார். இவர், பிரிமியர் தொடர் மற்றும் உள்ளூர் போட்டிகளில் சிறப்பாக விளையாடியதால் தேர்வானார். குர்னால் பாண்ட்யா, வோஷிங்டன் சுந்தர் மற்றும் ராகுல் சகாரின் சகோதரர் தீபக் சகார் ஆகியோர் 'ரி20' அணியில் இடம் பெற்றுள்ளனர்.

**பும்ராவுக்கு ஓய்வு**

தொடர்ச்சியாக போட்டிகளில் விளையாடி வரும் வேகப்பந்துவீச்சாளர் ஜஸ்பிரித் பும்ராவுக்கு, ஒருநாள், 'ரி20' போட்டியில் ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

இவர், டெஸ்ட் போட்டிக்கு மட்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார். முதுகுப் பகுதி காயம் காரணமாக 'சகலதுறை வீரர்' ஹர்திக் பாண்ட்யாவுக்கும் ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. தமிழக 'சகலதுறை வீரர்' விஜய் சங்கர், விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரர் தினேஷ் கார்த்திக் ஆகியோருக்கு எந்த ஒரு அணியிலும் இடம்கிடைக்கவில்லை.

அணித் தலைவர் ஹோலி, ரோகித் சர்மா, லோகேஷ் ராகுல், ரிஷாப் பன்ட், ரவிந்திர ஜடேஜா ஆகியோர் மூன்று விதமான அணிகளிலும் இடம் பிடித்தனர்.

**தோனி இல்லை**

மூன்று வித போட்டிகளுக்கும் விராத் ஹோலி தலைமை தாங்குகிறார். உலகக்கிண்ணத் தொடருக்கு பின், ஓய்வு பெறுவார் என எதிர்பார்க்கப்பட்ட விக்கெட் காப்புத் துடுப்பாட்ட 'வீரர் தோனி. அடுத்த இரண்டு மாதம் துணை இராணுவப்படையில் சேர்ந்து சேவை செய்யப்போவதாக தெரிவித்தார். இதனை யடுத்து இவருக்கு 'ரி20', ஒருநாள் போட்டிக்கான அணியில் தேரவு செய்யப்பளபடவில்லை.


எம்.எஸ். தோனி

**'ரி20' அணி**

விராத் ஹோலி (அணித் தலைவர்), ரோகித் சர்மா (துணைத் தலைவர்), ஷிகர் தவான், லோகேஷ் ராகுல், ஸ்ரேயாஸ் ஐயர், மணிஷ் பாண்டே, ரிஷாப் பன்ட் (விக்கெட் காப்பாளர்), குர்னால் பாண்ட்யா, ரவிந்திர ஜடேஜா, வோஷிங்டன் சுந்தர், ராகுல் சகார், புவனேஷ்வர் குமார், கலீல் அகமட், தீபக் சகார், நவ்தீப் சைனி.

**ஒருநாள் போட்டி அணி**

விராட் ஹோலி (அணித் தலைவர்), ரோகித் சர்மா (துணைத் தலைவர்), ஷிகர் தவான், லோகேஷ் ராகுல், ஸ்ரேயாஸ் ஐயர், மணிஷ் பாண்டே, ரிஷாப் பன்ட் (விக்கெட் காப்பாளர்), ரவிந்திர ஜடேஜா, குல்தீப் யாதவ், யுவேந்திர சகால், கேதர் ஜாதவ், முகமது ஷமி, புவனேஷ்வர் குமார், கலீல் அகமட், நவ்தீப் சைனி.

**டெஸ்ட் அணி**

விராட் ஹோலி (அணித் தலைவர்), அஜின்கியா ரகானே (துணைக் கேப்டன்), ரோகித் சர்மா, மயாங்க் அகர்வால், லோகேஷ் ராகுல், புஜாரா, ஹனுமா விஹாரி, ரிஷாப் பன்ட் (விக்கெட் காப்பாளர்), விரிதிமன் சகா (விக்கெட் காப்பாளர்), அஷ்வின், ரவிந்திர ஜடேஜா, குல்தீப் யாதவ், இஷாந்த் சர்மா, மொஹமட் ஷமி, ஜஸ்பிரித் பும்ரா, உமேஷ் யாதவ்.

# வெள்ளி மட்டும் போதுமா சிந்து

## இறுதிப் போட்டி அலர்ஜி தொடர்கதையாகிறது


வெள்ளி வென்ற இந்தியாவின் சிந்து (இடது) அருகில் தங்கம் வென்ற ஜப்பானின் அகானே யமாகுச்சி

இந்தோனேஷிய ஓபன் பட்மின்டன் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் தோல்வியடைந்த இந்திய வீராங்கனை சிந்து, வெள்ளிப்பதக்கத்துடன் ஆறுதல் அடைந்தார்.

இந்தோனேஷிய தலைநகர் ஜகார்த்தாவில், சர்வதேச பாட்மின்டன் தொடர் நடந்தது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் சிந்து, ஜப்பானின் அகானே யமாகுச்சி மோதினர். முதல் செட்டை 15-21 என இழந்த சிந்து, 2வது செட்டை 16-21 எனக் கோட்டைவிட்டார்.

மொத்தம் 51 நிமிடம் நீடித்த போட்டியில் ஏமாற்றிய சிந்து 15-21, 16-21 என்ற நேர் செட் கணக்கில் தோல்வியடைந்து 2வது இடம் பிடித்து வெள்ளி வென்றார். அகானே யமா குச்சி, சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

**இறுதிப் போட்டி என்றால் அலர்ஜி**

சிந்துவுக்கு இறுதிப் போட்டி என்றாலே அலர்ஜி தான். கடந்த ஆண்டு உலக சம்பியன்ஷிப் (எதிர்: ஸ்பெயினின் கரோலின் மரின்), ஆசிய விளையாட்டு (எதிர்: சீனதைபேயின் டாய் டிசூ யிங்), காமன்வெல்த் விளையாட்டு (எதிர்: இந்தியாவின் செய்னா நேவல்), தாய்லாந்து ஓபன் (எதிர்: ஜப்பானின் ஒகுஹரா), இந்தியன் ஓபன் (எதிர்: அமெரிக்காவின் பெய்வன் ஜாங்) தொடர் களின் இறுதிப் போட்டியில் தோல்வியடைந்தார். தற்போது இந்தோனேஷிய ஓபன் இறுதிப் போட்டியிலும் வீழ்ந்தார்.

# பாகிஸ்தான் அணிக்கு இரண்டு தலைவர்கள்

டெஸ்ட் மற்றும் ஒரு நாள், 'ரி20' பாகிஸ்தான் அணிக்கு தனித்தனி தலைவர்கள், பயிற்சியாளர்களை நியமிக்க பாகிஸ்தான் அணி திட்டமிட்டுள்ளது.

இங்கிலாந்தில் நடந்த உலக கிண்ண கிரிக்கெட் தொடரில், பாகிஸ்தான் அணி லீக் சுற்றுடன் திரும்பியது. இதனால், டெஸ்ட் மற்றும் ஒரு நாள், 'ரி20' அணிக்கு தனித்தனியாக தலைவர்களை நியமிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. இந்த முடிவு விரைவில் எடுக்கப்படலாம் எனத்தெரிகிறது.

இது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதிகாரி ஒருவர் கூறுகையில்," அடுத்த மாதம் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் ஆரம்பமாகிறது. இதில் பாகிஸ்தான் அணி இலங்கை, அவுஸ்திரேலியா, பங்களாதேஷ் உள்ளிட்ட அணிகளுடன் மோத உள்ளது.

இதன்பின், அடுத்த ஆண்டு ஆஸ்திரேலிய மண்ணில் 'ரி20' உலக கிண்ண தொடர் நடக்கவுள்ளது. இதைப்போல, 9 முதல் 10 'ரி20' போட்டிகளில் பங்கேற்க உள்ளது. இந்த நெருக்கடியான நிலையை சமாளிக்க, டெஸ்ட் மற்றும் ஒரு நாள், 'ரி20' அணிகளுக்கு தனித்தனியாக தலைவர்கள், பயிற்சியாளர்களை நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த மாத இறுதியில் நடக்கவுள்ள கிரிக்கெட் கமிட்டியில் இறுதி முடிவு எடுக்கப்பட வாய்ப்புள்ளது." என்றார்.

# தமிழ் மக்களுக்கு செய்த துரோகங்களின் அளவுக்கு சொத்துக்களை சேர்த்துள்ள தமிழ் தலைமைகள்

## காணாமல் போனவர்களின் உறவுகள் ஆதங்கம்

(பரந்தன்)

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இதுவரை காலமும் எத்தனையோ துரோகங்களை மக்களிற்கு செய்துள்ளனர். அவை அனைத்திற்கும் அவர்களிடம் சொத்துக்கள் சேர்ந்திருக்கும் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் ஆதங்கம் வெளியிடுகின்றனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் கிளிநொச்சி மாவட்ட சங்கத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

மேற்படி சந்திப்பில் கருத்து தெரிவித்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர் சங்க தலைவர் லீலாதேவி ஆனந்த நடராஜா மேலும் தெரிவிக்கையில்,

இன்று 879 நாளாக எமது தொடர் போராட்டம் இடம்பெற்று வருகின்றது. இன்றுவரை எமது நிலை தொடர்பில் தீர்வு வழங்குவதற்கு எவரும் முன்வரவில்லை. இதுவரை 30 பேர்வரை தமது பிள்ளைகளை காணாதவர்களாக உயிரை மாய்த்துள்ளனர்.

இந்த நிலையில் எமது அமைதி வழி போராட்டங்களை குழப்பும் வகையில் எமது கோவில்கள் ஆக்கிரமிக்கப்படுவது உள்ளிட்ட பல பிரச்சினைகள் எழுந்து வருகின்றது. இவை திட்டமிட்டு எம் மீது திணிக்கப்படுகின்றமையை உணர்கின்றோம் .

எமது அரசியல் தலைமைகள் அரசாங்கத்துடன் ஒத்து செயற்படுவதனாலேயே அவர்கள் மனோ கணேசன் அழைத்தபோது சென்றிருக்கவில்லை. உண்மையில் அவர்கள் அங்கு சென்றிருந்தால் அவர்களிற்கு சங்கடமான நிலை ஏற்பட்டிருக்கும்.

வடக்கில் உள்ள தமிழ் தலைமைகள் ஒன்றுபட்டு ஒரே அணியாக தேர்தலில் களம் இறங்க வேண்டும். அத்துடன் விட்டுக்கொடுப்புக்களை செய்ய வேண்டும். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்மை ஏமாற்றிவிட்டது. அவர்கள் தமது சுயநலம் சார்ந்து செயற்படுகின்றனர்.

இந்த நிலையில் எமது பிள்ளைகளின் விழிவிற்காகவும், தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் பேசுவதற்கு ஓர் பொது அணி தேவைப்படுகின்றது. அவ்வாறு அனைத்து தரப்பும் ஓரணியில் திரண்டு செயற்படுவதே பொருத்தமானது.

எமது அரசியல் தலைமைகள் சொத்துக்களை சேர்க்கின்றார்களோ தெரியவில்லை. ஆனால் ஒவ்வொரு வரவு- செலவு திட்டத்திற்கும், காணாமல் போனோர் அலுவலகம் அமைக்கப்படுவதற்கும் அரசுக்கு ஆதரவாக செயற்பட்டிருந்தனர்.

அவ்வாறு அவர்கள் தமது சுயநலத்தினை கருத்திற் கொண்டு செயற்பட்டமையால் அவர்களிற்கு வரப்பிரசாதங்கள் பல வழங்கப்பட்டிருக்கும். ஆகவே அவ்வாறு கிடைத்த அனைத்தையும் அவர்கள் சொத்தாக்கியிருப்பார்கள். அவர்கள் மக்கள் நலன் சார்ந்து செயற்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (9-312)

---

# கன்னியா விவகாரத்தின் மூலம் சம்பந்தர் வரலாற்றுக் கடமையை தவறவிட்டுள்ளார்

## கவிஞர் சோ.ப.குற்றச்சாட்டு

(திருமலை)

திருகோணமலையில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரின் வீட்டு முன் வாயிலில் அமைந்துள்ள கன்னியா வெந்நீரூற்று பிள்ளையார் ஆலயத்தின் பிரச்சினையைத் தீர்க்க முடியாமற் போனதன் மூலம் தனது வரலாற்றுக் கடமையைத் தவறவிட்டுள்ளார் என சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவர் கவிஞர் சோ.பத்மநாதன் குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ். நல்லூர் வீதியில் அமைந்துள்ள அகில இலங்கை இந்து மாமன்றத்தில் இடம்பெற்ற திருக்கேதீஸ்வர ஆலய வளைவு சம்பந்தமாக இந்து அமைப்புக்களின் ஒன்று கூடலில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் தேர்தல் மாவட்டமான திருகோணமலை மாவட்டத்தில் இந்து ஆலயத்தில் ஏற்பட்ட பிரச்சினைக்கு முழு மூச்சாக நின்று தீர்வு பெற்றுக் கொடுத்திருக்க வேண்டும்.

அவ்வாறில்லாமல் அமைச்சர் மனோ கணேசன் ஏற்பாடு செய்த ஜனாதிபதியூடான சந்திப்பிலாவது கலந்து கொண்டு எமது இந்து மதம் எதிர்நோக்குகின்ற பிரச்சினை தொடர்பில், கலந்துரையாடி முடிவுக்கு வந்திருக்க வேண்டும்.

இங்கு வெட்கப்பட வேண்டிய விடயம் என்னவென்றால் எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் எவருமே குறித்த கலந்துரையாடலுக்குச் செல்லவில்லை.

கல்முனையில் தமிழ் பிரச்சினைக்கு பௌத்த பிக்கு உண்ணாவிரதம் இருக்கிறார். ஏன் அவர் இருக்க வேண்டும்?எங்கள் சம்பந்தன் ஐயா அங்கு சென்று போராட்டம் நடத்த முடியாதா?

அதுமட்டுமல்லாமல் திருக்கேதீஸ்வர ஆலய வளைவு கத்தோலிக்க மதத்தினரால் உடைத்தெறியப்பட்ட சம்பவத்தில் கூட மன்னார் மாவட்டத்தில் இருக்கும் இரு பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் வாக்கு வங்கிக்காக மௌனிகளாக இருந்தார்கள்.

திருக்கேதீஸ்வரத்தில் இன்று நேற்றல்ல பலகாலமாக கத்தோலிக்கரின் அடாவடித்தனங்கள் இடம்பெற்றது. சேர்.கந்தையா காலத்தில் இருந்துகூட கத்தோலிக்க மதத்தின் ஆக்கிரமிப்பும் அதிகாரிகள் பக்கசார்பான நடவடிக்கையும் காணப்பட்டது.

இருந்தாலும் ஆளுமையுள்ள ஓர் தலைவராக சோ. கந்தையா காணப்பட்டதால் மதவாதிகள் திருக்கேதீஸ்வரத்தை நெருக்கவில்லை. இப்போது ஆளுமையற்ற குறுகிய நோக்கத்துக்காகச் செயற்படுபவர்களினால் எமது இந்து மதம் சவால்களை எதிர்நோக்குகின்றது.


வடக்கு- கிழக்கைச் சேர்ந்தவர் அல்லாத அமைச்சர் மனோ கணேசன் இந்து மதத்தைப் பாதுகாக்க எடுத்துவரும் நடவடிக்கை தொடர்பில் தலைவணங்குவதோடு அவர் தனது வரலாற்றுக் கடமையைச் சரியாகச் செய்கிறார் என தெரிவிப்பதோடு அமைச்சரின் அனுசரணையுடன் சகல காரியங்களையும் வெற்றி கொள்ள முயற்சிக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (9-10)

---


# கண்ணீர் அஞ்சலி

அமரர்

## கபிரியேற்பிள்ளை மரியதாசன்



எமது பாடசாலையில் உப அதிபராகக் கடமையாற்றும் அருட்பணி அன்ரன் அமலதாஸ் அவர்களின் அன்புத் தந்தையார் கபிரியேற்பிள்ளை மரியதாசன் அவர்கள் 19.07.2019 அன்று இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாடசாலை சமூகம்,
யா/சென்ஜேம்ஸ் மகா வித்தியாலயம், குருநகர்.


---

# இராசி பலன்

**மீனம்**: பொது நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப் புண்டு, புதியவர்களின் நட்பு கிடைக்கும், குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது.

**மேடம்**: வழக்கத்தை விட கூடு தல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொறுப்புக்கள் கூடும் நாள்.

**இடபம்**: பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும், வாகன சுகமுண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்**: மனதிற்கினிய சம்பவங் கள் இடம்பெறலாம், தொழில் வளர்ச்சி கூடும் நாள், குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வர், போசன சுகமுண்டு.

**கும்பம்**: நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், கோரிக்கைகள் நிறைவேறும் நாள், பொது வழியில் மதிப்பும் மரியாதையும் கூடும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**கடகம்**: மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், கோபத்தை குறைத்துக் கொள்வது நல்லது, பயணங்கள் கைகூடும்.

**மகரம்**: பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள், தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**சிம்மம்**: ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.

**தனுசு**: மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**விருச்சிகம்**: பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம், மகிழ்ச்சி கூடும் நாள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்**: தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், விருந்தினர் வருகையுண்டு, சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கன்னி**: குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியத்தில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

கிரகநிலை: சந் | ராகு, புத, சுக் | சூரி, செவ் | சனி, கேது | குரு

சந்திராஷ்டமம் உத்தரம்

**22.07.2019**

ஆடி 06, திங்கட்கிழமை

சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு

பஞ்சமி பிற்பகல் 12.17 மணிவரை

பூரட்டாதி காலை 9.29 மணிவரை

சுபநேரம் 12.01 - 1.31 மணிவரை

இராகுகாலம் 7.31 - 9.01 மணிவரை

வளவன்

# ஆலயத்துக்கான அடிக்கல் நாட்டல்





(யாழ்ப்பாணம்)

இளவாலை வாழ்வகம் மடு மாதா ஆலயத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் வலிதூண்டல் பங்கு தந்தை அருட்பணி பி.டினேசன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக இளவாலை மறை கோட்ட முதல்வர் அருட்பணி. யேசுரட்ணம், பாராளுமன்ற உறுப்பினர் மாவைசேனாதிராஜா, வலி வடக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், வலி வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (5-116)



**சாவகச்சேரி பிரதேச சபையின் உபதவிசாளர் செ.மயூரனின் ஏற்பாட்டில் கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் உள்ள காக்கையன் குளம் அண்மையில் கொடிகாமத்தைச் சேர்ந்த ஐயாத்துரை விஜயலட்சுமி ஞாபகார்த்தமாக அவர்களது மகன் ஐயாத்துரை ராகவன் (அமெரிக்கா) நிதி பங்களிப்புடன் அண்மையில் துப்புரவு செய்யப்பட்டு தூர் வாரப்பட்டது.**

**இதில் சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவன், பிரதேச சபை உறுப்பினர்கள் சி.சிவநேசன்,வை.ஜெகதாஸ் மிருசுவில் சித்த போதனா மருத்துவ அதிகாரி க.றஜிதா ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:- கொடிகாமம் செய்தியாளர்)**

# அபிவிருத்தியின் போது உறுப்பினர்களது திட்ட முன்மொழிவுகளும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்

## நகரசபை உறுப்பினர் சிவராசா

(சாவகச்சேரி)

நகர அபிவிருத்தியின் போது சபை உறுப்பினர்களுடைய கோரிக்கைகள் மற்றும் முன்மொழிவுகளும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும் எனச் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.சிவராசா அண்மையில் நகரசபையில் இடம்பெற்ற சபை அமர்வின் போது தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரின் அபிவிருத்திக்கென உலக வங்கியினால் ஒதுக்கப்பட்டுள்ள ஐந்நூறு மில்லியன் ரூபாய் நிதிக்கான வேலைத்திட்டத்தில் சபை உறுப்பினர்களால் ஏற்கனவே முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள் சில உள்ளடக்கப்படாமையினாலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

30-40 வருடங்களாக புனரமைக்கப்படாத வட்டார வீதிகள் உலக வங்கியின் ஐந்நூறு மில்லியன் ரூபாய் நிதி கிடைக்கும் போது செப்பனிடப்படும் என ஒரு வருட காலமாக எம்மை ஆறுதல் படுத்தினீர்கள்.

ஆனால் தற்போது அந்த நிதி கிடைக்கப்பெற்ற போது எமது கோரிக்கைகள் உள்வாங்கப்படவில்லை. அபிவிருத்திக்கான முன்மொழிவுகள் தயாரிக்கும் போது சபை உறுப்பினர்களுடைய கோரிக்கைகளும் உள்வாங்கப்பட வேண்டும். அத்துடன் சாவகச்சேரி சந்தையில் வருகின்ற மரக்கறிக் கழிவுகள் மற்றும் சாவகச்சேரி நகரசபையின் கொல்களத்தில் வருகின்ற இறைச்சிக் கழிவுகளை பசளையாக்குவதற்கான முயற்சிகளை இந்த உலக வங்கி நிதி மூலமாக மேற்கொண்டிருக்க வேண்டும். இறைச்சி மற்றும் மீன் கழிவுகள் சாவகச்சேரி- கோவிற்குடியிருப்பு கடற்பரப்பில் கொட்டப்பட்டு பாரிய சுகாதார சீர்கேடு ஏற்படுவதாக சபையில் பலமுறை உறுப்பினர்கள் எடுத்துக்கூறியும் பயனுள்ள திட்டங்கள் உள்வாங்கப்படவில்லை. எதிர்வரும் காலங்களில் இவ்வாறான நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கும் பட்சத்தில் சபை உறுப்பினர்களின் திட்ட முன்மொழிவுகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

சாவகச்சேரி நகரசபையினர் உலக வங்கி நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளவுள்ள பத்து அபிவிருத்தித் திட்டங்களை முன்னிலைப்படுத்தி அனுமதிக்காக நகர அபிவிருத்தி அதிகார சபையினரிடம் அனுப்பி வைத்துள்ளனர்.

குறித்த நிதி ஒதுக்கீட்டில் நகர சபைக்கு வருமானம் கிடைக்கக்கூடிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்குமாறு தமக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் நகர சபையினர் தெரிவித்துள்ளனர். (5-30)

## தானியங்கி துப்பாக்கிகள் வைத்திருந்தவர்களுக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

தானியங்கி துப்பாக்கிகள் இரண்டு மற்றும் ஒரு தொகை ரவைகள் என்பன வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வைத்தியசாலை சிற்றூழியர் ஒருவரும் அவரது நண்பரும் எதிர்வரும் 29 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். காலி பதில் நீதவான் நீதிமன்ற நீதிபதி பீ.கே.எல். பண்டார இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

உடுகம தெற்குப் பகுதியில் வசிக்கும் நிராஜ் அசங்க ஜயவர்தன எனும் பொடி சுத்தா என்பவரும், தொடந்துவவில் வசிக்கும் எரங்க லக்மால் திலகரத்ன எனும் சந்தேகநபர்கள் இருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## கௌரவிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் யாழ். வலம்புரி விடுதியில் உள்ள சங்கிலியன் மண்டபத்தில் இடம்பெறும்.(5-10)

## தேர்தல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு

(சாவகச்சேரி)

யாழ்.மாவட்ட செயலக தேர்தல் ஆணைக்குழுவினரால் சாவகச்சேரி - கோவிற்குடியிருப்பு ஜே/301 கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த மக்களுக்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை சாவகச்சேரி றோமன் கத்தோலிக்க பாடசாலையில் தேர்தல் தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது இலங்கையில் உள்ள தேர்தல் விதிமுறைகள், தேர்தல் வரலாறு, மக்களுக்கு உள்ள தேர்தல் உரிமைகள், சட்டதிட்டங்கள், வாக்குரிமையைப் பயன்படுத்தும் முறைமை மற்றும் வாக்காளர் பிரித்தெடுப்பின் முக்கியத்துவம் தொடர்பாக பொதுமக்களுக்கு தெளிவூட்டப்பட்டது.

மேலும் பொதுமக்கள் தேர்தலில் இருந்து விலகி இருப்பதனால் சிறந்த மக்கள் பிரதிநிதிகள் வருவதற்கான சந்தர்ப்பங்கள் அற்றுப் போவதாகவும், வருடாவருடம் வாக்காளர் பதிவுகளை மேற்கொள்ளத் தவறும் பட்சத்தில் பிள்ளைகளை பாடசாலையில் இணைத்தல், பல்கலைக்கழக அனுமதி, தொழில் வாய்ப்பு, வீட்டுத்திட்டம் உள்ளிட்ட அரச சலுகைகளைப் பெற்றுக் கொள்வதில் சிக்கல்கள் ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அதனை விட பொதுமக்கள் வாக்காளர் பதிவுகளை மேற்கொள்ளாத பட்சத்தில் எமது மாவட்டத்திற்கான பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகை குறைவடைவதுடன் எமது பிரதேச அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடும் குறைவடையும்.

எனவே 18 வயதிற்கு மேற்பட்ட சகலரும் வாக்காளர் பதிவுகளை வருடாவருடம்மேற்கொண்டு பாராளுமன்ற உறுப் பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் அதேவேளையில் அபிவிருத்திக்கான ஒதுக்கீடுகளையும் அதிகரிக்க ஒத்துழைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டனர்.

கடந்த வருடம் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலின் போது கோவிற்குடியிருப்பு ஜே/301 கிராம உத்தியோகத்தர் பிரிவில் 85 சதவீதமான மக்கள் வாக்காளர் பதிவுகளை மேற்கொண்டதாகவும் அதில் 60 சதவீதமானோரே தேர்தலில் வாக்களித்ததாகவும் 40 வீதமானோர் வாக்களிக்கவில்லை எனவும்தேர்தல் ஆணைக்குழுவினரால் சுட்டிக்காட்டப்பட்டது.

கோவிற்குடியிருப்புக் கிராம உத்தியோகத்தர் கார்த்திகேயன் தலைமையில் இடம்பெற்ற இந்த விழிப்புணர்வு நிகழ்வில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள். தேர்தல் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.


கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது வட்டாரக் குளறுபடி காரணமாக பெரும் சர்ச்சைக்குரிய பிரதேசமாக கோவிற் குடியிருப்பு கிராம உத்தியோகத்தர் பிரிவின் தரை மற்றும் கடல் வட்டாரங்கள் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் இன்று வரை அந்த சர்ச்சைக்குரிய தீர்வு கிடைக்கப்பெறவில்லை. (5-30)

# “நல்லூர் உற்சவகால பஜனை”

(யாழ்ப்பாணம்)

யாழ்.சின்மயா மிஷன் நல்லூர் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு நடத்தும் இந்துவாக வாழ்வோம் செயற்றிட்டத்தின் ஒரு அம்சமாகிய பஜனை நிகழ்வு 7 ஆவது வருடமாக இவ்வருடமும் வழமை போன்று நடைபெறும். கொடியேற்றத் திருவிழாவிலிருந்து எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் தீர்த்தத் திருவிழா வரை காலையில் பாடசாலை மாணவர்களும் மாலையில் அறநெறிப்பாடசாலை மாணவர்களும் திருமுறை, திருப்புகழ், பஜனைப்பாடல்களை பாடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்தெய்வீகப்பணியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள், அறநெறிப்பாடசாலைகள் எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்பாக யாழ்.சின்மயா மிஷன் அலுவலகத்துடன் (தினமும் மாலை 4 மணி தொடக்கம் 6 மணி வரை) நேரடியாகவோ, தொலைபேசியூடாகவோ (021 222 3447, 077 857 3447) தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு சின்மயா மிஷன் கேட்டுக்கொண்டுள்ளது. (5)



**முன்னாள் பிரதி சபாநாயகரும் உடுப்பிட்டி தொகுதி பாராளுமன்ற உறுப்பினருமான அமரர் முருகேசு சிவசிதம்பரத்தின் 97 ஆம் ஆண்டு பிறந்த தின நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. நெல்லியடி நகரில் உள்ள அவரின் உருவச் சிலைக்கு முன்பாக கரவெட்டி ஒன்றியத்தின் தலைவர் உபாலி பொன்னம்பலம் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், த.சித்தார்த்தன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ச.சுகிர்தன், க.தர்மலிங்கம், வே.சிவயோகன் , பா.கஜதீபன், எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் கரவெட்டி ஒன்றியத்தின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். (படங்கள்:- மகாலிங்கம்)**

# தேர்தலுக்கான அறிவிப்புக்கள் வெளியாவதற்கு முன்னர் அபிவிருத்திப் பணிகளைத் துரிதப்படுத்துக

## ஜனாதிபதி செயலணியின் அபிவிருத்திக்கான ஆலோசகர் நஸீர் அஹமட் வேண்டுகோள்



(ஏறாவூர்)

எதிர்பார்க்கப்படும் "தேர்தலுக்கான அறிவிப்புக்கள் விரைவில் வெளியாவதற்கு முன்னர் அபிவிருத்திப் பணிகளைத் துரிதப்படுத்துமாறு வடக்கு- கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியின் ஆலோசகர் ஏ. நஸீர் அஹமட் பிரதேச செயலகங்களின் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது விடயமாக ஏறாவூர் நகர பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற பிரதேச அபிவிருத்தி இணைப்புக் குழுக்கூட்டத்தில் அவர் இந்த வேண்டுகோளை முன்வைத்தார்.

நிகழ்வில் பிரதேச இணைத் தலைவர்களில் ஒருவராகக் கலந்து கொண்ட அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், தேர்தலுக்காக அரச இயந்திரம் அந்தக் கருமங்களிலேயே ஈடுபட நேரும் என்பதால் அபிவிருத்திப் பணிகள் முற்று முழுவதுமாக முடங்கக் கூடும்.

தற்போது வருடத்தின் அரையாண்டைத் தாண்டிய நிலையில் இருந்து கொண்டிருக்கின்றோம், ஆயினும் இவ்வாண்டுக்காக ஒதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதிகளுக்குரிய பணிகளில் இன்னும் பல வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்காமலேயே உள்ளன.

அபிவிருத்தி பணிகள் தொடர்பில் நாம் மேற்கொள்ள உத்தேசித்த வேலைத்திட்டங்கள் சில மந்தகதியில் செயல்முறை வடிவம் பெறுவதைப் பார்க்க முடிகிறது.

இதனை உடனே மாற்றி அமைக்கவேண்டும். சகல பணிகளும் துரிதமாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

எவ்வாறேனும், வழமையான வருடங்களை விட இவ்வாண்டின் இறுதிப் பகுதி ஏதோவொரு அல்லது பல தேர்தலுக்குரிய காலமாக அறிவிக்கப்படலாம்.

அவ்வாறு அறிவிக்கப்பட்டால் இவ்வாண்டுக்காக ஒதுக்கப்பட்ட அபிவிருத்தி வேலைகளில் கவனம் செலுத்தாது தேர்தல் நடவடிக்கைகளில் அதிகாரிகள் கவனம் செலுத்த நேரிடும்.

அதனால், அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதிகளைப் பயன்படுத்த முடியாமல் போகக் கூடும். அதன் விளைவாக பிரதேசத்தின் அபிவிருத்தி முடங்க வாய்ப்புண்டு.

இவ்வாண்டில் பயன்படுத்தப்படாத நிதியை அடுத்து வரும் ஆண்டில், அடுத்து வரும் அரசாங்கத்திடம் கோரினால் அது கிடைக்கும் என எதிர்பார்க்க முடியாது.

எனவே, இதுவிடயத்தில் அடிமட்ட உத்தியோகத்தர் தொடக்கம் உயர்மட்ட அதிகாரிகள் வரை இவ்வாண்டு தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்னர் இவ்வாண்டில் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதிகளுக்கான வேலைத் திட்டங்களை உடனடியாக அமுலாக்கம் செய்வதில் கவனம் செலுத்த வேண்டும்.

பிரதேச செயலகங்களில் மாதாந்தம் இடம்பெறும் அபிவிருத்தி இணைப்புக் குழுக் கூட்டங்களில் அதிகாரிகள் அரச கூட்டுத்தாபன, திணைக்களத் தலைவர்கள், பிரதேச அரசியல்வாதிகள் முன்னிலையில் எடுக்கப்படும் தீர்மானங்களை எழுத்துருவில் மாத்திரம் வைத்திருக்காது அவற்றை அடுத்த கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர் அமுல்படுத்தியிருக்க வேண்டும்.

பணிகளை குறிப்பிட்ட நேரத்தில் செயற்படுத்துவதற்கு அதிகாரிகள் அவர்களது பணிக்கென நிர்ணயிக்கப்பட்ட நேரத்துக்கு வருகை தருவது முதலில் அவசியமானது. குறிப்பிட்ட நேரத்தில் பணிகளை தொடங்கும்போதே அதனை எதிர்பார்த்துவரும் பயனாளிகள் நன்மை பெறுவர்" என மேலும் தெரிவித்தார். (ஜ)

## தேர்தல் ஆணைக்குழு

### வாக்களிப்பதற்கு தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருத்தல் கட்டாயத் தேவைப்பாடொன்றாகும்

### தேருநர் இடாப்புக்களின் மீளாய்வு-2019

**பாதியளவில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் இடம்பெற்றதும் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் இடம்பெறாததுமான பிரதேசங்களில் வாக்காளர்களைப் பதிவு செய்வதற்காக தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பான விசேட அறிவித்தல்**

வட மாகாணத்தில் கீழ்க்காணும் கிராம அலுவலர் பிரிவுகளில் உண்மையாக வதிகின்றவர்களின் பெயர்களை 2019 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்படும் தேருநர் இடாப்பில் பதிவு செய்வதற்காக விண்ணப்பப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. இந்த விண்ணப்பப்பத்திரங்களை கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் ஏற்கனவே வதிந்துள்ளவர்கள் அந்தந்த கிராம அலுவலர் அலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ள முடியுமென்பதுடன் ஏனைய மாவட்டங்களில் வதிந்துள்ளவர்கள் அந்தந்த மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களிலிருந்து குறித்த விண்ணப்பப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இவ்விண்ணப்பப்பத்திரங்கள் 2019.07.22 ஆம் திகதியிலிருந்து 2019.08.15 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படுமென்பதுடன் விண்ணப்பப்பத்திரத்தை சரியாகப் பூர்த்தி செய்து ஏற்கனவே தாங்கள் வதிந்துள்ள பிரிவின் கிராம அலுவலரின் பரிந்துரையுடன் குறித்த மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் உதவிப் பதிவு அலுவலருக்கு 2019.08.15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கையளித்தல் வேண்டும். அத்துடன் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் வதிந்திருந்த தற்சமயம் தொழில்/ கல்வி/ வேறு காரணங்களுக்காக வெளிநாடுகளுக்கு சென்றுள்ளவர்களின் தகவல்களையும் குறித்த விண்ணப்பப்பத்திரத்தில் உட்சேர்த்து, அவரது நெருங்கிய உறவினரொருவர்/ அட்டார்னி அதிகாரியொருவரினால் கையொப்பமிட்டு 2019.08.15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கையளித்தல் வேண்டும்.

| மாவட்டத்தின் பெயர் | பிரதேச செயலாளர் பிரிவின் பெயர் | கிராம அலுவலர் பிரிவின் பெயர் | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | தெல்லிப்பளை | J/226 நகுலேஸ்வரம், J/233 காங்கேசன் துறை, J/234 காங்கேசன்துறை மத்தி, J/235 காங்கேசன் துறை தெற்கு, J/238 கட்டுவன், J/240 தென்மயிலை, J/241 வறுத்தலை விளான், J/242 குரும்பசிட்டி, J/243 குரும்ப சிட்டி கிழக்கு, J/244 வசாவிளான் கிழக்கு, J/245 வசாவிளான் மேற்கு, J/246 மயிலிட்டி வடக்கு, J/248 மயிலிட்டி தெற்கு, J/249 தையிட்டி வடக்கு, J/250 தையிட்டி மேற்கு, J/251 மைலிட் டித்துறை வடக்கு, J/252 பலாலி தெற்கு, J/253, பலாலி கிழக்கு, J/254 பலாலி வடக்கு, J/255 பலாலி வடமேற்கு, J/256 பலாலி மேற்கு. | | |
| கிளிநொச்சி | கண்டாவளை | KN/46 ஆனையிறவு | | |
| | பச்சிலைப்பள்ளி | KN/ 92 இத்தாவில் | KN/ 93 முகமாலை | KN/ 94 வேம்போடுகேணி |
| மன்னார் | முசலி | MN/ 153 முள்ளிக்குளம் | | |

www.elections.gov.lk எனும் தேர்தல் ஆணைக்குழு இணையத்தளத்திலிருந்தும் குறித்த விண்ணப்பப்பத்திரத்தை தரையிறக்கம் செய்து கொள்ள முடியும்.

தொலைபேசி இல : 011 286 8441, 42, 43
மின்னஞ்சல் முகவரி : info@elections.gov.lk
இணையத்தளம் : www. elections.gov.lk

தேர்தல் ஆணைக்குழு
சரண மாவத்தை, இராஜகிரிய,
22.07.2019

**மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்கள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு மாநகர | 011 236 9437 | அம்பாந்தோட்டை | 047 225 6248 | குருநாகல் | 037 222 2369 |
| கொழும்பு மாவட்ட | 011 236 9438 | யாழ்ப்பாணம் | 021 222 2655 | புத்தளம் | 032 226 5246 |
| கம்பஹா | 033 222 2047 | கிளிநொச்சி | 021 228 5664 | அநுராதபுரம் | 025 222 2551 |
| களுத்துறை | 034 222 2266 | மன்னார் | 023 222 2289 | பொலநறுவை | 027 222 2012 |
| கண்டி | 081 223 3187 | வவுனியா | 024 222 2311 | பதுளை | 055 222 2424 |
| மாத்தளை | 066 222 2422 | முல்லைத்தீவு | 021 206 1426 | மொனராகலை | 055 227 6315 |
| நுவரெலியா | 052 222 2325 | மட்டக்களப்பு | 065 222 4312 | இரத்தினபுரி | 045 222 2023 |
| காலி | 091 223 4028 | அம்பாறை | 063 222 4342 | கேகாலை | 035 222 2561 |
| மாத்தறை | 041 222 2305 | திருகோணமலை | 026 222 2304 | | |

**சரியாக பதிவு செய்து கொள்வதன் மூலம் வாக்களிக்க முடியுமென்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்**



முல்லைத்தீவு மாவட்ட பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்களுக்கான கருத்தரங்கு ஒன்று கடந்த வாரம் முல்லைத்தீவு மாவட்ட உள் ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஒழுங்குப்படுத்தலில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய நான்கு பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (9-350)


## 70 வது பிறந்த தின வாழ்த்துக்கள்



திருமதி. செல்லக்குட்டி நல்லம்மா
(தஞ்சம்)

எழுபது கடந்த
எம் தாயை
நூறு கடந்து
இன்று போல் என்றும்
இனிதாய் வாழ
வாழ்த்தி
மகிழ்கின்றோம்

சென்செபஸ்தியார் வீதி, கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த செல்லக்குட்டி நல்லம்மா (தஞ்சம்) அவர்களை பல்லாண்டு காலம் வாழ வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

சென்.செபஸ்தியார் வீதி,
கோண்டாவில் கிழக்கு;
கோண்டாவில்.
077 353 6755

வாழ்த்துவோர்:
பிள்ளைகள்–நேசகுமார், மலர்விழி, மதனா
மருமக்கள்– சசிகரன், ரவீந்திரன், கவிதா
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(9629)

# ஆடி மாத இராசி பலன்கள்

## 17.07.2019-17.08.2019

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## ஆரோக்கியத்தில் அக்கறை தேவை






விகாரி வருடம் ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் நீச்சம் பெற்று வலிமை இழந்திருக்கிறார். அவரோடு சூரியனும் இணைந்து மேலும் வலிமையிழக்கச் செய்கிறார். எனவே இந்த மாதத்தில் எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்தும், இறைவனைப் பூஜித்தும் செய்வது நல்லது. இருப்பினும் குருவின் பார்வை செவ்வாய் மீது பதிவதால், மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும்.

சகோதர ஸ்தானத்தில் புதன், சுக்கிரன், ராகு ஆகிய மூன்று கிரகங்களும் இணைந்துள்ளன. புத-சுக்கிர யோகம் இருப்பதால் உடன்பிறப்புகளின் உதவி ஓரளவே கிடைக்கும். சகோதர காரகன் செவ்வாய் நீச்சம் பெற்றும், அஸ்தங்கம் பெற்றும் இருப்பதுதான் இதற்கு காரணம். இடம், பூமி வாங்குவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தால் அதிலும் கொஞ்சம் தாமதம் ஏற்படலாம். இட விற்பனைக்காக ஏதேனும் முயற்சி செய்தால், அது துரிதமாக நடைபெறும். வழக்குகளில் நல்ல திசை திருப்பம் ஏற்படும். பூர்வீக சொத்துக்களை பிரித்துக் கொள்வதில் உடன் பிறந்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்காது.

மாதத் தொடக்கத்தில் அஷ்டமத்தில் குரு வக்கிர நிலையில் இருக்கிறார். அவரது பார்வை 2, 4, 12 ஆகிய இடங்களில் பதிகிறது. பார்க்கும் குருவைப் பலப்படுத்த வியாழக்கிழமை தோறும் குரு கவசம் பாடி குரு வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். 12ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால் சுபச்செலவுகள் அதிகரிக்கும். பயணங்கள் திருப்திகரமாக அமையும். வாகனம் வாங்கும் யோகம் கைகூடலாம்.

9ஆம் இடத்தில் சந்திரன், சனி, கேது இருப்பதால் பெற்றோர்களின் உடல்நிலையில் கவனம் செலுத்துவது அவசியம். மருத்துவச் செலவு அதிகரிக்கும். ஆன்மீகப் பயணம் செல்வீர்கள். தீர்த்த யாத்திரைகள் செய்யும் யோகமும் ஒருசிலருக்கு உண்டு.

இது ஆடி மாதம் என்பதால், ஆடி வெள்ளிக் கிழமைகளில் விரதமிருந்து அம்பிகை வழிபாட்டை முறையாக மேற்கொண்டால் கோடி நன்மை கிடைக்கும். ஆடி அமாவாசை அன்று முன்னோர்களை நினைத்து வழிபட்டால், முன்னேற்றப் பாதையை நோக்கி செல்லலாம்.

கடக, சிம்ம சுக்கிரனின் சஞ்சாரம்

ஜூலை 24 ஆம் திகதி கடகத்திற்கு சுக்கிரன் வருகிறார். ஓகஸ்ட் 17 ஆம் திகதி சிம்மத்திற்கு சுக்கிரன் செல்கிறார். தன சப்தமாதிபதியாக விளங்கும் சுக்கிரன் , கடகத்தில் சஞ்சரிக்கும் பொழுது, துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். தாய்வழி ஆதரவு திருப்தி தரும். கட்டடம் வாங்கும் முயற்சிக்கு மாற்று இனத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். தொழில் வளர்ச்சி உண்டு. சிம்மத்தில் சுக்கிரன் சஞ்சரிக்கும் பொழுது, பிள்ளைகளால் பெருமை சேரும். பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள்.

கடக புதன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் ஓகஸ்ட் 3 ஆம் திகதி கடக இராசிக்குச் செல்கிறார். அங்குள்ள சூரியனுடன் இணைந்து புத-ஆதித்ய யோகத்தை உருவாக்குவதால், கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். வெளிநாடு சென்று மேல்படிப்பு படிக்க வேண்டும் என்று விரும்பும் பிள்ளைகளுக்கு, அதற்கான முயற்சி செய்வது பலன் தரும். உத்தியோகத்தில் உயர்வு, ஊதிய உயர்வு போன்றவை எதிர்பார்த்தபடி வந்து சேரும்.

சிம்ம செவ்வாய் சஞ்சாரம்

ஓகஸ்ட் 10 ஆம் திகதி சிம்ம இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். இக்காலம் ஓர் பொற்காலமாகும். இராசிநாதன் பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, சகல பாக்கியங்களும் உங்களுக்கு வந்து சேரும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். தொழில், முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைக்கும். எதிரிகளின் பலம் குறையும்.

குரு வக்கிர நிவர்த்தி


அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான், விருச்சிகத்தில் வக்கிரகதியில் இருக்கிறார். அவர் ஓகஸ்ட் 7 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிறார். இப்பொழுது அதன் பார்வை பலம் உங்களுக்கு கூடுதலாகக் கிடைக்கும். எனவே பொருளாதார நிலை உயரும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் எதிர்பார்த்த பலன் உண்டு. வெளிநாட்டு முயற்சி கைகூடும்.

இம்மாதம் செவ்வாய்க்கிழமை தோறும் முருகப்பெருமானை வழிபட்டு வருவது நல்லது.

பெண்களுக்கான பலன்கள்

உங்கள் இராசிநாதன் செவ்வாய் நீச்சம் பெற்றிருப்பதால், இந்த மாதம் எதிலும்கொஞ்சம்கூடுதல்கவனம்தேவை. இல்லத்தில் உள்ளவர்களோடும், பணிபுரியும் இடத்தில் உள்ளவர்களுடனும் அனுசரித்துச் செல்வது நல்லது. பொருளாதாரம் ஏற்ற, இறக்கமாகவே இருக்கும். சுப விரயங்கள் அதிகரிக்கும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை குறையாமல் இருக்க விட்டுக்கொடுத்துச் செல்லுங்கள். பக்கத்து வீட்டாருடன் பகை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். பிள்ளைகளால் பெருமை சேரும். அவர்களுக்கு வேலை கிடைத்து உதிரி வருமானங்கள் கைக்கு வரலாம். அதே நேரம் அவர்களின் ஆரோக்கியத்திற்காக ஒரு தொகையைச் செலவிட வேணடியதிருக்கும். பணிபுரியும் பெண்களுக்கு வேலைச்சுமை, மேலதிகாரிகளின் நிர்ப்பந்தம் இருக்கலாம். எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைப்பதில் தாமதம் ஏற்படும். சஷ்டி விரதம் இருந்து சண்முகநாதரை வழிபடுங்கள்.

## வருமானம் திருப்தி தரும்






விகாரி வருடம் ஆடிமாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சுக்கிரன் தனாதிபதி புதனுடன் தன ஸ்தானத்தில் இணைந்திருக்கிறார். புதன் சொந்த வீட்டில் இருப்பதால் பொருளாதாரப் பிரச்சினை ஏற்படாது. பணத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும்.

அஷ்டமத்துச் சனியால் இதுவரை அவதிப்பட்டு வந்த நீங்கள், இனி அதன் கெடுபலன்களில் இருந்து விடுபட நேரிடலாம். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர். எதிரிகள் சரணடைவர். மதிப்பும், மரியாதையும் உயரும். குருவின் பார்வை பலம் உங்களுக்கு கைகொடுக்கப் போகிறது. குரு பார்வைக்கு அதிக பலன் உண்டு என்பதால், அதன் நேர் பார்வையான சப்தம பார்வை உங்கள் இராசியில் பதியும்பொழுது நினைத்த காரியங்கள் நினைத்தபடியே நடைபெறும். நீடித்த நோயில் இருந்து நிவா ரணம் பெறுவீர்கள்.

குடும்ப உறவில் ஏற்பட்ட விரிசல்கள் அகலும். உங்களுக்கு பணியில் தொல்லை தந்த ஊழியர்கள், இடமாறுதல் பெற்றுச் செல்வார்கள். வாங்கிய இடத்தில் வீடு கட்ட முடியவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு, இப்போது வீடு கட்டுவதற்கான வாய்ப்பு உருவாகப்போகிறது.

இரண்டில் இருக்கும் ராகு திரண்ட செல்வத்தைக் கொடுக்கும். அஷ்ட மத்தில் இருககும் கேது வக்கிரச் சனியோடு இணைந்து சஞ்சரிப்பதால், சென்ற மாதத்தில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்யப் புதிய வாய்ப்புகள் அடுக்கடுக்காக வரலாம். விரயா திபதி செவ்வாய் நீச்சம் பெற்றிருப்பதும் ஒரு வழிக்கு நன்மை தான். விரயங்கள் ஏற்பட்டாலும் அது சுபவிரயங்களா கவே மாறும். காது குத்துமுதல்கல்யாணம் வரை சுப விரயம் தான். வீடு கட்டுவது மட்டும் அல்லா மல், வீட்டை விரிவு செய்வது போன்ற சுபவிரயங்களை எல்லாம் செய்து கொள்ளலாம். 3இல் சூரியன் இருப்பதால் வழக்கு, விவகாரங்களில் வெற்றி கிடைக்கும். உத்தி யோகத்தில் மேலிடத்து நிர்ப்பந்தத்தின் காரணமாக தொடர்ந்து விடுப்பில் இருப்பவர்கள் இப்பொழுது மீண்டும்பணியில் சேர வாய்ப்பு உருவாகும்.

அஷ்டமத்துச் சனிக்குப் பரிகாரமாக அனுமன் கவசம் பாடி அனுமன் வழிபாட்டை மேற்கொளளுங்கள். ஆடி வெள்ளியில் அம்பிகை வழிபாட்டையும், அமாவசை அன்று முன்னோர் வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

கடக சுக்கிரனும், சிம்ம சுக்கிரனும்

ஜூலை 24 ஆம் திகதி கடக இராசிக்குச் சுக்கிரன் செல்கிறார். பிறகு ஓகஸ்ட் 17 ஆம் திகதி சிம்ம இராசிக்குச் சுக்கிரன் செல்கிறார். இராசிநாதனான சுக்கிரன் 3ஆம் இடமான கடகத்தில் சஞ்சரிக்கும் பொழுது, முன்னேற்றப் பாதையில் இருந்த தடைகள் அகலும். முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். சகோதர வர்க்கத்தினர்கள் ஒத் துழைப்போடு ஒரு நல்ல காரியம் இல் லத்தில் நடைபெறும். சிம்மத்தில் சுக்கிரன் சஞ்சரி க்கும் பொழுது, தாய்வழி ஆதரவு கிடைக்கும். புதிதாக வாகனம் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். பயணங்களால் பலன் உண்டு.

கடக புதன் சஞ்சாரம்

ஓகஸ்ட் 3 ஆம் திகதி கடக இராசியில் புதன் சஞ்சரிக்கிறார். உங்கள் இராசிக்கு 2, 5 ஆகியவற்றுக்கு அதிபதியானவர் புதன். தன பஞ்சமாதிபதி 3இல் சஞ்சரிப்பது யோகம்தான். தொழிலில் வருமானம் திருப்திகரமாக அமையும். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். உடன்பிறப்புகள் மூலமாக பிறருக்கோ அல்லது உடன்பிறப்புகளுக்கோ நீங்கள் ஏதேனும் பண உதவிகள் செய்திருந்தால் அது கேட்காமலேயே கிடைக்கும் நேரம் இது.

சிம்ம செவ்வாய் சஞ்சாரம்

ஓகஸ்ட் 10 ஆம் திகதி சிம்ம இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். இதுவரை நீச்சகதியில் இருந்த செவ்வரய், இப்பொழுது சுகஸ்தானத்திற்கு வருவது யோகம்தான். கல்யாண வாய்ப்புகள் கைகூடலாம். குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான சூழ்நிலை உருவாகும். தங்கு தடைகள் அகலும். வாங்கிய சொத்தை விற்பதன் மூலம் அதிக இலாபம் கிடைக்கும். அரசியல் பிரமுகர்களின் ஆதரவும், ஆதாயமும் உண்டு.

குரு வக்கிர நிவர்த்தி

இம்மாதம் சனி, செவ்வாய், சுக்கிரன் , வியாழன் ஆகிய நான்கு கிரகங்களும் பலம் இழந்திருக்கின்றன. இருந்தாலும் ஜனன காலத்தில் வக்கிர இயக்கத்தில்இருப்பவர்களுக்கு, இக்காலம் ஒரு பொற்காலமாகும். குறிப்பாக வக்கிர இயக்கத்தில் இருந்த குருபகவான், ஓகஸ்ட் 7 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிறார். அப்பொழுது குருவின் பார்வை பலம் அதிகமாகக் கிடைக்கும். உங்கள் இராசியைப் பொறுத்தவரை குருபகவான், உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு பகை கிரகமாகும். எனவே வக்கிர நிவர்த்திக்குப் பிறகு நிறைய மாற்றங்கள் உங்களுக்கு வரப்போகிறது. உத்தியோக முன்னேற்றம், புதிய வாகனம் வாங்கும் யோகம் போன்றவை ஏற்படும். கல்யாணப் பேச்சுவார்த்தை கை கூடும்.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் பெருமாளையும், லட்சுமியையும் வழிபடுவது நல்லது.

பெண்களுக்கான பலன்கள்

பொருளாதார விருத்தி அதிகரிக்கும் மாதம் இதுவாகும். புதிய திருப்பங்கள் பல ஏற்படும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களைவாங்கும்யோகம்உண்டு. பிள்ளைகளின் கல்யாணக் கனவுகள் நனவாகும். அவர்களின் கல்வி முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். குடும்பப் பிரச்சினையில் மூன்றாம் நபரின் தலையீட்டைத் தவிர்ப்பது நல்லது. தாய் மற்றும் சகோதர வர்க்கத்தினர் தக்க சமயத்தில் உதவி செய்ய முன்வருவர். கடன் பிரச்சினை ஓரளவு தீரும். பணிபுரியும் பெண்களுக்கு திடீர் இடமாற்றம் வரும். அது நல்ல மாற்றமாக அமையும். ஒருசிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு கை கூடும். எண்ணங்கள் எளிதில் நிறைவேற ஆடி வெள்ளியில் அம்பிகையை வழிபடுவது நல்லது. அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் சனீஸ்வரரையும் வழிபடுங்கள்.

(தொடரும்)

# மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்திற்கு வடமாகாண முன்னாள் முதல்வர் விஜயம்



(மட்டக்களப்பு)

உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாத தாக்குதலுக்கு இலக்காகி சேதமடைந்த மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்திற்கு வடமாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் விஜயம் செய்துள்ளார்.

குண்டுத்தாக்குதலினால் சேதமடைந்துள்ள மட்டக்களப்பு சீயோன் தேவாலயம் புனரமைப்பு செய்யப்பட்டு வரும் நிலையில் நேற்று முன்தினம் மாலை சி.வி.விக்னேஸ்வரன் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

சீயோன் தேவாலயத்தின் பாதிரியார் மற்றும் தொண்டர்களிடம் புனரமைப்பு பணிகள் குறித்தும் கேட்டறிந்துள்ளார்.

இதன்போது, தமிழ் மக்கள் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் சோமசுந்தரம், நிர்வாக உப செயலாளரும் கிளிநொச்சி மாவட்ட குழு உறுப்பினருமான ஆலாலசுந்தரம், கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் அன்ரனி கெப்ரியல், ஊடகம் மற்றும் செயற்றிட்ட ஆக்கத்திற்கான உப செயலாளர் த.சிற்பரன், இளைஞர் அணி இணைப்பாளர் கிருஸ்ணமீனன், மத்தியகுழு உறுப்பினர் இரா.மயூதரன், கணக்காளர் ராஜாதுரைசிங்கம் மற்றும் ஊடக உதவியாளர் சதீஸ் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி கல்முனை உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்தக்கோரி தமிழ் உணர்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட நடைபயணத்தில் சி.வி.விக்னேஸ்வரன் கலந்துகொண்டிருந்த வேளையில்தான் இக்குண்டுத் தாக்குதல் இடம்பெற்றிருந்தது.

இதனையடுத்து நடை பயணம் நிறுத்தப்பட்டிருந்ததுடன், சி.வி.விக்னேஸ்வரன் உடனடியாக மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு நேரில் சென்று காயப்பட்டவர்களை பார்வையிட்டு ஆறுதல் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# அரச நிறுவனங்களின் செலவீனங்களை குறைக்குமாறு நிதியமைச்சு சுற்றறிக்கை!

(கொழும்பு)

அரச நிறுவனங்களின் செலவீனங்களை குறைக்குமாறு அறிவுறுத்தல் விடுத்து நிதியமைச்சினால் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

நிதி அமைச்சின் செயலாளரின் கையொப்பத்துடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை குறித்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த சுற்றறிக்கை அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள், திணைக்கள பிரதானிகள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர், நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் அரசின் வருமானத்திற்கும் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து கவனம் செலுத்தி, அரச நிறுவனங்களின் வீண்விரயங்களை தவிர்க்கும் நோக்கில் நிதிகளை செலவிட வேண்டும் என குறித்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசேடமாக மின்சார விநியோகம், தொலைபேசி சேவை, எரிபொருள் கொள்வனவு உள்ளிட்ட ஏனைய சில சேவைகள் தொடர்பாக முறையான நிர்வாக நடவடிக்கைகளை கையாளுமாறும் அந்த சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஜ)

# மக்களுக்கு முக்கிய எச்சரிக்கை!

(கொழும்பு)

நிலவும் மழையுடனான வானிலையால் டெங்குக் காய்ச்சல் மீண்டும் பரவும் அபாயமுள்ளதாக, சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மேல், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் டெங்கு நோயாளர்கள் அதிகமாக பதிவாகுவதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் இதுவரை 29 ஆயிரத்திற்கும் அதிகமானோர் டெங்குக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் இதேவேளை, டெங்குக் காய்ச்சல் பரவுவதைத் தடுக்கும் வகையில் சிரமதானப் பணிகள், புகை விசிறும் நடவடிக்கைகள் உள்ளிட்ட பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் வைத்திய நிபுணர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன், பிரதி வெள்ளிக் கிழமைகளில் மாவட்ட செயலகங்களில் சிரமதானப் பணிகளை மேற்கொள்ளுமாறு எழுத்துமூலம் அறிவித்துள்ளதாகவும் டெங்கு ஒழிப்புப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ)

# பிள்ளையானுடன் மனோ சந்திப்பு





கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு கடந்த மூன்று வருடங்களாக கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் எனப்படும் சந்திரகாந்தன் சிறைவாசம் அனுபவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் எனப்படும் சந்திரகாந்தனை அமைச்சர் மனோ கணேசன் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

அவர் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை மட்டக்களப்புச் சிறைச்சாலையில் சந்திரகாந்தனை சந்தித்து கலந்துரை யாடியுள்ளார்.

அரசியல் நலன் விரும்பிகளும் நண்பர்களும் கேட்டுக் கொண்டதற்கிணங்கவே பிள்ளையானைச் சந்தித்ததாக அமைச்சர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது, பொதுவான நடப்பு அரசியல் தொடர்பாகவும் கடந்தகால எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடியதாகவும் அமைச்சர் மனோ தெரிவித்துள்ளார்.

ஜோசப் பரராஜசிங்கம்

## குறை'களை' பதிகம் 67

# ட்ரைவர் இறைவரல்லோ!

வயாவிளானிலிருந்து
யாழ்ப்பாணம் நோக்கிய பயணமது
நேர்முகத் தேர்வொன்றிற்கு
நேரத்துக்குச் சென்றுவிட வேண்டுமென்று
பலாலி வீதிவந்தேன்
பஸ்ஸிற்காய் காத்துநின்றேன்

வந்தது பஸ்...
ஒன்றல்ல, இரண்டு
வெள்ளை நிறத்திலது சிற்றூர்ந்து
சிவப்பு நிறத்திலது பேருந்து

ஒபத்துப் போட்டு
எதில் ஏறலாமென்று எண்ணுவதற்குள்
இழுத்து ஏற்றப்பட்டேன்
ஓ... அது வெள்ளை நிறத்தினது

காப்பெற் வீதியிலே பறந்தது பஸ்
இருப்பவர்கள் முகத்தில்
ஈயும் ஆடவில்லை
ஏனென்று எட்டிப்பார்க்க முற்பட்டேன்
அசுர வேகத்தில் என் தலையை
உரசிச் சென்றது சிவப்பு நிறத்தான்

தலைக்கு வந்தது
தலைப்பாகையுடன் சென்றது-எனும்
பழமொழி என்னை நிலை நிறுத்தியது

மைதானத்தில் மாணவர்
அஞ்சலோட்டம் நினைவுக்கு வந்தது
வெள்ளை நிறத்தான் முந்திமுட்ட
சிவப்பு நிறத்தான் தொட்டு ஓட
போட்டி, இதுவல்லவோ போட்டி
சரியான போட்டி

உள்ளே இருப்பவர்
உயிரைக் கையில் பிடித்திருக்க
யாருக்குப் போட்டி?
எதற்குப் போட்டி?

அன்பார்ந்த ட்ரைவர்களே!
ஆயிரம் ஆயிரம் உயிர்களை
காத்து சேவை செய்வதால்
நீர் இறைவர் ஆகிறீரல்லோ!

அற்ப சொற்ப ஆசைக்காய்
அசுர வேகமெடுத்து
அடுத்தவர்க்கு ஆபத்தைக் கொடுக்கலாமோ?

யாழ்ப்பாணம் இறக்கமென்ற குரல்கேட்டு
திடுக்கிட்டெழுந்து இறங்கினேன்

ஆடிக்காற்றுப்பட்ட தலைமுடி
கம்பியாய் நீட்டி நின்றது
பொலிஷ் செய்த சூ
புறம்போக்காய்க் கிடந்தது
இஸ்திரி போட்ட சேட்
சொல்லத் தேவையில்லை

நடந்தேன் நேர்முகத் தேர்வை நோக்கி...
வந்தபாதை வளைவில்
"வேகம் விவேகம் அல்ல"
"அதிவேகம் மரணத்தின் எல்லை"
என்ற பதாகை தொங்கியது
ஏனோ அந்த இறைவர் கண்களில்
இன்னும் அது படாதது ஏனோ?

மாவை.நா.கஜேந்திரன்

**அன்பு வாசகர்களே!**

இப்பகுதியில் வெளிவரும் குறை 'களை' பதிகத்திற்கு நீங்களும் உங்கள் பகுதிகளில் உள்ள குறைகளை பதிகமாக எழுதி ஆசிரியர், குறை 'களை' பதிகம், வலம்புரி, இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (ஆ-ர்)

# கேப்பாப்பிலவு காணிவிடுவிப்பு போராட்ட மக்களை சந்தித்த ஐ.நா.மனித உரிமைக்கான செயற்பாட்டுக்குழு

(முல்லைத்தீவு)

காணி விடுவிப்பைக்கோரி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கேப்பாப்பிலவு மக்களை, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக்கான செயற்பாட்டுக் குழுவினர் நேற்று சந்தித்து கலந்துரையாடினர்.

இக் கலந்துரையாடலில், கேப்பாப்பிலவு மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினை தொடர்பில் குறித்த குழுவினால் கேட்டறியப்பட்டன.

கலந்துரையாடல் தொடர்பில் கேப்பாப்பிலவு மக்கள் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதஉரிமைச் செயற்பாட்டாளர்கள் எம்மைச் சந்தித்து கலந்துரையாட லில் ஈடுபட்டனர்.

நாம் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லும் போராட்டத்தின் நியாயப்பாடு, போராட்டத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் எம்மிடம் கேட்டறிந்தனர்.

மேலும் எமது பிரச்சினைக்கு அவர்களால் உடனடியாக தீர்வு சொல்ல முடியாத நிலையிலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும், அமைப்புகளுடனும் கலந்துரையாடி எமக்குரிய தீர்வுகளைப் பெற்றுத் தருவதற்கு தாம் உறுதுணையாக இருப்பதாக கூறிச் சென்றுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (9)



## நிர்வாகத் தெரிவு

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாங்குளம் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நிர்வாகத் தெரிவு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. ஒட்டு சுட்டான் உதவி பிரதேச செயலாளர் எஸ்.ரமேஸ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கடந்த எட்டாண்டுகளுக்கு மேலாக குறித்த அபிவிருத்திச் சங்கத்தின் தெரிவுகள் இடம்பெறாமை தொடர்பாக வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்திற்கு மாங்குளம் பொது மக்களினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளை அடுத்து புதிய நிர் வாகத் தெரிவு இடம் பெற்றுள்ளது.

கடந்த தெரிவில் தலைவராக, அருளானந்தம், செயலாளராக செ.லவக்காந், பொருளாளராக யோ.கபிலன் உட்பட பதின் மூன்று பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (9-350)

# நலிவுற்றுப்போன நல்லாட்சியும் தமிழ் மக்களின் எதிர்காலமும்

## கருத்தாடல் நிகழ்வு



(நெளுக்குளம்)

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழர் தாயகப் பகுதிகளில் அரசியல் ரீதியில் பொதுமக்கள் படும் அவல நிலைகளை சுமந்த கருத்தாடல் நிகழ்வு நேற்று வவுனியா தனியார் விடுதி ஒன்றில் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஒழுங்குபடுத்தலின் கீழ் இக் கருத்தாடல் நிகழ்வில் தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர் த.வசந்தராஜா, தமிழர் மரபுரிமை பேரவையின் இணைத்தலைவர் லி.நவநீதன், அரசியல் ஆய்வாளர் நிலாந்தன், ஆகியோர் அரசியல் சமூக விழிப்புணர்வு கருத்து ரைகளை வழங்கினர்.

இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் வடக்கு மாகாண அமைச்சர்களான அனந்தி சசிதரன், ஐங்கரநேசன், முன் னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், லிங்கநாதன், தியாகராசா, இந்திரராசா, ஈரோஸ் அமைப் பின் தலைவர் துஸ்யந்தன் ஆகி யோர் உட்பட அரசியல் பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள், பொது மக்களும் கலந்துகொண்டனர். (9-299)

# யுத்தத்தில் உயிரிழந்தவர்களின் விபரங்களை திரட்ட நடவடிக்கை

(அக்கராயன்)

இறுதி யுத்தத்தின் போது உயிரிழந்தவர்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பான விபரங்களை திரட்டும் நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாக பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் மாதாந்த சபை அமர்வு கடந்த 10 ஆம் திகதி சபையின் சபாமண்டபத்தில் சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தலைமையில் இடம் பெற்றது.

அதில் தவிசாளர் சிறப்பாக தனது பிரேரணை மூலம் மேற் குறித்த விடயத்தை முன் வைத்து கருத்து தெரிவித்தார்.

இறுதி யுத்தத்தினால் எமது இனத்தில் பாரிய அளவு இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இது தொடர்பான சரியான தகவல்கள் தமிழ் தரப்பினரிடையே காணப்படவில்லை. இவ் விபரங்களை திரட்டுவதற்கும்கூட நாம் எவரும் இதுவரை முயற்சிக்கவில்லை. எனவே மக்கள் நமக்களித்த ஆணையின் பிரகாரம் எமது பிரதேச சபையின் எல் லைக்குட்பட்ட பகுதிகளில் இறுதி யுத்தத்தின் போது ஏற்பட்ட உயிரிழப்பு மற்றும் ஏனைய இழப்புகள் தொடர்பான விபரங்களை திரட்டுவது எனவும் இதற்கு அனைவரும் ஒத்து ழைக்க வேண்டும் என்றார். இங்கு கருத்து தெரிவித்த அனைத்து உறுப்பினர்களும் அதனை ஏற்றுக் கொள்வதுடன் பூரண ஒத்துழைப்புக்களை வழங்குவதாகவும் தெரிவித்துள்ளனர். (9-350)

# பச்சிலைப்பள்ளியில் கள் உற்பத்தியை விருத்தி செய்ய நடவடிக்கை

(அக்கராயன்)

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் காணப்படுகின்ற கள் உற்பத்தியை ஊக்கப்படுத்தி சந்தை வாய்ப்பை அதிகமாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் போத்தலில் அடைக்கப்பட்ட ஒரு பானமாக மாற்றுவதற்கான நிதி ஒதுக்கீட்டை பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் மீள்குடியேற்ற மற்றும் வடக்கு அபிவிருத்தி அமைச்சின் ஊடாக மேற் கொண்டுள்ளார்.

குறித்த பகுதியில் உற்பத்தி செய்யப்படுகின்ற மேலதிக கள்ளை போத்தலில் அடைப்பதற்காக 12 மில்லியன் நிதியை மீள்குடியேற்ற அமைச்சு வழங்க முன் வந்துள்ளது.

இதன் தொடர் நடவடிக்கையாக கடந்த வாரம் குறித்த அமைச்சினுடைய அதிகாரிகள் பச்சிலைப்பள்ளி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்திற்கு வருகை தந்து குறி த்த போத்தலில் கள் அடைக்கும் நிலையத்தை பார்வையிட்டதுடன் சாத்தியப்பாட்டு அறிக்கையையும் பெற்றுக்கொண்டனர்.

இங்கே பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்ரமணியம் சுரேன் மற்றும் உப தவிசாளர் கயன், உறுப்பினர்கள் , அமைச்சின் அதிகாரிகள் ,முகாமையாளர் எனப் பலரும் கலந்து கொண்டனர் . (9-350)

# புதுக்குடியிருப்பு கோம்பாவிலில் பன்றிகளால் அசௌகரியம்

(அக்கராயன் )

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு கோம்பாவில் கிராம அலுவலர் பிரிவில் அனுமதியின்றி வளர்க்கப்படும் பன்றிகளினால் கிராம மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். குறித்த பன்றிகள் ஒரு பண்ணைக்குரிய வழிமுறைகளில் வளர்க்கப்படாததன் காரணமாக பகலிலும் இரவிலும் ஊர் மனைகளுக்குள் நடமாடி பயிர்ச் செய்கைகளை அழித்து வருவதாகவும் தென்னங்கன்றுகளை நாசமாக்கி வருவதாகவும் பொது மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக கடந்த 18ஆம் திகதி நடைபெற்ற புதுக்குடியிருப்பு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்ட நிலையில் பன்றி வளர்ப்பு வாழ்வாதாரத்துடன் சம்பந்தப்பட்டிருப்பதன் காரணமாக கால்நடை அதிகாரிகள் நேரடியாகச் சென்று பன்றி வளர்ப்பு முறைகளைப் பார்வையிட்டு ஒரு பண்ணைக்குரிய ஒழுங்கு முறைகளை ஏற்படுத்தும்படியும் கிராமங்களுக்குள் பன்றிகள் நடமாடித் திரியாமல் இருக்க நடவடிக்கை எடுக்கும்படியும் இணைத்தலைமைகளினால்தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-350)



முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட பனிக்கன்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி சித்திபெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. பாடசாலை முதல்வர் தா. தயாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஆண்டி ஐயா புவனேஸ்வரன்,கல்வி அதிகாரிகள்,ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (9-281)

# தமிழ்மொழி புறக்கணிக்கப்படுகிறதா?



(குருமன்காடு)

வவுனியாவில் தமிழ்மொழி புறக்கணிக்கப்படுகிறதா? என பொது மக்கள் கவலை வெளி யிட்டுள்ளனர்.

தமிழர் தாய கத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த வவுனியா மாவட்டத்தில் தமிழ் மொழியை விட சிங்கள மொழிக்கு முதன்மையிடம் வழங்கப்பட்டு வருகிறது.

வவுனியாவில் ஒரு தனியார் நிறுவனம் பொருத்திய தொடரூந்து கடவையில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதியில் சிங்கள மொழிக்கு முன்னுரிமை வழங்கி எழுதியதோடு மட்டுமல்லாமல் தமிழ் மொழியை தவறாகவும் எழுதியுள்ளனர்.

இந்நிலையில் இதற்கு அனுமதி வழங்கிய தரப்புகள் அரசின் மொழிக் கொள்கையினை கவனத்தில் கொள்ளவில்லையா? என வவுனியா வாழ் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (9-250)

# புதிய பாணியில் தொடரும் பௌத்த மயமாக்கல்

## முல்லை.தண்ணீரூற்றுப் பகுதியில் முளையிட்டுள்ளதாக மக்கள் அச்சம்

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதியான, தண்ணீரூற்றுப் பகுதியிலும் புதிய பாணியில் பௌத்த மயமாக்கல் முளைவிடும் அபாயம் தோன்றியுள்ளதாக பொதுமக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.**



கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் முள்ளியவளை பொலிஸ் நிலையமானது தண்ணீரூற்றுப் பகுதியில் இயங்கி வந்தது. குறித்த பொலிஸ் நிலையம் இயங்கிய காணியினுள் பொலிஸாரால் புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டது.

இவ்வாறு தண்ணீரூற்றுப் பகுதியில் இயங்கிய பொலிஸ் நிலையம், முள்ளியவளைப் பகுதிக்கு கடந்த சில வருடங்களுக்கு முன்னர் இடமாற்றப்பட்டபோதிலும், அங்கு பொலிஸாரால் நிறுவப்பட்ட புத்தர் சிலை அகற்றப்படாமலேயே காணப்பட்டு வந்தது.

அதேவேளை பொலிஸார், மற்றும் சில சிங்கள மக்கள் இணைந்து குறித்த புத்தர் சிலை அமைக்கப்பட்ட இடத்தில், இவ்வாண்டு வெசாக் வழிபாடுகளிலும் ஈடுபட்டிருந்தனர்.

இந் நிலையில் தற்போது குறித்த புத்தர் சிலைக்கு அருகில் பௌத்த கொடிகளும் பறக்கவிட்டிருப்பதையும் காணக்கூடியதாகவிருக்கின்றது. இது பௌத்தமயமாக்கல் முளைவிடும் அபாய நிலையைத் தோற்றுவித்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் செம்மலை கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் இராணுவத்தினரால் ஆரம்பத்தில் சிறியளவில் புத்த வழிபாடு இடம்பெற்றபோதும், தற்போது பெரியளவில் புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளதுடன் பௌத்த துறவிகளும், சிங்கள மக்களும் அப்பகுதியை தற்போது தமது இடம் என உரிமை கோருகின்றனர்.

அதேவேளை முல்லைத்தீவு கற்சிலைமடுப்பகுதியில், இராணுவ முகாம் இருந்த காணியில் இராணுவத்தினரால் சிறியளவில் புத்த வழிபாடு செய்யப்பட்டு வந்த நிலையில், இராணுவம் வெளியேறியதையடுத்து, அக்காணியை தொல்லியல் திணைக்களம் ஆக்கிரமிப்புச் செய்திருக்கின்றது.

மேலும் கொக்குத் தொடுவாய் கோட்டைக்கேணிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில், மக்கள் மீள் குடியமர்த்தப்பட்ட காலத்தில் இராணுவ காவலரண் ஒன்று காணப்பட்டிருந்ததாகவும், அக்காவலரணை அண்டி புத்தர் சிலை ஒன்று அமைக்கப்பட்டிருந்ததாகவும், இராணுவத்தினர் அப்பகுதியிலிருந்து வெளியேறியபோதிலும் புத்தர் சிலை இன்றுவரை அவ்விடத்திலிருந்து அகற்றப்படவில்லையென அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

இது பௌத்தமயமாக்கலுக்கான ஒரு திட்டமாக இருக்கலாமென மக்கள் அச்சமும் வெளியிட்டிருந்தனர்.

இதைவிட பௌத்தர்களே இல்லாத பகுதியான வட்டுவாகல் சப்த கன்னிமார் ஆலயம் அமைந்துள்ள பகுதியில் இராணுவத்தினரால் சற்றுப் பெரியளவிலான விகாரை அமைக்கப்பட்டு வழிபாடுகள் இடம்பெறுகின்றன. இதற்கு அண்மையில் அப்பகுதி தமிழ் மக்கள் தமது எதிர்ப்பினை வெளியிட்டிருந்தனர்

அந்தவகையில் தண்ணீரூற்றுப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள புத்தர் சிலை வளாகமும், பௌத்த கொடிகளால் அலங்கரிக்கப்படுவதென்பது பௌத்த மயமாக்கலின் அபாயத்தை உணர்த்துவதாக பொதுமக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (9)

## முல்லை.பொது வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப்பிரிவை நுழைவாயிலுக்கருகில் அமைக்குமாறு கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு பொது வைத்தியசாலையின் நுழைவாயிலில் இயங்க வேண்டிய அதிதீவிர சிகிச்சைப் பிரிவு பிண அறைக்கு அருகில் இயங்குவதாக கரைதுறைப்பற்றின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் உயிர்நாடியான முல்லைத்தீவு பொது வைத்தியசாலை பல்வேறு குறைபாடுகளுடன் இயங்குகின்றது.

விபத்துகள் ஏற்பட்டு இவ் வைத்தியசாலைக்கு கொண்டு வரப்படுபவர்களுக்கு அவசர சிகிச்சை அளிப்பதற்கு வைத்தியசாலையின் முற்பகுதியிலேயே அதிதீவிர சிகிச்சைப் பிரிவு இயங்க வேண்டும்.

ஆனால் குறித்த பிரிவு பிண அறைக்கு அருகில் இயங்குகின்றது. இதனை முன்பக்கமாக கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முல்லைத்தீவு பொது வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை நிபுணர் ஒருவர் மட்டும் பணியில் இருப்பதனால் இவர் விடுப்பில் செல்லும்போது நோயாளர்கள் கிளிநொச்சி, வவுனியா, யாழ்ப்பாணம் வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்படுகின்றனர்.

சத்திர சிகிச்சை நிபுணர் இருவர் பணியாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (9-350)



**மன்னார் மறைசாட்சிகள் சமூகநல அமைப்பினால் மன்னார் தோட்டவெளியில் மறைசாட்சிகளின் 475 வது ஆண்டு நிறைவு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. பங்குத் தந்தை அருட்பணி அலெக்ஸ்சாண்டர் பெனோ சில்வா அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந் நினைவு விழாவில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை கலந்து கொண்டு அவரின் தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. (படம்:- மன்னார் செய்தியாளர்)**

## புகையிரதக் கடவை அமைக்கக்கோரி ஆர்ப்பாட்டம்




(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட திருமுறிகண்டி கிராம அலுவலர் பிரிவில் புகையிரத கடவையை அமைக்க கோரி நேற்று முன்தினம் மக்கள் புகையிரத வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருமுறிகண்டி அக்கராயன் பிரதான வீதியில் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை காணப்படுவதாகவும் குறித்த கடவையில் மின்னொளி சமிக்ஞைகள் இடப்பட்டு இருக்கின்ற போதும் அது இயங்கவில்லை.

குறித்த பகுதியில் சிறிய பாடசாலை இருக்கின்ற காரணத்தினால் அதிகளவான மக்கள் பயன்படுத்துகின்ற வீதியாக காணப்படுகிறது.

புகையிரதங்கள் வருகின்ற நேரத்தில் வீதியை தடுக்கக்கூடிய வகையில் புகையிரதக் கடவை ஒன்றை அமைத்து தங்களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரி இந்த கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

குறித்த இடத்தில் ஒன்று கூடிய அப்பகுதி மக்கள் கரைச்சி பிரதேச சபை தவிசாளர், புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர், பொலிஸார் ஆகியோரை சம்பவ இடத்திற்கு அழைத்து கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இறுதியில் சிவில் விமான சேவைகள் மற்றும் போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவுக்கான மகஜரை புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளரிடமும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கான மகஜரை கரைச்சி பிரதேச சபையினுடைய தவிசாளரிடமும் கிளிநொச்சி அரசாங்க அதிபர் மற்றும் கரைச்சி பிரதேச செயலாளருக்கான மகஜர்கள் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர்களுக்கான மகஜர்களை கிராம அலுவலர்களிடம் கையளித்தனர்.

அத்தோடு மக்களினுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்ற பொலிஸார் குறித்த விடயத்தில் கவனமெடுக்க வேண்டுமெனக் கோரி பொலிஸாரிடமும் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.(9-281)

## அக்கராயன் குடிநீர்த்திட்டத்தை விரிவுபடுத்துமாறு வேண்டுகோள்

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயனில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற குடிநீர்த் திட்டத்தினை விரிவுபடுத்தி கிராமஅலுவலர் பிரிவில் உள்ள அனைவருக்கும் குடிநீர் கிடைக்க வழியேற்படுத்த வேண்டும் என அக்கராயன் பொது அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஜூன்.ஜூலை மாதங்களில் குடிநீர் நெருக்கடியினை எதிர்கொள்கின்ற கிராமங்களில் அக்கராயனும் ஒன்றாகும்.

2011ஆம் ஆண்டுநீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் அக்கராயனில் குடிநீர்த் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் அக்கராயன் மத்தி.கிழக்கு. மேற்கு.கொங்காதரன் குடியிருப்பில் வாழ்கின்ற மக்களுக்கு குடிநீர் வழங்குவது என முடிவு எடுக்கப்பட்டது.

தற்போது 260 வரையான குடும்பங்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. இதே வேளை அக்கராயன் கிராம அலுவலர் பிரிவில் உள்ள 750 வரையான குடும்பங்களில் 433 குடும்பங்களுக்கு தனி வீடுகளுக்கு குடிநீர வழங்குவது என முடிவு எடுக்கப்பட்டு அவ்வேலைகள் குறையாகக் காணப்படுகின்றன.

அக்கராயன் ஆறு தாண்டி கிழக்குப் பகுதிக்கான குடிநீர் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். இந்நிலையில் இக்குடிநீர்த் திட்டத்தின் கிணறு அடிக்கடி நீர் வற்றுவதன் காரணமாக அக்கராயன் குளத்தில் இருந்து கிணற்றிற்கு நீரினை வழங்கி பின்பு சுத்திகரிக்கப்பட்ட குடிநீராக வழங்குவதற்கான வேலைகளை விரைவுபடுத்தவேண்டும். ஒட்டுமொத்தத்தில் அக்கராயன் குடிநீர்த் திட்டம் முழுமையான திட்டமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பது அக்கராயன் பொது அமைப்புகளின் கோரிக்கையாகும். (9-350)

# பாரதம்

## பிரதமர் மோடி ஒருவரே தமிழுக்கு சிறந்ததொரு அந்தஸ்தை வழங்குபவர்

### பொன்.இராதாகிருஷ்ணன் பெருமிதம்





தமிழுக்கு சிறந்ததொரு அந்தஸ்தை வழங்கக்கூடிய பிரதமரென்றால், நரேந்திர மோடி மட்டும் தான். எனவே தமிழக மக்கள் எதிர்க்கும் திட்டங்களை அவர் ஒருபோதும் கொண்டுவர மாட்டாரென முன்னாள் மத்திய இணையமைச்சர் பொன்.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சென்னை- வியாசர்பாடியில் செய்தியாளர்களை நேற்று முன்தினம் சனிக்கிழமை சந்தித்த அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். பொன்.இராதாகிருஷ்ணன் மேலும் தெரிவித்ததாவது, "மத்திய அரசு ஹிந்தியை திணிக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை.

ஹிந்தியை எதிர்க்கும் தி.மு.க. நடத்தும் பாடசாலைகளிலே ஹிந்தி மொழி கற்பிக்கப்படுகின்றன.

மேலும் தி.மு.க.ஆட்சியில் தான் அரச பாடசாலைகளை மூடக்கூடிய வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. தற்போது அதனை கல்வித்துறை அமைச்சர் செங்கோட்டையன் சரி செய்து வருகிறார்.

எனவே ஹிந்தி பற்றி பேசுவதற்கு தி.மு.கவுக்கு எந்த தகுதியும் இல்லை" என பொன். இராதாகிருஷ்ணன மேலும் தெரிவித்துள்ளார். (ஜ)

## ஐந்து மாநிலங்களுக்கு புதிய ஆளுநர்கள் நியமனம்

(டில்லி)

பீகார், மத்திய பிரதேச மாநிலம், நாகாலாந்து, மேற்குவங்காளம், திரிபுரா ஆகிய மாநிலங்களுக்கு புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்த 5 மாநிலங்களுக்கான புதிய ஆளுநர்கள் குறித்த விபரங்களை வெளியிட்டுள்ளது.

அதாவது, மத்தியபிரதேச மாநில ஆளுநர் ஆனந்திபென் பட்டேல் இடமாற்றம் செய்யப்பட்டு, உத்தரபிரதேச மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேபோன்று பீகார் ஆளுநர் லால்ஜி தாண்டன் மத்திய பிரதேச ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

உச்ச நீதிமன்ற சிரேஷ்ட சட்டத்தரணியும் ஜனதா தளம் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜெகதீப் தாங்கர் மேற்கு வங்காள ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் பா.ஜ.கட்சியின் மாநில தலைவரான ரமேஷ் பயஸ், திரிபுரா ஆளுநராகவும் உத்தரபிரதேச மாநிலத்தை சேர்ந்த பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் பாகு சவுகான், பீகார் ஆளுநராகவும் ஆர்.என்.ரவி நாகாலாந்து ஆளுநராகவும் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஜ)

## ஷீலா தீட்சித் மறைவுக்கு ராகுல்காந்தி இரங்கல்

(டில்லி)



உடல் நலக்குறைவால் நேற்று முன்தினம் மாலை உயிரிழந்த டில்லி முன்னாள் முதல்வர் ஷீலா தீட்சித் மறைவுக்கு ஜனாதிபதி, துணை ஜனாதிபதி, பிரதமர் மோடி, ராகுல் காந்தி உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

உடல் நலக்குறைவால் உயிரிழந்த டில்லி முன்னாள் முதல்வர் ஷீலா தீட்சித் (வயது 81) மறைவுக்கு ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த், துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு, பிரதமர் நரேந்திர மோடி, காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி மற்றும் பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "காங்கிரஸ் கட்சியின் அன்புக்குரிய மகளான ஷீலா தீட்சித் மறைவுச் செய்தியை அறிந்து அதிர்ச்சியடைந்துள்ளேன்.

அவரது மறைவால் துயருற்றிருக்கும், குடும்பத்தாருக்கும், டில்லி மக்களுக்கும் எனது இரங்கல்களை தெரிவித்துக் கொள்கிறேன்' என்று தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், டில்லி நிஜாமுதீன் பகுதியில் உள்ள இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள ஷீலா தீட்சித் உடலுக்கு முக்கிய பிரமுகர்களும்பல்வேறு தரப்பினரும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். (ஜ)

## பிலிப்பைன்ஸில் ...
## 9 பேர் பலி; 20 ...

(பிலிப்பைன்ஸ்)



பிலிப்பைன்ஸில் இடம்பெற்ற விபத்தில் 9 பேர் உயிரிழந்துள்ளதுடன், 20 பேர் படுகாயமுடைந்துள்ளனர்.

பிலிப்பைன்ஸின் தெற்கு பகுதியிலுள்ள பலோஜோன் நகரில் இருந்து சிபூ மாகாணம் நோக்கிப் பயணித்த லொறி கடந்த வெள்ளிக்கிழமை விபத்துக்குள்ளானது.

விபத்துக்குள்ளான குறித்த லொறியில் 11 முதல் 12 வயதுக்

## அமெரிக்கா- ஈரான் இடை...
## மசகு எண்ணெயின் விலை...

(வோஷிங்டன்)

சர்வதேச அரங்கில் மசகு எண்ணெயின் விலை அதிகரிக்கும் அபாயம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகியது. அது முதல் அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே தொடர்ந்தும் மோதல் நிலை நீடித்து வருகின்றது.

கடந்த மாதம் ஈரானின் வான்பரப்புக்குள் நுழைந்து உளவு பார்த்த அமெரிக்க ஆளில்லா விமானத்தை ஈரான் புரட்சிகர படை சுட்டு வீழ்த்தியது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையே பதற்றம் ஏற்பட்டது.

இந்நிலையில் பாரசீக வளைகுடாவில் ஹோர்முஜ் ஜலசந்தியில் அமெரிக்க போர்க்கப்பல் மற்றும் அதிலிருந்த இராணுவ வீரர்களை அச்சுறுத்தும் வகையில் பறந்த ஈரானின் ஆளில்லா

## சீனாவில் வெடி விபத்து 10பேர் பலி; 20பேர் படுகாயம்

(பீஜிங்)

சீனாவில் இடம்பெற்ற பயங்கர வெடி விபத்தில் 10 பேர் உயிரிழந்துள்ளதுடன், 20 பேர் படுகாயமடைந்துள்ளனர். சீனாவிலுள்ள எரிவாயு கிடங்கில் நேற்று முன்தினம் வெடி விபத்து ஏற்பட்டது.

இதன்போது குறித்த கிடங்கில் இருந்த பொருட்கள் சுமார் 3 கி.மீ. தூரத்திற்கு தூக்கி வீசப்பட்டதாக சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த வெடி விபத்தில் சிக்கி 20 பேர் படுகாயமடைந்த நிலையில் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன், ஐவர் இடிபாடுகளில் சிக்கியிருப்பதாகவும் இதையடுத்து அவர்களை மீட்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஜ)

## 7 மாத குழந்தை கொலை தாய்க்கு சிறைத்தண்டனை

லண்டனில் 7 மாதக் குழந்தையைக் கொலை செய்த தாய்க்கு ஆறு வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

லண்டனில் வசித்துவரும் இந்திய வம்சாவளியினைச் சேர்ந்தவர் ஷாலினா பத்மநாபா (வயது-33). இவர் பல வருடங்களாக தனது கணவருடன் சேர்ந்து கருத்தரித்தல் சிகிச்சை எடுத்துக்கொண்டதன்பலனாக ஷாகன் என்ற பெண் குழந்தையை பெற்றெடுத்தார். குறித்த குழந்தை குறை பிரசவத்தில் பிறந்ததாலும் பல்வேறு சிகிச்சைகள் தேவைப்பட்ட தாலும் 4 மாதங்கள் வரை வைத்தியசாலையிலேயே இருந்தது. குழந்தை வீடு திரும்பிய பின்னரும் குழாய் மூலம் உணவு செலுத்துதல் போன்ற தனிக்க வனம் செலுத்த வேண்டியிருந்தது.


குழந்தைக்கு 7 மாதம் ஆன நிலையில் திடீரென வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி உயிரிழந்தது.

உடற்கூற்றுப் பரிசோதனை யில் குழந்தையின் மண்டையோட்டில் 2 இடங்களில் எலும்பு முறி வும் கால்களில் எலும்பு முறிவும் இருந்தது தெரியவந்தது.

# வெளிநாடு



## ...லொறி விபத்து ...பேர் படுகாயம்



குட்பட்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயணித்துள்ளதாக பிலிப்பைன்ஸ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விபத்தில் படுகாயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில் விபத்து தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

## ...டையே நீடிக்கும் பதற்றம்; ...லை அதிகரிக்கும் அபாயம்

விமானத்தை அமெரிக்கா சுட்டு வீழ்த்தியது.

எனினும் இந்த தகவலை ஈரான் அரசாங்கம் முற்றாக மறுத்துள்ளது. தங்கள் நாட்டு விமானம் எதுவும் சுட்டு வீழ்த்தப்படவில்லை எனத் தெரிவித்துள்ளது. இவ்வாறானதொரு சூழலில் பாரசீக வளைகுடா பகுதியில் போர்ப் பதற்றம் நிலவுகிறது.

இதனால் சர்வதேச அளவில் மசகு எண்ணெயின் விலை உயரும் அபாயம் ஏற்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஏனெனில் சர்வதேச அளவில் வளைகுடா நாடுகளில் பெறப்படும் மசகு எண்ணெயை ஏற்றிச் செல்லும் 20 சதவீத கப்பல்கள் பாரசீக வளைகுடா பகுதி வழியாகவே பயணிக்கின்றன. (ஐ)

## ட்ரம்ப்-இம்ரான் இன்று சந்திப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பிற்கும், பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானிற்கும் இடையிலான சந்திப்பு இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

பாகிஸ்தானில் இயங்கி வரும் பயங்கரவாத அமைப்புகள் மீது, அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதில்லை எனக் கருதிய அமெரிக்கா, பாகிஸ்தானிற்கு வழங்கி வந்த பயங்கரவாத ஒழிப்பு நிதி உதவியை நிறுத்தியது.

பொய்களையும் வஞ்சகங்களையும் தவிர வேறொன்றையும் பாகிஸ்தான் வழங்கவில்லை என ட்ரம்ப் பகிரங்கமாக குற்றம் சுமத்தியிருந்தார்.

இதற்கிடையே, பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் நேற்று முன்தினம் அமெரிக்காவுக்குச் சென்றார். இந்தப் பயணத்தின் போது முதல் முறையாக அவர் ட்ரம்ப்பைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

ட்ரம்பும் இம்ரான்கானும் முதல்முறையாக அமெரிக்காவில் சந்தித்துப் பேசவுள்ளனர்.

அத்துடன் பாகிஸ்தானின் இரு இராணுவ உயர் அதிகாரிகள், பிரதமருடன் அமெரிக்கா சென்று இருப்பது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)





இதனைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் முதலில் உண்மையை மறைத்த ஷாலினா பின்னர், தனக்கு மிகவும் வலிமையான குழந்தைதான் வேண்டும் எனத் தெரிவித்தார். இதன் காரணமாகவே தான் குழந்தையைக் கொலை செய்ததாக இந்திய வம்சாவளியினைச் சேர்ந்த ஷாலினா பத்மநாபா தெரிவித்துள்ளார். (ஐ)

## இங்கிலாந்து எண்ணெய்க்கப்பல் சிறைபிடிப்பு; விடுவிக்குமாறு ஈரானிடம் வெளியுறவு அமைச்சர் வலியுறுத்து

(லண்டன்)

ஈரானால் சிறைபிடிக்கப்பட்டுள்ள எண்ணெய்க் கப்பலை உடனடியாக விடுவிக்குமாறு பிரித்தானியா கோரிக்கை விடுத்துள்ளது.

பிரித்தானிய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெரமிஹண்ட் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

குறித்த சம்பவமானது பிரித்தானியாவின் பாதுகாப்பு மற்றும் ஹோர்முஷ் நீரிணையில் சர்வதேச கப்பல் போக்குவரத்து குறித்து கேள்வி எழுப்பியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், பிரித்தானியக் கொடியுடன் சிறைபிடிக்கப்பட்டுள்ள எண்ணெய்க்கப்பலை விடுவிக்கத் தவறினால் ஈரான் கடுமையான விளைவுகளை சந்திக்கும் எனவும் பிரித்தானிய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெரமி ஹண்ட் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சிரியாவிற்கு மசகு எண்ணெய்



ஏற்றிச் சென்ற ஈரான் கப்பலை கிப்ரால்டார் என்ற இடத்தில் இங்கிலாந்து கடற்படை சிறைபிடித்தது.

இதனால் சீற்றமடைந்த ஈரான் பதிலடி கொடுக்கும் வகையில் இங்கிலாந்து எண்ணெய்க் கப்பலை சிறைபிடிக்க போவதாக எச்சரிக்கை விடுத்தது.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை பாரசீக வளைகுடாவில் ஹோர்முஷ் ஜலசந்தி பகுதியில் சென்று கொண்டிருந்த இங்கிலாந்து எண்ணெய்க் கப்பலை ஈரான் கடற்படை சிறை பிடித்துள்ளது.

ஈரான் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்ததாகவும் ஈரான் புரட்சிகர படையினரின் எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் தவறான வழியில் சென்றதால் சிறைபிடித்ததாகவும் ஈரான் தெரிவித்தது.

எனினும், குறித்த குற்றச்சாட்டுக்களை இங்கிலாந்தின் எண்ணெய்க் கப்பல் நிர்வாகம் மறுத்துள்ளது. சர்வதேச சட்டதிட்டங்களுக்குட்பட்டு பயணம் மேற்கொண்டதாக தெரிவித்துள்ளது.

ஸ்டெனா இம்பீரியோ எனப்படும் இங்கிலாந்து எண்ணெய்க் கப்பல் சவுதி அரேபியா துறைமுகத்திற்கு சென்று கொண்டிருந்த போது சிறை பிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பழைமையான பள்ளிவாசல் இஸ்ரேலில் கண்டுபிடிப்பு



கடந்த 1200 வருடங்களுக்கும் அதிகமான ஆண்டுகள் பழைமை வாய்ந்த பள்ளிவாசல் ஒன்றின் இடிபாடுகளை இஸ்ரேலில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நெகெவ் பாலைவனப் பிரதேசத்தில் ரகத் நகரில் இருந்தே இந்த பள்ளிவாசல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தப் பள்ளிவாசல் ஏழாம் அல்லது 8 ஆம் நூற்றாண்டுக்குரியதாக இருக்கலாம் என நம்பப்படுகின்றது.

செவ்வக வடிவிலான திறந்த வெளியைக் கொண்ட பள்ளிவாசல் என இது அறியப்பட்டுள்ளது. முஸ்லிம்களின் புனித நகரான மக்காவை நோக்கி, தெற்குப் பகுதியை பார்த்தபடி இந்தப் பள்ளிவாசலின் மிஃராப் அமையப் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலதிக ஆய்வுகளை இஸ்ரேல் ஆரம்பித்துள்ளதாகவும் வெளிநாட்டுச் செய்திகள் மேலும் குறிப்பிட்டுள்ளன. (ஐ)

## அனுமதியின்றி ஜல்லிக்கட்டு நடத்துவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

### சிவகங்கை மாவட்ட ஆட்சியர் எச்சரிக்கை

(சென்னை)

சிவகங்கையில் அனுமதியின்றி ஜல்லிக்கட்டு நடத்துபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சியர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில், அனுமதியின்றி ஆங்காங்கே ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெறுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்து வந்தன. மேலும் இதனை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பலர் கூறிவந்தனர்.

இந்நிலையில், அனுமதியின்றி ஜல்லிக்கட்டுப் போட்டி நடத்துபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ஜெயகாந்தன் அறிவித்துள்ளார்.

இது குறித்து மாவட்ட ஆட்சியர் வெளியிட்ட அறிக்கையில், "கடந்த ஜூன் முதலாம் ஆம் திகதி



முதல், மாநில அளவில் எவ்வித ஜல்லிக்கட்டுகளும் நடைபெற அனுமதிக்கக்கூடாது என தமிழக அரசு உத்தரவிட்டுள்ள நிலையில், சிவகங்கை மாவட்டத்தில் மே மாதம் 31 ஆம் திகதிக்குப் பின்னர் ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு, வடமாடு, எருதுவிடும் விழா ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு அனுமதி கிடையாது.

ஆனால் இந்த உத்தரவையும் மீறி சிலர் மஞ்சுவிரட்டு விழாவை நடத்தி வருகின்றனர். எனவே இனி அனுமதியின்றி ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு ஆகிய விழாக்களை நடத்துபவர்களுக்கு பொலிஸார் மூலம் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட மக்கள், நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு தரவேண்டும் எனவும் மாவட்ட ஆட்சியரின் அறிக்கையில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

# சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணங்களை வழங்க நடவடிக்கை

## பணிப்பாளர் சமிந்த பத்திராஜ தகவல்

(கொழும்பு)

சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு விரைந்து நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக 20 மில்லியன் ரூபாய் நிதியை தேசிய பாதுகாப்பிற்கு பொறுப்பான நிதியம் வழங்கியுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் சமிந்த பத்திராஜ தெரிவித்தார்.

அத்துடன், அனர்த்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்காக ஒரு மில்லியன் ரூபாய் நிதி மாவட்ட செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அனர்த்தத்தால் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நட்டஈடு வழங்கப்படவுள்ளதுடன், பாதிக்கப்பட்ட வீடுகளுக்காக முதற்கட்டமாக 10,000 ரூபாய் நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

இதற்காக 90 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# நீரோடையில் தவறிவீழ்ந்து முதியவர் பரிதாபமாக பலி



(மஸ்கெலியா)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டிரவுன்சிக் தோட்டப் பகுதியில் 70 வயதுடைய நபர் ஒருவர் நீரோடையில் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக கிளாங்கன் வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன். இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ரியூனியன் தீவை நோக்கிச் செல்லும் இலங்கை குடியேற்றவாசிகளின் படகு

(கொழும்பு)

இலங்கையிலில் இருந்து சட்டவிரோத குடியேற்றவாசிகள் என சந்தேகிக்கப்படுபவர்களை ஏற்றிக் கொண்டு படகு ஒன்று வந்து கொண்டிருப்பதாக ரியூனியன் தீவு எச்சரிக்கை விடுத்துள்ளது. ரியூனியன் ஊடகச்செய்திகள் இதனைத் தெரிவித்துள்ளன.

இலங்கையிலிருந்து கடந்த 12 ஆம் திகதி படகு ஒன்று புறப்பட்டுச் சென்றுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது என்றும் அது. ரியூனியன் தீவை நோக்கிச் செல்லக் கூடும் என்றும். இலங்கை அதிகாரிகளால் எச்சரிக்கைத் தகவல் அளிக்கப்பட்டது.



எனினும். இந்தப் படகை தாம் இன்னமும் கண்டுபிடிக்கவில்லை என்றும். அந்தப் படகு ரியூனியன் தீவை நோக்கியே பயணிக்கிறது என்பதும் உறுதி செய்யப்படவில்லை என்றும் அந்தச் செய்திகள் மூலம் தெரிய வந்துள்ளன. (ஐ)

# சுவிசில் இலங்கையருக்கு எதிராக கொலை வழக்கு!

(சூரிச்)

சுவிட்சர்லாந்தின் சோலோதுர்ன் ரயில் நிலையத்தில் 2016 ஆம்ஆண்டு இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பான நீதிமன்ற விசாரணை ஆரம்பமாகியுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் இலங்கையர் ஒருவருக்கு எதிராகக் கொலை, கொலை முயற்சி. கொலை மிரட்டல் உள்ளிட்ட பிரிவுகளில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த 2016 ஆம் ஆண்டு சுவிட்சர்லாந்தின் சோலோதுர்ன் ரயில் நிலையத்தில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றிருந்தது. இந்தச் சம்பவத்தில் 29 வயது இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டார். துப்பாக்கிச் சூட்டு காயங்களுக்கு இலக்கான குறித்த இளைஞர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் 49 வயது இலங்கையர் ஒருவரை அந்நாட்டுப் பொலிஸார் கைது செய்திருந்தனர். மேலும் இந்தச் சம்பவத்தின் போது சந்தேகநபர், பொது மக்கள் மீதும் துப்பாக்கியை காட்டி மிரட்டியதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்நிலையிலேயே, கொலை சம்பவம் தொடர்பான வழக்கில் நீதிமன்ற விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனினும், வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும் திகதி இன்னும் வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் பலி

(ரத்கம)

ரத்கம - கெகில்ல மண்டிய சந்தியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் கராபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னரே உயிரிழந்துள்ளார். வெவதெனிய - கபுமுல்ல பகுதியை சேர்ந்த 26 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

யாரால் இந்தத் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது என இதுவரையில் இனங்காணப்படவில்லை.

சம்பவம் தொடர்பில் ரத்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கலியுகம்

அப்பா பிள்ளைகளைப் பார்த்து சொல்லுகின்றார் கடைக்குப் போய் பேப்பர் வாங்கிக் கொண்டு வா! என்று. அதற்கு வேற ஆளைப் பாருங்க என்று சொல்லி விட்டு போகிறான் பையன்.

என்னங்க உங்களுடைய பிள்ளையே உங்களிடம் இப்படி சொல்லிவிட்டு போறானே என்று கேட்டார். அவனைச் சொல்லி குற்றமில்லை. கலி முத்திப் போய் விட்டது. அதுதான் அப்படி சொல்லி விட்டுப் போறான் என்றார் அப்பா.

இந்த யுகங்களைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்களோ தெரியவில்லை. இருந்தாலும் அதைப்பற்றி என்ன சொல்கின்றார்கள் என்று தெரிந்து கொள்வதில் தப்பில்லை. இப்ப வருடம், மாதம், திகதியை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. ஏனென்றால் நாம் இருப்பதற்குள்ளே அதெல்லாம் வந்து வந்து போகின்றது. யுகங்கள் அப்படி இல்லை.

போன வருடம் உன்னை புதுக்கோட்டையிலே பார்த்தேன் என்று சொல்ல முடியமா? எந்தெந்த யுகங்கள் எத்தனை ஆண்டுகள் இருக்கும் என்பதற்கு மேதாதிதி என்பவர்கள் தான் முதலில் வியாக்கியானம் கொடுத்தார். அவருடைய கணிப்பின்படி.

கிருதயுகம் 4800 வருடம், கிரேதாயுகம் 3600 வருடம், துவாபரயுகம் 2400 வருடம், கலியுகம் 1200 வருடம்.சாஸ்திர ரீதியாக ஆராய்ச்சி செய்த வேறு சில பேர் வேற மாதிரியாகவும் கணக்குச் சொல்றார்கள். அவர்கள் கணக்குப்படி வருடம் 1000, 2000, 4000 என்று வருகின்றது.

எது எப்படியோ இருந்துவிட்டுப் போகட்டும். சுமாராக அறுபது வருடத்திற்கு முன்னாடி பரமகம்ஸ ஸ்ரீராஜ நாராயண்ஷட் சாஸ்திரி என்பவர் ஒரு நூல் எழுதினார். அவர் நிறைய ஆராய்ச்சியெல்லாம் செய்து என்ன சொல்லியிருக்கின்றார் என்றால் 1943 ஓகஸ்ட் முதல் திகதி கலியுகம் முடிந்து கிருதயுகம் பிறந்து விட்டது என்றார். பாகவத சுலோகப்படி (12.2.24)–சூரியன், சந்திரன், குரு, பூச நட்சத்திரங்கள் எல்லாம் சமகாலத்திலே ஒரே இராசியிலே பிரவேசிக்கின்ற போது அல்லது சந்திரன், சூரியன், குரு, இந்த மூன்றும் பூச நட்சத்திரத்திலே ஒரே இராசியிலே ஒரே நேரத்திலே சேர்கின்ற போது கலியுகம் முடிந்து கிருதயுகம் ஆரம்பமாகும்.

அந்த பூரணயோகம் 1943 ஓகஸ்ட் முதல் திகதி வந்து விட்டது. அதுதான் இவர் சொல்லுகின்ற கணக்கு. இருந்தாலும் கிருதயுகத்தின் முழுப்பலனும் 100 வருடம் ஆகும்.

கிருதயுகத்திலே மக்களுக்கு நோய் வராதாம். அவர்கள் கோரிக்கை எல்லாம் பூர்த்தியாகும். மக்கள் ஆயுள் 400 வருடமாம். அதன்பின் மறுபடியும் யுகம் மாற மாற தர்மத்தின் அளவு குறைய குறைய ஆயுளும் குறையுமாம்.

கிருதயுகத்திலே ஒரே மதம்! ஒரே கடவுள்! என்ற நிலைமைக்கு உலகம் வந்து விடுமாம். தருமர் காலத்திலே நடந்த கதை ஒன்று உண்டு. அது துவாபர யுகத்தின் கடைசிக் கட்டம்.

அப்போது ஒருத்தன் தன்னுடைய நிலத்தை இன்னொருவனுக்கு விற்றான். நிலத்தை வாங்கியவன் அதிலே உழவு செய்ய ஆரம்பித்தான்.

நிலத்தை தோன்றிய போது அதிலே ஒரு புதையல் கிடைத்தது. உடனே அந்தப் புதையலை எடுத்துக் கொண்டு அவன், நிலத்தை தன்னிடம் விற்றானே, அவனிடம் போகிறான்.

''இதோ பாருங்க இந்தப் புதையல் உங்களுக்குத் தான் சொந்தம். நீங்கள் நிலத்தைத் தான் என்னிடம் விற்றீர்கள். புதையலை இல்லை. அதனால் புதையலை எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றார். ஆனால் நிலத்தை விற்றவன் அதை வாங்க மறுத்து விட்டான். "இந்தப் புதையல் உனக்குத் தான் சொந்தம். எப்ப நிலத்தை விற்று விட்டேனோ அப்பவே இதையும் விற்று விட்டதாகத் தான் அர்த்தம்'' என்றான்.

இரண்டு பேரும் தருமரிடம் போய் தங்களுடைய விவகாரத்தைச் சொல்லுகிறார்கள். என்ன தீர்ப்பு சொல்லுவது என்று தெரியாமல் தருமர் முழிக்கின்றார்.

கடைசியிலே சரி ஒரு பத்து நாள் கழித்து வந்து பாருங்கள் என்று சொல்லி அனுப்பி வைத்தார். அதற்குள்ளே என்ன ஆகி விட்டது என்றால் கலியுகம் பிறந்து விட்டது. அதன்பின் இரண்டு பேரும் வந்தார்கள்.

நிலத்தை விற்றவன் புதையல் எனக்குத்தான் சேரவேண்டும். ஏனென்றால் நான் நிலத்தை மட்டும் தான் விற்றேன் என்றான். வாங்கியவன் அதெல்லாம் கிடையாது எப்ப நிலத்தை விற்றாயோ அப்பவே புத்தயலையும் விற்று விட்டாய் என்று தான் அர்த்தம் என்றான்.

தருமர் சிரிக்கிறார். கலியுகம் பிறந்து விட்டது என்பதை உணர்கிறார். இப்பவும் பாருங்கள், ஒருவர் கத்தரி விதை வாங்கி வந்தார். அதை அவருக்கு மிகவும் வேண்டிய நண்பரிடம் கொடுத்தார். உங்கள் தோட்டத்தில் போடுங்கள் என்றார்.

காசு எவ்வளவு என்றார் இவர். அதெல்லாம் ஒன்றும் வேண்டாம் என்று அவர் போய் விட்டார். இவர் கத்தரி போட்டு நன்றாக காய்த்து விட்டது. விதை கொடுத்தவர் ஒரு நாள் தற்செயலாக இவரைப் பார்க்க வந்தார். "கத்தரி எப்படி'' இருக்குது என்றார். நன்றாக காய்த்திருக்கிறது என்றார்.

''ஒரு நான்கு காய் கொடுங்கள்'' கொண்டு போய் குழம்பு வைக்கச் சொல்லுகிறேன் எங்கள் வீட்டிலே என்றார்.

"ஐயய்யோ கத்தரிக்காய் எல்லாம் முத்திப் போய் விட்டது. என்ன செய்வது?'' என்றார். இவர் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு திரும்பி வந்து கொண்டிருந்தார் தெருவிலே. வழியிலே அந்த ஊர்க்காரரை பார்த்து ஏங்க அதோ அந்த வீட்டுத் தோட்டத்திலே கத்தரிக்காய் எல்லாம் முற்றிப் போய்விட்டதா என்று விசாரித்தார். உண்மையை தெரிந்து கொள்ளலாம் என்று. அதற்குஅவர் "காய் முற்றவில்லை கலி முற்றிப் போய்விட்டது" என்றார்.

# முல்லை.நெய்தல் இயற்கை உரத் தயாரிப்பு தேசிய ரீதியில் மூன்றாமிடம்-30 இலட்சம் பரிசு




(பனிக்கன்குளம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் சிரமசக்தி மக்கள் கருத்திட்டத்தின் கீழ் கள்ளப்பாடு தெற்கு கிராம அலுவலர் பிரிவில் இளைஞர்களால் செயற்படுத்தப்பட்ட நெய்தல் இயற்கை உரத் தயாரிப்புத் திட்டம் தேசிய ரீதியில் மூன்றாம் இடத்தை பெற்று 30 இலட்சம் ரூபாய் பணப்பரிசை பெற்றுள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற இத் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் 21 திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டன.

இந்தத் திட்டங்களில் மாவட்ட ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட கள்ளப்பாடு தெற்கு கிராம அலுவலர் பிரிவில் உதயம் இளைஞர் கழகத்தினர் மேற் கொண்ட நெய்தல் இயற்கை உரத்தயாரிப்புத் திட்டமானது தேசிய ரீதியில் மூன்றாம் இடத்தை பெற்று 30 இலட்சம் ரூபாய் பணப்பரிசை பெற்றுக் கொண்டுள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட இளைஞர் சிரம சக்தி மக்கள் கருத்திட்டத்தில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு குருநாகல் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முல் லைத்தீவு மாவட்டத்தின் குறித்த திட்டம் மூன்றாம் இடத்தை பெற்றதாக அறிவிக்கப்பட்டு 30 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலைகள் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர்களிடம் வழங்கப்பட்டன.

குறித்த இந்தத் திட்டத்தில் பணப் பரிசிலை முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வடமாகாண பணிப்பாளர் சரத் சந்திரபால மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முல்லைத்தீவு மாவட்ட அலுவலக அதிகாரிகள், திட்டத்தை நடைமுறைப்படுத்திய குறித்த பிரதேசத்தின் இளைஞர் சேவை அதிகாரி ரீ.ரதீசன், குறித்த பகுதி கிராம அலுவலர், இளைஞர் கழகத்தினுடைய இளைஞர்கள் இந்தப் பரிசுகளை பெற்றுக் கொண்டனர்.

இதேவேளை மாவட்ட ரீதியான வெற்றிக்கான பரிசுகளாக முல்லைத்தீவு மாவட்ட ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்ற குறித்த நெய்தல் திட்டத்திற்கு 5 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலையும் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட மாந்தை கிழக்கு பிரதேசத்திற்கு 4 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலையும் மூன்றாம் இடத்தை பெற்றுக் கொண்ட துணுக்காய் பிரதேசத்திற்கு 3 லட்சம் ரூபா பெறுமதியான காசோலையும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (9-281)

# மூன்று மாதங்களின் பின்னர் மீண்டும் கட்டுவாப்பிட்டிய ஆலயத்தில் திருப்பலி



(நீர்கொழும்பு)

கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல்களில் பெரிதும் பாதிக்கப்பட்ட நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டிய புனித செபஸ்தியார் ஆலயத்தில் கடந்த 3 மாதங்களின் பின்னர் நேற்று மீண்டும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மக்களின் வழிபாட்டுக்காக ஆலயம் திறக்கப்பட்டது.

கொழும்பு மறை மாவட்டப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையினால் நேற்றுக் காலை 8 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. இதன்போது குண்டுத்தாக்குதலில் பாதிக்கப்பட்ட பலர் கலந்து கொண்டனர்.

கட்டுவாப்பிட்டிய தேவாலயத்தில் மாத்திரம் சுமார் 105 பேர் உயிரிழந்ததுடன், பலர் படுகாயமடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க. யானைச் சின்னத்தில்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் அமைக்கப்படும் கூட்டணியில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு எந்த வேட்பாளர் களமிறங்கினாலும் அவர் யானைச் சின்னத்திலேயே போட்டியிட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி கடந்த 25 வருடங்களாக ஜனாதிபதி ஒருவரை பெற்றுக் கொள்ளவில்லையெனவும் இதனால், கட்சியும், ஆதரவாளர்களும் அநாதரவாக காணப்படுவதாகவும் அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை வெற்றி கொள்ள முடியுமான தலைவர் ஒருவரை ஐக்கிய தேசியக் கட்சி களத்தில் இறக்கும் எனவும் இதற்காக கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலை வெற்றி கொள்ள பாரிய கூட்டணியொன்றை அமைப்பதாகவும் தேர்தலில் வெற்றி கொண்டு நாட்டை அபிவிரு த்தியை நோக்கிக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# தமிழர்களுக்கான தீர்வை வழங்குவதற்கு இந்தியா முனைப்புடன் செயற்படுகிறது

## டக்ளஸ் எம்.பி. தெரிவிப்பு

(அக்கராயன்)

தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதில் இந்தியா பெரும் விருப்பு கொண்டுள்ளது என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், மாகாண சபையினை பலப்படுத்துவதன் மூலம் தமிழர்கள் தீர்வுகளை பெற்றுக் கொள்ளலாம் என தொடர்ச்சியாக நாம் வலியுறுத்தி வருகின்றோம். எமது நீண்டகால அனுபவத்தின் படி அதனை வெளிப்படுத்தி வருகின்றோம். எமக்கான தீர்வுகள் பல தடவைகள் ஏற்பட்டன. குறிப்பாக இலங்கை, இந்தியா ஒப்பந்தத்தினை சரியாகப் பயன்படுத்தி இருக்கலாம். தமிழ்த் தலைமைகள் அச்சந்தர்ப்பத்தில் தவறிழைத்து விட்டன. அண்மைக் காலத்தில் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் வழங்க வேண்டும் என்பதில் இந்தியா முனைப்புடன் செயற்படுகின்றது என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. இலங்கைத் தீவிலும் அண்மைக் காலமாக மகிந்த ராஜபக்ஷவும்தான் நிறுத்துகின்ற வேட்பாளர் தமிழ் மக்களின் பிரச்சினைகளை அறிந்தவராக இருப்பார். தீர்வுகளை வழங்குவார் எனக் கூறி வருகின்றார். ஆனால் தமிழர்களின் பிரச்சினைகள் தீரக் கூடாது என்பதில் சுயலாப தமிழ் அரசியல்வாதிகளே காரணமாக உள்ளனர் எனவும் மேலும் தெரிவித்தார். (9-350)

# சர்வதேச இராஜதந்திரிகளூடாக அரசாங்கத்திற்கு காலஅவகாசத்தினை வழங்க வேண்டும்-சிவசக்தி ஆனந்தன் எம்.பி



(நெளுக்குளம்)

சர்வதேச இராஜதந்திரிகளூடாக அரசாங்கதத்திற்கு கால அவகாசத்தினை வழங்க தமிழ் தேசிய கூட்டமைப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று "நலிவுற்றுப்போன நல்லாட்சியும் தமிழ் மக்களின் எதிர்காலமும்" எனும் கருத்தாய்வு நிகழ்வு மன்னார் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. அதில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

ஆட்சியில் இருக்கக்கூடிய இந்த அரசாங்கம் தமிழ் மக்களின் பிரதிநிதிகளான 14 பேருடன் இயங்கிக்கொண்டிருக்கின்றது. இந்த நாட்டில் அரசியல் குழப்பம் வரும்போது எமது அரசியல் தலைவர்களும் சட்டத்தரணிகளும் இரவு பகலாக நீதிமன்றத்திலே போராடி தற்போதுள்ள பிரதமரின் பதவியை பெற்றுக்கொடுத்திருக்கின்றனர்.

இந் நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பானது கொழும்பில் உள்ள அத்தனை இராஜதந்திரிகளையும் அழைத்து நான்கரை வருடங்களாக நாம் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கிய போதிலும் இந்த அரசாங்கம் அரசியல் தீர்வில் இருந்து அத்தனை விடயங்களிலும் எம்மை ஏமாற்றியிருக்கின்றது. இன்னும் மூன்று மாதங்களில் ஜனாதிபதி தேர்தலுக்குப்போக இருக்கின்றார்கள். இந் நிலையில் நாங்கள் தொடர்ந்தும் இந்த அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்க முடியாது இருக்கிறது. எனவே ஒரு வாரத்தில் அல்லது ஒரு மாதத்தில் எமது மக்களின் அன்றாட பிரச்சினைகளை தீர்க்காது விட்டால் நாம் எமது ஆதரவை நீக்கிக்கொள்ளவுள்ளோம் என்கின்ற செய்தியை சொல்ல வேண்டும்.

இந் நிலையில் அவர்களுக்கும் அடுத்த ஜனாதிபதியாக யாரைக் கொண்டு வருவது என்ற எதிர்பார்ப்பு இருக்கின்றது. அது தற்போதைய ரணிலா? அல்லது மகிந்த தரப்பில் உள்ள ஒருவரை கொண்டு வருவதா? என்ற நிலை அமெரிக்கா, இந்தியா, சீனா போன்ற நாடுகளுக்குள்ளது.

ஜனாதிபதி தேர்தலை பொறுத்தவரையில் வடக்கு-கிழக்கில் உள்ள சிறுபான்மையினரின் வாக்கே தீர்மானிக்கும் சக்தி என்பதால் சர்வதேசமும் தமக்கு தேவையாக உள்ள தற்போதைய அரசை தக்க வைக்க வேண்டும் என்பதால் இந்த அரசாங்கத்தினை வைத்து தீர்க்கக்கூடிய பிரச்சினைகளை தீர்க்கும்.

இன்று தொல்லியல் திணைக்களம் வடக்கு- கிழக்கில் எமது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அத்தனை இடங்களையும் சின்னங்களையும் வைத்துள்ளது. இந்த திணைக்களத்தின் அமைச்சர் ஐக்கிய தேசியக்கட்சியின் அரசிற்கு கீழ்தான் உள்ளார். இவ்வாறு இருக்கையில் இற்றைவரை இந்த அமைச்சரை இவ்வாறான விடயங்களில் தலையிடுவதை நிறுத்த முடியாமல்தான் உள்ளது.

ஆகவே தற்போதுள்ள ஒரு சந்தர்ப்பம் சர்வதேச இராஜதந்திரிகளை அழைத்து அரசாங்கத்திற்கு கால அவகாசத்தினை வழங்கி செய்ய வைக்கக்கூடிய விடயங்களை செயற்படுத்த வேண்டும். இல்லையேல் ஜனாதிபதி தேர்தலில் அமெரிக்காவும், சீனாவும், இந்தியாவும் யார் வர வேண்டும் என்று நினைக்கின்றனரோ நாமும் அவர்களை வரவைப்போம் என்பதனை நினைவுபடுத்த வேண்டும். (9-299)

# தொடர்மாடி வீடுகளின் (Condominium) கூட்டுச் சொத்துரிமையும் அதன் பராமரிப்பும்

06

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்-எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



அட்டவணை-2

| மாடி இலக்கம் | வீடு இலக்கம் | Floor Area (சதுர மீற்றரில்) | Floor Area | பங்கு மதிப்பு |
|---|---|---|---|---|
| 1 | 1 | 49 | 50ல் குறைவு | 5 |
| 1 | 2 | 49 | 50ல் குறைவு | 5 |
| 1 | 3 | 96 | 51-100 இடையில் | 6 |
| 1 | 4 | 96 | 51-100 இடையில் | 6 |
| 2 | 1 | 146 | 101-150 இடையில் | 7 |
| 2 | 2 | 195 | 151-200 இடையில் | 8 |
| 3 | 1 | 272 | 251-300 இடையில் | 10 |
| மொத்த அலகுகள் -7 | | ஒதுக்கப்பட்டமொத்த பங்கு மதிப்பு = 47 | | |

பங்கு மதிப்பு எப்போதும் சதவீதத்தில் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் அது முழு எண்ணாகவிருக்கும். பல சந்தர்ப்பங்களில் மொத்தப் பங்கு மதிப்பு பத்தின் பெருக்கங்களாக இருக்கும். உதாரணமாக 100, 1000, 10000 போன்ற பெறுமானங்களாக இருக்கும். இதனை வகை-2 விளக்குகின்றது.

### பல்வகைத் தேவைகளுக்கு பயன்படும் தொடர்மாடிக் கட்டடத்தில் அலகுகளுக்கான பங்குமதிப்பை கணக்கிடல்

ஒரு தொடர்மாடிக்கட்டடம் சுப்பர்மார்க்கட், கடைகள், அலுவலகங்கள், வீட்டுமனைகள் போன்ற பல தேவைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன.

உதாரணமாக தரைமாடி முதல் இரண்டாம் மாடி வரை சுப்பர்மார்க்கட், கடைகள், அலுவலகங்கள் போன்றவற்றுக்கும் மற்ற மாடிகள் வீட்டு மனைகளாகவும் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் பல.

இவ் வகையான தொடர்மாடிக் கட்டடத்தின் தனி அலகின் பங்கு மதிப்பு கணிப்பது சிறிதளவு சிக்கலானது. அத் தொடர்மாடியில் உள்ள மின் உயர்த்தி, நீச்சல் தடாகம் போன்றவற்றை எடுத்தால் அவற்றைக் கூடுதலாக பாவிப்பவர்கள் வீட்டுமனைகளில் வாழ்பவர்களே. சுப்பர்மார்க்கட், கடைகள், அலுவலகங்கள் என்பவற்றில் வேலை செய்பவர்கள் அவற்றை பயன்படுத்துவது மிகக் குறைவு. எனவே பங்குமதிப்பு கணக்கிடப்படும் போது இவையெல்லாம் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவேண்டும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் பங்கு மதிப்பு வித்தியாசமான முறையில் கணக்கிடப்படும்.

## வகை-2

$$\text{தனி அலகின் பங்கு மதிப்பு} = \frac{\text{தனி அலகின் Floor area}}{\text{எல்லாத் தனி அலகுகளின் மொத்த Floor area}} \times \text{ஒதுக்கப்பட்ட பங்கு மதிப்பு}$$

வகை-2ல் கட்டடத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தப் பங்குமதிப்பு 100. அது எவ்வாறு பகிரப்பட்டுள்ளது என்பதை அட்டவணை-3 காட்டுகின்றது.

அட்டவணை-3

| மாடி இலக்கம் | இலக்கம் | மாடியின் பாவனை | Floor Area (சதுர மீற்றரில்) | | பங்கு மதிப்பு |
|---|---|---|---|---|---|
| அடித் தளம் | 0 | சுப்பர் மார்க்கட் | 1500 | $\frac{1500}{4500} \times 100$ | 34 |
| 1 | 1 | கடை | 500 | $\frac{500}{4500} \times 100$ | 11 |
| 1 | 2 | கடை | 500 | $\frac{500}{4500} \times 100$ | 11 |
| 1 | 3 | கடை | 500 | $\frac{500}{4500} \times 100$ | 11 |
| 2 | 1 | கடை | 500 | $\frac{500}{4500} \times 100$ | 11 |
| 2 | 2 | கடை | 500 | $\frac{500}{4500} \times 100$ | 11 |
| 2 | 3 | கடை | 500 | $\frac{500}{4500} \times 100$ | 11 |
| மொத்த பங்கு மதிப்பு = 100 | | | 4500 | | 100 |

### கூட்டுரிமை அலகு உரிமையாளரின் மாதாந்த பணப்பங்களிப்பு

இதுபற்றி, 2003 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க இருபிடிக்கூறுகள் சொத்தாண்மைச் (திருத்தச்) சட்டத்தின் பிரிவு 28(3) இல் கூறப்பட்டுள்ளது. மாதாந்த கட்டணம் இரு தேவைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றது.

ஒன்று மாதாந்தம் ஏற்படுகின்ற பராமரிப்புச் செலவுக்கும் (maintenance fund) மற்றையது கட்டடத்தில் ஏற்படுகின்ற நீண்டகால தேய்வுமானத்தை திருத்துவதற்கான செலவுக்கும் பயன்படுத்தப்படுகின்றது. நீண்டகால தேய்வுமானத்தை திருத்துவதற்கான சேமிப்பு கடன் தீர் நிதி (sinking fund) என அழைக்கப்படுகின்றது.

### காணித்துண்டு, கூட்டுரிமை அலகுத் துண்டு (Land Parcel, Condominium Parcel) என்றால் என்ன?

எல்லைகள் வரையறுக்கப்பட்ட ஒருகாணித்துண்டில் பல கூட்டுரிமை தனிஅலகுத்துண்டுகளைக் (Condominium Parcel) கொண்ட கட்டடம் கட்டப்படுகின்றது. காணித்துண்டானது அதில் கூட்டுரிமை அலகுத் துண்டுகளை வைத்திருக்கும் எல்லோருக்கும் சொந்தமானது. அதை அலகு உரிமையாளர்கள் விற்கமுடியாது.

ஆனால் ஒருவருக்கு உரிமையான கூட்டுரிமை தனிஅலகுத்துண்டை (Condominium Parcel) அவ்வுரிமையாளர் வாடகைக்கு விடவோ, ஈடு வைக்கவோ அல்லது விற்கவோ முடியும். இதுபற்றி, 2003 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க இருபிடிக் கூறுகள் சொத்தாண்மைச் (திருத்தச்) சட்டத்தின் பிரிவு 3(a) ல் கூறப்பட்டுள்ளது.


(தொடரும்...)

# ஐக்கிய தேசியக் கட்சியில் ஐவரில் ஒருவர் ஜனாதிபதி வேட்பாளராவார்

## ஜோன் அமரதுங்க தகவல்













(கொழும்பு)

ஜனாதிபதி வேட்பாளர்கள் பலர் ஐக்கிய தேசியக் கட்சியில் காணப்படுவதாகவும் அவர்களின் பெயர்கள் அனைத்தும் முன்மொழியப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளருக்கு ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருவர் மோதிக் கொள்வதாகவும் இது குறித்து தங்களின் நிலைப்பாடு என்னவெனவும் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு நேற்று முன்தினம் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, பாட்டலி சம்பிக்க ரணவக்க, தயா கமகே மற்றும் கரு ஜெயசூரிய பெயர்கள் இதற்காக முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## சிவனொளிபாத மலையில் மண்சரிவு



(நுவரெலியா)

நல்லதண்ணி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சிவனொளிபாத மலையின் மகாகிரிதம்ப பகுதியில் நேற்று முன்தினம் இரவு 15 மீற்றர் மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

அப்பகுதியில் மின் கம்பங்கள் மற்றும் நீர்க்குழாய்கள் சேதமடைந்துள்ளமையால் நீர் மற்றும் மின்சாரத்தடை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் கடற்படையினர் படிக்கட்டு பழுதுபார்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். கன மழை பெய்தமையால் மண்சரிவு ஏற்பட்டுள்ளது என்றும், எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.(ஐ)

## தோட்டப்புற மக்களின் வீட்டுக்காணிகளுக்கு உரிமைப்பத்திரம் வழங்க அமைச்சரவை இணக்கம்

### மனோ கணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

தோட்டப்புற வீட்டுக் காணிகளுக்கு "உரிமைப் பத்திரம்" வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்துசமய விவகார அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது, "தோட்டப்புற வீட்டு காணிகளுக்கு, "உரிமை பத்திரம்" தரமாட்டேன், 99 வருட "குத்தகை பத்திரம்" தான் தருவேன் என அமைச்சர் நவீன்



திஸாநாயக்க அமைச்சரவையில் அடம் பிடித்தார்" எனவும் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

தானும் அமைச்சர் திகாம்பரமும் இதற்கு எதிர்ப்பு வெளியிட்டு நவீன் திஸாநாயக்கவின் தீர்மானத்தை முறியடித்ததாகவும், இறுதியில் "குத்தகை பத்திரம்" இல்லை. "உரிமைப்பத்திரம்" தான் என அமைச்சரவை தீர்மானித்ததாகவும் அமைச்சர் மனோ சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்நாட்டில் எல்லோருக்கும் வழங்கப்படும் அதே உரிமைப் பத்திரம் தோட்ட மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

தோட் டத் தொழிலாளருக்கு மட்டும் குத் தகைப் பத்திரம் வழங்கி, அவர்களை இரண்டாம்தர பிரஜைகளாக நடத்த இடம்தர முடியாது என, இதன் போது அமைச்சர் நவீன் திஸாநாயக்கவுக்கு புரிய வைத்ததாகவும் அமைச்சர் மனோ மேலும் தெரிவித்தார். (ஐ)

## ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை 10 ஆம் திகதி வரை தேடுவேன்

### மகிந்த கூறுகிறார்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள சகல பிரேரணைகளையும் கவனத்தில் கொண்டு, எதிர்வரும் ஓகஸ்ட் 10 ஆம் திகதி வரையில் தேடி 11 ஆம் திகதி தீர்மானத்தை அறிவிக்கப் போவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை கொழும்பு மஹவெலி மத்திய நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷவின் பெயரைப் பலரும் பிரேரித்துள்ளனர். அது அவர்களின் தனிப்பட்ட கருத்துக்கள். நாட்டு களநிலவரங்கள், மக்களின் எதிர்பார்ப்பு என்பவற்றை எல்லாம் கருத்திற்கொண்டு ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் தீர்மானம் ஒன்றுக்கு



வரவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## இலங்கையர்களை இலக்கு வைத்து பேஸ்புக்கில் நிதி மோசடி நடவடிக்கைகள்

(கொழும்பு)

இலங்கையர்களை இலக்கு வைத்து, பேஸ்புக் ஊடாக நிதி மோசடி நடவடிக்கைகள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிதி மோசடி தொடர்பில், கணனி அவசர நடவடிக்கைப் பிரிவுக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாக, இதன் தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் ரவிந்து மீகஸ்முல்ல தெரிவித்துள்ளார்.

பேஸ்புக்கில் இருக்கும் குறித்த பக்கத்தை லைக் செய்தவுடன் ஒரு இலட்சம் ரூபாய் கடன் கிடைத்துள்ளதுடன், 25,000 ரூபாய் வைப்பிலிட வேண்டும் என்றும் தகவல்கள் வருவதாகவும் இதன் மூலமே மோசடி இடம்பெறுவதாக அவர் தெரிவித்துள்ளரர்.

Flash cash loan.lk என்ற பெயரிலுள்ள பேஸ்புக் கணக்கிலேயே இவ்வாறான நிதிமோசடி இடம்பெறுவதாகவும், இந்த மோசடி தொடர்பில், கணனி அவசர நடவடிக்கைப் பிரிவு விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# சிந்தனைக்கினிய சிவதர்மவள்ளல் கலாநிதி கனகராசாவை மறக்க முடியுமா?



மில்க்வைற் கலாநிதி க.கனகராசாவின் 21 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு இக் கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

யாழ்ப்பாணத்தில் கொட்டடி என்னும் பழைமையான ஊரில் சைவத்தமிழ் நாகரிக சூழ்நிலையில் வாழ்ந்த மீனாட்சிப்பிள்ளை 1924 ஆம் ஆண்டு காரைநகரைச் சேர்ந்த முருகேசு கந்தையா என்னும் விற்பன்னரை விவாகம் செய்து சிக்கன வாழ்வில் செம்மையாக இல்லறம் நடத்தி வந்தனர். கந்தையா- மீனாட்சி தம்பதியருக்கு அவ்வப்போது மைந்தர் நால்வரும் மகள் ஒருத்தியும் பிறந்தனர். கந்தையாபிள்ளையின் இரண்டாவது மைந்தன் கனகராசா. 1927 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 2ஆம் திகதி திருவோண நாளில் பிறந்தார். இவர் பிறந்த ஆண்டில் தந்தையாரால் குடிசைக் கைத்தொழிலாக சவர்க்காரத் தொழில் ஆரம்பிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

கனகராசா கல்வியில் சிறந்து கற்க வேண்டியதை கசடறக் கற்று கம்பளையில் ஆசிரியப் பணியை மேற்கொண்டிருந்தார். சிறிது காலத்தின் பின் தந்தையின் அழைப்பை ஏற்று ஆசிரியப் பணியைத் துறந்து தந்தைக்கு உதவியாக குடிசைக் கைத்தொழிலை நடத்தி வந்தார். அதிகாலை நான்கு மணிக்கு துயிலெழும் அன்னார் காலைக் கடன்களை முடித்து யோகாசனக் கலையைத் தவறாது செய்து காலை ஏழு மணிக்கு அலுவலகத்தில் உட்கார்ந்து கடமைகளை ஆரம்பிப்பார்.

பால் வெண்மை சவர்க்காரம் துணிகளை வெண்மையாக்குவது போன்று அன்னார் வெளியிட்ட சிறு கைநூல்கள், தேவார திருவாசகங்கள், திருக்குறள் கருத்துக்கள், பொன்மொழிகள், நன்மொழிகள், அறச்சிந்தனைகள், காந்தீயக் கருத்துக்கள் ஆகியன மில்க்வைற் செய்தி இதழ்கள் ஆகிய அடங்கி வெளியிட்ட நூல்கள் மற்றும் பிரசுரங்கள் மக்களின் மனத் தூய்மைக்கும் ஆத்ம வளர்ச்சிக்கும் வழிசமைத்தன. தொழில்வளம் பெருகி தாம் ஈட்டும் பணத்தினை வங்கிகளிலும் வட்டிகளிலும் சேர்க்கும் இக்காலத்தில் நம் தொழில் அதிபர் 'அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன் பெற்றான் வைத் துளி' என்பதற்கிணங்க வறியவர்களின் பசிப் பிணியைப் போக்குதல், மண்டபம் அமைத்தல், நீர் நிலைகளைப் பேணுதல், பஸ்தரிப்பிடம் அமைத்தல், கோயில்கள் சனசமூக நிலையங்கள், பாடசாலைகள் போன்றவற்றின் தேவைகளுக்கு நிதி உதவி வழங்குதல் மற்றும் வைத்தியசாலைகள், அநாதை இல்லங்கள், முதியோர் இல்லங்கள் என்பவற்றிற்கு தானே விஜயம் செய்து தனது தயாரிப்பான மில்க்வைற் சவர்க்காரத்தை அன்பளிப்பாக தவறாது விநியோகம் செய்து வந்தார். அத்துடன் அவர்களுக்கு தீபாவளி போன்ற நன்னாளில் தானே நேரில் சென்று உடுபுடைவைகளையும் அன்பளிப்பு செய்வது அன்னாரின் வழக்கமாகும்.

கன்னொருவ, மகா இருப்பள்ளம, வவுனியா, கிளிநொச்சி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் அமைந்துள்ள அரச விவசாயப் பண்ணைகளில் பல்வேறு இன மரக்கன்றுகளையும் விலைக்குப் பெற்று எல்லோருக்கும் இலவசமாக விநியோகம் செய்தவர். அதில் திருப்தி ஏற்படாமல் தனது தொழிலகத்திற்கு அண்மையில் பெரிய நிலப்பரப்பைக்கொள்வனவு செய்து செம்மண்ணும், பசுந்தாலும், எருவும் இட்டுப் பக்குவப்படுத்தி மா, பலா, தோடை, எலுமிச்சை, அகத்தி, கொய்யா, மாதுளை போன்ற இன்னோரன்ன பயிர்களை நாற்றுப்பண்ணையில் உற்பத்திசெய்து பருவமழை ஆரம்பித்ததும் பாடசாலைகள், ஆலயங்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள், மற்றும் வீதி ஓரங்கள் போன்ற இடங்களில் மரம் நாட்டு விழாக்களை ஒழுங்குசெய்து தானே முன்னின்று நடத்தி மரங்களை நாட்டுவித்தார். அவ்விடங்கள் இன்றும் பசுஞ்சோலைகளாக காட்சியளிக்கின்றன.

1950 இன் பின்னரைப்பகுதியில் பனைவளம் பற்றி சிந்தித்து தனி ஒரு மனிதனாக நின்று செயற்பட முனைந்தார் கலாநிதி கனகராசா அவர்கள். பாடசாலைகள், பொது மன்றங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் போன்றவை மூலம் பனம் விதைகளை சேகரித்து வழங்குவோர்களுக்கு அன்பளிப்புக்களை வழங்கியும், பனைவளம் பெருக்கிய பண்பாளன் என்றபட்டமும் சான்றிதழும் வழங்கி கௌரவித்தார். இவ்வாறு சேகரிக்கப்பட்ட பனம் விதைகளை வரண்ட வலயத்திலுள்ள குடியேற்றத் திட்டங்களுக்கு எடுத்துச் சென்று தானே நாட்டுவித்தார். அத்துடன் 1969ஆம் ஆண்டு அம்பாந்தோட்டை மாவட்டத்திற்கு லொறிகளில் பனம் விதைகளை எடுத்துச் சென்று அங்கும் அவற்றை நாட்டுவித்தார். மேற்குறிப்பிட்ட இடங்கள் இன்று பனம் சோலைகளாகவும் தோப்புக்களாகவும் காட்சி அளிப்பதற்கு காரணகர்த்தாவாகவும் தனிஒருவனாகவும் இருந்து செயற்பட்டவர் கலாநிதி கனகராசா என்றால் எவரும் மறுத்துரைக்கமாட்டார். பனைவளம் பாதுகாத்தல் தொடர்பான துண்டுப் பிரசுரங்களையும் செய்யுள்களையும் பனைவளம் என்னும் புத்தகத்தையும் அச்சுவாகனமேற்றி அன்பளிப்பாக விநியோகம்செய்து மக்களிடையே பனைவளத்தை புரிய வைத்தார். நல்ல பாடகர் ஒருவரை தெரிவு செய்து பனை சம்பந்தமான பாடல்களை தான் நடத்துகின்ற விழாக்களில் பாட வைத்து மக்களிடையே கற்பக தருவான பனையின் மகிமையைப் புரிய வைத்தார்.

"உள்ளத்தால் பொய்யாதொழுகின் உலகத்தார் உள்ளத்தில் லெல்லாம் உளன்" என்ற வள்ளுவன் வாக்கிற்கு நிலைகளனாக விளங்குபவர் சிவதர்ம வள்ளல் கலாநிதி கனகராசா என்றால் மிகையாகாது.

அளவையூர் சைவப்புலவர்,
பண்டிதர் வைத்தியலிங்கம் பாலகிருஷ்ணன் M.A.
(முன்னாள் விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர்)
இயக்குநர் சபைப் பணிப்பாளர், பனை அபிவிருத்திச் சபை

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1784

Search for people, places and things

### சுதா



வாசனை என்பது சில நிமிடம் வரை
வறுமை என்பது சிலகாலம் வரை
அழகு என்பது வயது உள்ளவரை
நல்ல உறவு என்பது உயிர் உள்ளவரை

### ரகு

பொய்யைச் சொல்லி ஆயிரம் உறவுகளைத் தக்க வைப்பதைவிட உண்மையைச் சொல்லித் தனிமரமாகவே இருப்பது மேல்... மனச்சாட்சி மட்டுமாவது கடைசி வரை கூட இருக்குமே...



### பிரியா

படிக்கிற பிள்ளை எங்க இருந்தாலும் படிக்கும்



### வாசு

மகிழ்ச்சி ஒன்றையே இலக்காக வையுங்கள்...
கிடைக்கும் இடத்தில் பெற்றுக்கொண்டு
கிடைக்காத இடத்தில் கொடுத்துவிட்டுச்
செல்வோம்



### கண்மணி

கஷ்டப்படுபவர்கள் ஒதுக்கப்படுகிறார்கள்
நடிப்பவர்கள் மதிக்கப்படுகிறார்கள்



### ராகுலன்

கல்லைச் செதுக்கினால் சிலை
மனதைச் செதுக்கினால் வாழ்க்கை



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பயங்கரவாதத் தாக்குதலால் நாட்டுக்கு ரூ.60 பில்லியன் இழப்பு

## அமைச்சர் சம்பிக்க சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**பயங்கரவாதி சஹ்ரானின் குண்டுத் தாக்குதலால் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நட்டம் 60 பில்லியனுக்கும் அதிகம் எனவும், இது நாடு முழுவதிலும் அரசாங்கம் முன்னெடுக்கும் கம்பரெலிய நிகழ்ச்சித் திட்டத்துக்கு ஏற்படும் செலவுக்கு சமமானது எனவும் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டினார்.**



ஹெட்டிப்பொல, பண்டு வஸ்நுவர பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சஹ்ரானின் தாக்குதலை சாதாரண நடவடிக்கையாகக் காட்ட சிலர் முயற்சிக்கின்றனர். 250 இற்கும் மேற்பட்டோர் இறந்தது பிரச்சினைக்குரியது அல்லவா? இந்தப் பிரச்சினைகளையும் சுமந்துகொண்டுதான் அரசாங்கம் முன்னோக்கிச் செல்லவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# திருப்பிச் செலுத்த வேண்டிய கடனில் 70 சதவீதம் செலுத்தப்பட்டுள்ளது

## மத்திய வங்கி ஆளுநர் தகவல்



(கொழும்பு)

சமகால அரசாங்கம் பெற்றிருந்த வெளிநாட்டுக் கடனில் 70 சதவீதம் திருப்பி செலுத்தப்பட்டிருப்பதாக இலங்கை மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசாமி தெரிவித்துள்ளார்.

இலங்கை வர்த்தக சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்த வர்த்தக மாநாட்டில் உரையாற்றிய அவர் திருப்பிச் செலுத்தப்பட்ட இந்தத் தொகை 5.4 பில்லியன் அமெரிக்க டொலர் எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெளிநாடுகளில் இருந்து பெறப்பட்ட கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு போதுமான நிதியை தம்மால் திரட்டிக்கொள்ளக்கூடியதாக இருப்பதாக குறிப்பிட்ட அவர் இதேபோன்று மேலும் பெருந்தொகையை திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளது. எதிர்வரும் வாரங்களில் இவற்றை செலுத்தக்கூடியதாக இருக்கும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டதுடன் அடுத்த வார நடுப்பகுதியில் இத் தொகை செலுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையிடம் தற்போது 8.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளிநாட்டு நாணய இருப்பு இருப்பதாகவும் தெரிவித்த அவர், நாட்டின் தேவைகளை நிறைவு செய்யக்கூடியதாக இவை அமைந்துள்ளதாகவும் தற்போது நாட்டில் கடனுக்கான வட்டிவீதம் குறைந்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# மதுபோதையில் வாகனம் செலுத்திய 4 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கைது

(கொழும்பு)

மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களைக் கைது செய்யும் விதத்தில் பொலிஸார் முன்னெடுத்துள்ள விசேட சோதனை நடவடிக்கையின் போது 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 5 ஆம் திகதி தொடக்கம் நேற்று முன்தினம் காலை 6 மணி வரையிலான காலப் பகுதியிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினத்துடன் நிறைவடைந்த முழுநேர சோதனை நடவடிக்கையின் போது மாத்திரம் 224 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விசேட நடவடிக்கை நாடு முழுவதும் ஒரு மாத காலத்துக்கு முன்னெடுக்கப்படும் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

# ஷாபி தொடர்பான விசாரணைகளை சீ.ஐ.டியிடமிருந்து மாற்ற முடியாது

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு



(கொழும்பு)


குருநாகல் போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று மற்றும் பெண்ணியல் நோய் தொடர்பிலான சிரேஷ்ட வைத்தியர் சேகு சியாப்தீன் மொஹமட் ஷாபி தொடர்பிலான விசாரணைகளை குற்றப்புலனாய்வுப்பிரிவிலிருந்து மாற்றுவது பல்வேறு சிக்கல்களை தோற்றுவிக்கும் எனப் பதில் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

அதனால் அந்த விசாரணைகளை வேறு பிரிவு ஒன்றுக்கு கையளிக்க முடியாது எனவும் பதில் பொலிஸ்மா அதிபர் சந்தன விக்கிரமரட்ண தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

வைத்தியர் ஷாபி விவகாரத்தை விசேட குழுவொன்றிடமோ அல்லது விசேட விசாரணை பிரிவினரிடமுமோ கையளிக்க முடியுமா? என பரிந்துரைக்குமாறு தேசிய பொலிஸ் ஆணைக்குழு பதில் பொலிஸ்மா அதிபரை கேட்டிருந்த நிலையிலேயே இந்த பதில் அனுப்பப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி ருவான் குணசேகர தெரிவித்தார். (ஐ)

# செய்தித்துளிகள்

## கெப்-ஆட்டோ விபத்து ஒருவர் பலத்த காயம்



(திம்புள்ள)

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திம்புள்ள பகுதியில் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் கெப் ரக வாகனம் ஒன்றும் ஆட்டோ ஒன்றும் நேருக்கு நேர் மோதி ஏற்பட்ட விபத்தில் படுகாயங்களுக்குள்ளான ஆட்டோச் சாரதி கொட்டகலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தலவாக்கலை-நாவலப்பிட்டி பீ-406 பிரதான வீதியில் தலவாக்கலை பகுதியிலிருந்து நாவலப்பிட்டி பகுதியை நோக்கிச் சென்ற கெப் ரக வாகனம் ஒன்றும் போகாவத்தையிலிருந்து பத்தனைப் பகுதியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஆட்டோவும் திம்புள்ள பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில் ஆட்டோச் சாரதி கடும் காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

கெப் ரக வாக னம் குறித்த ஆட்டோவை மோதி விட்டு நிறுத்தாமல் சென்றதாக வும், பின்னர் பிரதேசவாசிகள் அவரை துரத்திப் பிடிக்க முற்பட்ட போது, குறித்த கெப் ரக வாகனத்தின் சாரதி நாவலப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு சென்று சரணடைந்துள்ளார் என்றும் தெரிய வருகிறது. (ஐ)

## தெனியாயவில் பலத்த காற்று விகாரை, லயன் அறை சேதம்!

(தெனியாய)

தெனியாயவில் பலத்த காற்றுடன் கூடிய காலநிலை நிலவி வருவதால், பல இடங்களில் மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன.

பலத்த காற்றின் காரணமாக தெனியாய கந்தில்பான ஸ்ரீ ரனசிங்காராம விகாரை மீது அருகில் இருந்த மரம் நேற்று முன்தினம் முறிந்து விழுந்ததில் விகாரை சேதமடைந்துள்ளது.

அத்தோடு தெனியாய சின்னத்தோட்டம் லயன் அறை ஒன்றின் கூரை காற்றினால் சேதமடைந்துள்ளது.

இதேவேளை, நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட பலத்த காற்று, மண் சரிவு மற்றும் வெள்ளம் காரணமாக 8 பேர் உயிரிழந்துள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

அத்தோடு, 8 மாவட்டங்களைச் சேர்ந்த 4ஆயிரத்து 738 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த நிலையம் தெரிவித்துள்ளது. (ஐ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 70 | 60 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 250 | 350 | 400 | 380 | 500 |
| தக்காளி | 100 | 90 | 90 | 70 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 160 | 100 | 120 |
| கோவா | 80 | 80 | 80 | 60 | 80 |
| கரட் | 160 | 150 | 170 | 130 | 200 |
| பூசணி | 80 | 90 | 90 | 70 | 80 |
| புடோல் | 60 | 70 | 80 | 60 | 100 |
| வாழைக்காய் | 100 | 100 | 120 | 50 | 120 |
| சின்ன வெங்காயம் | 120 | 140 | 100-180 | 130 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 110 | 120 | 110 | 140 |
| பாகற்காய் | 160 | 160 | 180 | 170 | 120 |
| வெண்டிக்காய் | 30 | 50 | 60 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 90 | 50 | 100 |
| பயற்றங்காய் | 30 | 50 | 60 | 20 | 50 |
| லீக்ஸ் | 100 | 80 | 90 | 70 | 100 |
| பீற்றூட் | 60 | 80 | 70 | 60 | 100 |
| கறிமிளகாய் | 80 | 160 | 300 | 270 | 240 |
| முருங்கைக்காய் | 100 | 80 | 100 | 100 | 80 |
| போஞ்சி | 120 | 120 | 140 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | – | 60 | 40 |
| கீரை-1பிடி | 30 | 15 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 250 | 260 | 220 | 250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30 | 30 | 25 | 20-40 |
| இராசவள்ளி | 200 | 200 | 180 | 140 | 150 |
| வெங்காயப்பூ | 240 | 160 | 170 | 190 | 200 |
| முள்ளங்கி | 80 | 60 | 70 | 40 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 40 | 20 | 30 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 80 | 60 | 110 | 50 |

# சிறுவர் அரங்கம்

## ராமுவின் பெரும் உதவி



சுந்தராபுரம் என்னும் ஒரு ஊரில்' மயில்வாணன் என்னும் ஒரு வியாபாரி இருந்தார். அவருக்கு ராமு என்னும் ஒரு மகன் இருந்தான். ராமு அந்த ஊரில் உள்ள நடுநிலைப்பள்ளியில் ஏழாம் வகுப்பு படித்து வந்தான். மயில்வாகணன் அருகில் உள்ள ஒரு நகரத்தில் கடை ஒன்று நடத்தி வந்தார். தினமும் காலையில் சைக்கிளில் அந் நகரத்துக்கு சென்று கடையை திறந்து வியாபாரத்தை பார்த்துவிட்டு இரவு ஒன்பது மணிக்கு மேல்தான் வீடு திரும்புவார். அவரது கடையில் விவசாயத்துக்கு தேவையான உரங்கள், பூச்சி மருந்துகள் போன்றவை விற்பனையாகும்.

ராமு நல்ல மாணவனாய் மட்டும் இல்லாமல், அவன் அம்மாவுக்கு வீட்டில் எல்லா உதவியும் செய்வான். அது மட்டுமல்லாமல் அந்த ஊரில் உள்ள வயதானவர்களுக்கும், மற்றவர்களுக்கும் தங்களால் இயன்ற உதவிகள் செய்வான். ராமுவின் செயல்களினால் அவனின் பெற்றோர்களுக்கும் அந்த ஊரில் நல்ல பெயர் இருந்தது.

ஒருமுறை அவர்கள் ஊரில் ஒரு விவசாயி தன் நிலத்தில் தண்ணீர் தேவைக்காக ஒரு ஆழ்துளைக் கிணறு போட்டார். தண்ணீர் கிடைக்காததால், அதனை அப்படியே விட்டு விட்டு அடுத்த இடத்திற்கு சென்று நிலத்தை துளையிட்டார். முன்னர் துளை போட்ட இடத்தை மூடாமல் விட்டு விட்டார். அந்த இடத்தின் பாதையோரத்தில் மரங்களும் இருந்ததால், நடந்து வருவோர் சற்று அமர்ந்து செல்ல பெரிய கற்களும் பதித்து வைத்திருப்பர். இதனால் அந்த விவசாயின் தோட்டத்து வழி எப்பொழுதும் ஆட்கள் நடமாட்டமாகவே இருக்கும். ராமுவைப் போலவே நிறைய மாணவர்கள் அவருடைய தோட்ட வழியாகத்தான் பள்ளிக்கு செல்வர். அவர்கள் இந்த ஆழ்துளைக் கிணறு திறந்திருப்பதை பார்த்து விட்டு விவசாயிடம் சென்று ஐயா, நீங்கள் தண்ணீருக்காக நிலத்தில் துளையிட்டுவிட்டு அப்படியே திறந்து போட்டுவிட்டு வந்து விட்டீர்கள். தயவு செய்து அதை மூடிவிடுங்கள் என்று கேட்டனர். அவர் நல்லவர்தான் என்றாலும், போவோர் வருவோர் சொல்லி நாம் கேட்பதா என்னும் மனப்பான்மையால் அதை காதில் போட்டுக்கொள்ளவில்லை.

இப்படி இருக்கையில் ஒரு நாள் ஒரு அம்மாள் தன் கைக் குழந்தையை எடுத்துக்கொண்டு அந்த வழியாக வந்து கொண்டிருந்தார். அன்று நல்ல வெயில். வந்தவர் ஒரு மர நிழலில் சிறிது நேரம் களைப்புற்று கைக்குழந்தையையுடன் அருகில் இருந்த ஒரு கல்லின் மேல் உட்கார்ந்து விட்டார். அந்த வெயிலுக்கு, மர நிழல் சுகமாக இருந்தது. தன்னுடைய குழந்தையை அப்படியே தன் உடல் மீது சாய்த்துக்கொண்டு நிழலின் சுகத்தில் கண்ணை மூடியவர் அசந்து விட்டார். அந்த பெண்ணின் மடியில் இருந்த குழந்தை மெல்ல அம்மாவின் கையை விட்டு இறங்கி அந்த மண்ணின் மீது தவழ்ந்தவாறு நடக்க ஆரம்பித்து விட்டது.

அந்தக்குழந்தை நடந்த பாதை அருகேதான் அந்த விவசாயி போட்டிருந்த ஆழ் துளை கிணறு இருந்தது. அது மூடாமலும் இருந்தது. அந்தக் குழந்தை திறந்திருந்த அந்த துளையில் மெல்ல கை விட்டு பின் கையை எடுத்து விளையாடியது. அதன் பின் என்ன நினைத்ததோ தெரியாது மெல்ல திருப்பி ஒரு காலை விட்டு விளையாடியது. இதை எதுவும் அறியாத அந்த பெண் நல்ல தூக்கத்துக்கு செல்ல ஆரம்பித்து விட்டாள்.

திடீரென ஒரு கூக்குரல் எழுந்தது திடுக்கிட்டு விழித்த அந்தப் பெண் தூரத்தில் ஒரு பையன் கீழே படுத்து கிடப்பதையும் எதையோ கையில் பிடித்தவாறு கத்திக்கொண்டிருப்பதையும் பார்த்தவள், திடீரென நினைவு வந்தவளாய் தன் குழந்தையை தேட அது காணாமல், பதற்றத்துடன் எதையோ கையில் பிடித்துக் கொண்டு கத்திக்கொண்டு படுத்துக்கிடந்த அந்த பையனின் அருகில் ஓடிப்போய் பார்த்தவளுக்கு மூச்சே நின்று விட்டது போல் இருந்தது. தன்னுடைய குழந்தையின் முக்கால்வாசி உடல் அந்த குழியில் உள்ளே இருக்க, கழுத்தை மட்டும் அந்தப்பையன் பிடித்து கத்திக்கொண்டிருந்தான். அந்த பெண்ணும் உதவி உதவி என்று கூச்சலிட்டுக்கொண்டு அந்தப் பையனோடு சேர்ந்து தானும் தன் குழந்தையை பிடித்துக் கொண்டாள்.

அதற்குள் சத்தம் கேட்டு அந்த வழியாக போவோர் வருவோர் அனைவரும் வந்துவிட்டனர். பின் அங்கிருந்த அனைவரும் சுற்றிலும் உள்ள மண்ணை மெல்ல எடுத்து கொஞ்சம் கொஞ்சமாக அந்த குழந்தையை வெளியே எடுத்தனர். நெடுநேரம் குழந்தையின் கழுத்தை பிடித்திருந்ததால் அந்த குழந்தைக்கு மூச்சு திணறல் எடுத்து மயக்க நிலைக்கு போயிருந்தது. உடனே குழந்தையை எடுத்துக்கொண்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

குழந்தை நல்லபடியாக பிழைத்துக்கொண்டது. எல்லோரும் அந்த விவசாயிடம் சென்று உங்களால் ஒரு குழந்தை சாகக் கிடந்தது. இந்த பையனால்தான் பிழைத்தது, என்று சொன்னார்கள் அந்த விவசாயி "தம்பி" அன்று நீங்கள் எல்லாம் சொன்ன போது வழியில போறவங்க தானே, என்று கண்டு கொள்ளாமல் விட்டு விட்டேன். இன்று வீணான பழிச்சொல்லுக்கு ஆகாமல் என்னை காப்பாற்றி விட்டாய் என்னை மன்னித்துக்கொள் என்றார்.

ராமு ஐயா நீங்கள் பெரியவர்கள்..என்னிடம் மன்னிப்பு எல்லாம் கேட்கவேண்டாம். நான் என் தந்தைக்கு சாப்பாடு எடுத்துக்கொண்டு அந்த வழியாக வந்து கொண்டிருந்தேன். ஒரு குழந்தை தனியாக வருவதை தூரத்தில் இருந்து பார்த்துவிட்டேன். அப்புறம்தான் எனக்கு ஞாபகம் வந்தது இங்கு ஒரு குழி இருக்குமே என்று ஓடி வந்தேன். அதற்குள் குழந்தை அந்த குழிக்குள் காலை விட்டு விட்டது.

உடனே ஓடி வந்து அதனை பிடிக்க முயல்வதற்குள் உடல் உள்ளே இறங்க ஆரம்பித்து விட்டது. வேறு வழியில்லாமல் கழுத்தை என் கரத்தோடு இறுகப்பற்றி அப்படியே படுத்துக்கொண்டு சத்தம் போட்டேன். நல்ல வேளை அதற்குள் அந்த குழந்தையின் அம்மாவும் வந்ததால் நல்லதாகப்போயிற்று என்று கூறினான். அந்த ஊர் மக்கள் இன்றும் ராமுவின் அந்த பெரும் உதவியைப்பற்றி புகழ்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

## விடுகதைகளும் விடைகளும்

- கடல் இருக்கும் தண்ணீர் இருக்காது, நாடு இருக்கும் வீடு இருக்காது. அது என்ன?
  **உலக வரைபடம்**
- மழைக்கும் இடம் உண்டு, மன்னர் படைக்கும் இடம் உண்டு. அது என்ன?
  **மரத்தடி**
- விஷம் கொண்டதை விரும்பியே தொழுவர். அது என்ன?
  **பாம்பு**
- இரண்டு கால் ஜீவன்களுக்கு இருக்க உதவுவான் மூன்று காலன். அது என்ன?
  **முக்காலி**
- ஒற்றைக் கண்ணன் பிரிந்தவர்களை ஓடி ஓடி இணைப்பான். அவன் யார்?
  **ஊசி - நூல்**
- காண்பவரை ஏமாற்றும் நீர், தாகம் தீர்க்காத நீர். அது என்ன?
  **கானல் நீர்**
- கையால் பறப்பார்கள், மூக்கால் தின்பார்கள். அவர்கள் யார்?
  **பறவைகள்**

## வாழ்க்கைக்கான நற்சிந்தனைகள்

- அன்றாட வாழ்க்கையில் மூழ்கிப் போவதால் கனவுகளை நிறைவேற்ற முடியாமல் போய்விடுகிறோம். ஒரு கட்டத்தில் இலட்சியத்தையே மறந்துவிடுகிறோம். ஆகவேதான் நேரத்தை நழுவ விட்டுவிடக் கூடாது.
- பணப்பற்றாக்குறை இருக்கிறது என்ற எண்ணத்தை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடுங்கள். என்வாழ்வில் ஏராளமாக பணம் சேர்கிறது என்ற எண்ணத்தை மனதிற்கு வழங்கி அமைதி காணுங்கள், பின்னர் அவதானியுங்கள் வளங்கள் பெருகியிருக்கக் காண்பீர்கள்.
- நீங்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் வேலை, பரவசமானதாகவும் அர்த்தம் நிறைந்ததாகவும் அமையப் பெற்றவர்கள் மிகவும் சந்தோசமானவர்கள்.
- நாம் வலுவாக நினைக்கும் ஒன்று நமக்குக் கிடைக்கிறது.
- பிரச்சினையில் கவனம் செலுத்துகிறோமா அல்லது தீர்வில் கவனம் செலுத்துகிறோமா என்பதை யோசித்து நடக்க வேண்டும்.

ஒரு நாள் நிச்சயம் விடியும்-- அது
உன்னால் மட்டுமே முடியும்.
~ அப்துல் கலாம்.

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## யாழ்.ஆயரின் உரை வரலாற்றில் பதிவிடப்படும்

தமிழ் மக்கள் ஒருபோதும் மதத்தால் பிளவுபட்டிருந்தவர்கள் அல்ல. தமிழ் மக்களிடம் இருக்கக்கூடிய மதங்கள் அவர்களிடையே பேதங்களை ஏற்படுத்தவில்லை.

தவிர, விடுதலைப் புலிகளும் மதசார்பு என்பதற்கு இம்மியும் இடம் கொடுக்காமல் இருந்தனர். அப்போதெல்லாம் மதங்கள் தமிழினத்தை வலுப்படுத்தினவேயன்றி பிளவுபடுத்தவில்லை.

ஆனால் இன்றைய நிலைமை வேறுவிதமாக உள்ளது. தமிழ் இனத்தைப் பிளவுபடுத்துகின்ற இலக்கை நோக்காகக் கொண்டு மதவாதம் முன்வைக்கப்படுகிறது.

இந்த முன்வைப்பு மன்னாரில் இருந்து ஆரம்பித்துள்ளது. மன்னாரில் ஆரம்பித்த மத பேதமைக்கு இன்னமும் தீர்வு காணமுடியாமல் உள்ளது.

மன்னாரில் இருக்கக்கூடிய அரச நிர்வாகம் ஒரு மதத்தலைவரின் கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறப்படுகிறது எனும்போது, இதற்குப் பின்னால் எத்தனை கோடி ரூபாய்கள் சுழற்சிப்பட்டிருக்கும் என்பதை ஊகிக்க முடியும்.

இதுதவிர, மன்னார் திருக்கேதீச்சர வளைவை அமைப்பதற்கு அனுமதி வழங்கிய மன்னார் பிரதேச சபை மீண்டும் அதனை இரத்துச் செய்திருக்கிறது.

முஸ்லிம் இனம் சார்ந்தவரே அந்தப் பிரதேச சபையின் தவிசாளராக இருக்கிறார். திருக்கேதீச்சர வளைவை அமைப்பதற்கு அனுமதி கொடுத்த பின்னர் அதனை இரத்துச் செய்யும்படி மன்னார் ஆயர் கூறினார் என்பதற்காக அனுமதியை இரத்துச் செய்வது என்றால் இஃது ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதத்தை விட பயங்கரமானதாகும்.

சட்டதிட்டங்களுக்கு அமைய அனுமதி வழங்கப்பட்ட பின்னர் மன்னார் ஆயர் கூறிவிட்டார் என்பதற்காக அந்த அனுமதியை இரத்துச் செய்வதெனும்போது இதற்குப் பின்னால் இருக்கக்கூடிய எழுதப்படாத உடன்படிக்கை, ஒப்பந்தங்கள் எவ்வளவு வலுவாக இருக்கும் என்பதை சாமானியர்களும் புரிந்து கொள்வர்.

எனவே இது விடயங்களில் கவனம் செலுத்தப்படாவிட்டால் மன்னாரில் இருக்கக் கூடிய இந்து மக்களை இலக்கு வைத்துக் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெறலாம் என அனுமானிக்க வேண்டிய நிலைமை இன்றைய சூழ்நிலையில் உள்ளது.

இவை ஒருபுறமிருக்க, நானாக இருந்தால் திருக்கேதீச்சர வளைவை அமைக்க அனுமதித்திருப்பேன் என யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை கூறியுள்ளார்.

அவர் கூறியது தொடர்பில் சைவ – கத்தோலிக்க மக்கள் ஆச்சரியமடையமாட்டார்கள்.

ஏனெனில் யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயரின் சிந்தனை தமிழினத்தின் ஒற்றுமை என்பதுதான்.

எனவே சமயத்தால் தமிழினம் பேதப்படுவதை அவர் ஒருபோதும் விரும்பவில்லை. அதனால் தான் திருக்கேதீச்சர வளைவை அமைப்பது தொடர்பில் தான் எதிர்வாதம் புரியமாட்டேன் எனக் கூறியுள்ளார்.

உண்மையில் திருக்கேதீச்சர வளைவு என்பது ஒரு பெரும் விடயமல்ல. அது சாதாரணமானது.

ஆனால் அதனை எதிர்த்தபோது நிலைமை பூதாகரமாகிவிட நம் தமிழினம் தடக்குப்படுகிறது. இந்த நிலைமையை மாற்றி தமிழ் மக்களின் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காக யாழ்.ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அப்போதும் இப்போதும் கூறியவை நிச்சயம் வரலாற்றுப் பதிவில் இடம்பெறும்.

## கல்முனை விவகாரம் தொடர்பில்

# பிரதமர் வழங்கிய வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை

## சிறீதரன் எம்.பி. குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

கல்முனை விவகாரம் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழங்கிய வாக குறுதியை நிறைவேற்றாமையினாலேயே அவருடனான சந்திப்பை கூட்டமைப்பு தவிர்த்ததாக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

நா.யோகேந்திரநாதன் எழுதிய "நீந்திகடந்த நெருப்பாறு" 3வது நூல் நேற்று முன்தினம் (சனிக்கிழமை) கிளிநொச்சியில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "பிரதமர் வழங்கிய வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்திற்கு இன்றுவரையில் கணக்காளர் நியமிக்கப்படவில்லை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை சந்திக்க முயற்சித்தபோது, இந்த விடயத்தில் ஒரு தீர்க்கமான முடிவு வழங்கப்படாமையினால், அவருடனான சந்திப்பை கூட்டமைப்பு தவிர்த்தது.

பிரதமருடனான சந்திப்பு குறித்து இதுவரையில் இறுதித் தீர்மானம் எட்டப்படவில்லை" என்றும் அவர் தெரிவித்தார். (03)

## வர்த்தக நிலையம் உடைத்து பெருமளவு பொருட்கள் திருட்டு

### மிருசுவில் பகுதியில் சம்பவம்

(கொடிகாமம்)

மிருசுவில் வடக்கு பகுதியில் வர்த்தக நிலையம் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த ஒரு தொகை பணமும் அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு 1.00 மணியளவில் இடம் பெற்றுளளது.

மிருசுவில் வடக்கு வீதியில் அம்மன் கோவிலுக்கு அருகாமையில் உள்ள பல சரக்கு கடையில் கடை உரிமையாளரின் உறவினர் தங்கியிருந்துள்ளார். திருடுவதற்காக சென்ற இனந்தெரியாத நபர்களால் அந்த நபர் தாக்குதலுக்கு உள்ளாகி சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடையில் இருந்த பால்மாபைக்கற்றுக்கள் உட்பட 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசியப் பொருட்களும் 1 லட்சத்து 60 ஆயிரம் ரூபா பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளதாக கொடிகாமம் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (03,114)

## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில்

## கைதானவர்களுக்கு பிணை வழங்குவதை மீளாய வேண்டும்

(கொழும்பு)

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் சம்பந்தமாக கைது செய்யப்பட்ட நபர்களை பிணையில் விடுதலை செய்வதை மீளாய்வு செய்யுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜெயவர்தன, சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகள், சட்டத்திற்கு முன் கொண்டு வரப்படும் போது, அவர்கள் எந்த வகையிலும் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிக்க முடியாதவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சம்பவம் தொடர்பான விசாரணைகள் குறித்து நாட்டு மக்களுக்கு கட்டாயம் தெளிவுபடுத்த வேண்டும் எனவும் காவிந்த ஜெயவர்தன கூறியுள்ளார்.

அதேவேளை ஈஸ்டர் தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட நபர்களை கண்டுபிடிக்கும் எந்த தேவையும் அரசாங்கத்திற்கு இருப்பதாக தெரியவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும குறிப்பிட்டுள்ளார்.

ஈஸ்டர் பயங்கரவாத தாக்குதல் நடந்து இன்று (நேற்று) மூன்று மாதம் நிறைவு பெறுவதை முன்னிட்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார். (03)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை கிளிநொச்சி பிரதேசத்தில கரியாலை நாகபடுவான், குமுழ முனை, கிருஸ்ணாநகர் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில கோவில்குளம் கிராமம், பம்பைமடு கிராமம் ஆகிய பிரதேசங்களிலும மின் தடைப்படும்.

## நாட்டை ஆட்சி செய்ய ஐ.தே. கட்சியால் முடியாது

### திலும் அமுனுகம எம்.பி. தெரிவிப்பு

புதிய கூட்டணியை அமைத்து தேர்தலில் போட்டியிட முயற்சித்தாலும் ஐக்கிய தேசியக் கட்சியினால் நாட்டை ஆட்சிசெய்ய முடியாது என கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார். மேலும் கூறுகையில்,

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்திக் கொள்வதன் மூலம் அந்த கட்சிக்கு ஆட்சி நடத்த முடியாது என்பது ஒப்புவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் மீது மக்களுக்கு நல்ல அபிப்பிராயம் இல்லை. இதனால், கூட்டணியாக போட்டியிட்டால், ஐக்கிய தேசியக் கட்சிக்கு மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்ள முடியாது.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தற்போது நெருக்கடி உருவாகியுள்ளது. அவர்கள் ஒருவர் மீது ஒருவர் சேறுபூசிக் கொள்கின்றனர் என குறிப்பிட்டுள்ளார். (03)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### எண்ணம் போல வாழ்வு



❖ எண்ணங்களின் பிறப்பிடம் மனம். மனதின் இயக்கத்தை "எண்ணம்"என்ற சொல்லால் குறிக்கிறோம். எண்ண ஓட்டத்தை உணர்ந்து, விழிப்புடன் இருந்தால் வாழ்வு உயரும். அறியாமல் அதன் போக்கிற்கு விட்டு விட்டால் வாழ்க்கை தாழ்வடையும்.

❖ எண்ணத்தின் சக்தி அளப்பரியது. அது எங்கும் செல்லும் வலிமை கொண்டது. விழிப்பு நிலையில் இல்லாமல் அலட்சியமாக இருந்தால் அசுத்தமான எண்ணங்கள் நம் மனதை ஆக்கிரமிக்கும்.

❖ தவறான எண்ணங்களில் இருந்து தப்பிக்கும் வழி எப்போதும் மனதை நல்ல விடயங்களில் செலுத்துவதைத் தவிர வேறில்லை. விருப்பமே இல்லாவிட்டாலும் கூட, நல்லவர்களோடுதான் நாம் பொழுதைக் கழிக்க வேண்டும்.

❖ எண்ணங்களை கையாளத் தொடங்கி விட்டால் எல்லாமே இன்பமயம் தான். பூரணமான அமைதி நிலை பெற்ற மனதில் ஆனந்தம் நிலைத்து நிற்கும். எண்ணமே நம் வாழ்வைச் செதுக்கும் சிற்பியாகும்.

❖ எண்ணங்களைப் பொறுத்தே சொற்கள் அமைகின்றன. எண்ணமும், சொல்லும் ஒன்றுபடும்போது செயல்களும் உயர்ந்தவையாக அமைந்து விடும்.

# வடமாகாண குத்துச்சண்டைப் போட்டி
# முல்லை.மாவட்ட ஆண்-பெண் அணிகள் சம்பியன்

வடமாகாண மாவட்டங்களுக்கு இடையிலான குத்துச் சண்டை போட்டியில் முல்லைத் தீவு மாவட்ட அணி ஆண்கள் பெண்களிற்கான இரு பிரிவிலும் சம்பியன் கிண்ணத்தை வழித்துத் துடைத்தது.



வடமாகாண விளையாட்டு திணைக்களத்தினால் மாவட்ட அணிகளுக்கிடையிலான குத்துச் சண்டை போட்டிகள் கடந்த புதன், வியாழன், வெள்ளிக் கிழமைகளில் முள்ளிய வளை வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

ஆண்களிற்கான குத்துச் சண்டை போட்டியில் 1ஆம் இடத்தை முல்லைத்தீவு மாவட்டமும், 2ஆம் இடத்தை கிளிநெச்சி மாவட்டமும், 3ஆம் இடத்தை வவுனியா மாவட்டமும், 4ஆம் இடங்களை யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களும் பெற்றுக்கொண்டன.

பெண்களிற்கான குத்துச் சண்டை போட்டியில் 1ஆம் இடத்தை முல்லைத்தீவு மாவட்டமும், 2ஆம் இடங்களை வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களும், 3ஆம் இடத்தை கிளிநொச்சி மாவட்டமும் பெற்றுக் கொண்டன. (க-60)

## சவாரிப்போட்டி

ஜெ.துசாந்தன்(தம்பன்) ஏற்பாட்டில் கரவையூரவர்களின் ஆதரவில் சவாரி புகழ் இளைய தம்பி ஞாபகார்த்த மாபெரும் மாட்டு வண்டி சவாரிப் போட்டி எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.30 மணிக்கு கரவெட்டி சோனப்பு சவாரித் திடலில் இடம்பெறவுள்ளது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# தேசிய கூடைப்பந்தாட்டம்;வடக்கின் இரு அணிகள் இறுதிக்குத் தெரிவு





45ஆவது தேசிய விளையாட்டு விழாவின் கூடைப்பந்தாட்ட தொடரின் இறுதிப் போட்டிக்கு வடமாகாணத்தின் இரு அணியினரும் தகுதிபெற்றுள்ளனர்.

பெண்கள் பிரிவிற்கான அரையிறுதியில் 67:42 என்ற புள்ளிக் கணக்கில் தென் மாகாண அணியினையும், ஆண்கள் பிரிவில் 66:60 என்ற புள்ளிக் கணக்கில் கிழக்கு மாகாண அணியினையும் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்கு நுழைந்துள்ளனர். (க)

# பிரசாந்-அபிநயன் அசத்தல் ஆட்டம் சைனிங்ஸ் அணி அபார வெற்றி



உதயசூரியன் அணியை 73 ஓட்டங்களால் அபார வெற்றி கொண்டு அரையிறுதிக்கு முதல் அணியாக நுழைந்தது சைனிங்ஸ் அணி.

றெயின்போ விளையாட்டுக் கழகம் ஆண்டு விழாவினை முன்னிட்டு நடத்தும் துடுப்பாட்டத் தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் சைனிங்ஸ் அணி உதயசூரியன் அணியுடன் மோதியது.

முதலில் ஆடிய சைனிங்ஸ் அணி அனைத்து வீரர்களின் சிறப்பான ஆட்டத்தால் 10 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 114 ஓட்டங்களை பெற்றது.

சைனிங்ஸ் அணி சார்பாக அபிநயன் 21, விஜியேந்திரன் 15, கிருஷ்ணமேனன் 12, சுரேன் 12, துளசிராம் 10 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றனர்.

வெற்றியிலக்கை நோக்கி களமிறங்கிய உதயசூரியன் அணி 8வது ஓவரில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 41 ஓட்டங்களை பெற்றது. சைனிங்ஸ் சார்பாக அனைத்து வீரர்களும் சிறப்பான பந்துவீச்சை மேற்கொண்டனர்இ

பிரசாந் 4, கிருஷ்ணமேனன் 1, உதயன் 1, நிரோசன் 1, செம்பருத்தி 1 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இந்த வெற்றியின் மூலம் சைனிங் அணி அரையிறுதிக்கு தகுதி பெற்றது. (க)

# மாலுமிகள் சங்க உதைபந்தாட்டத் தொடர் சைனிங்ஸ் - நேதாஜி அணிகள் வெற்றி

வல்வை விளையாட்டுக் கழக மாலுமிகள் நடத்தும் வல்வைக் குட்பட்ட கழகங்களிடையான பெருவிளையாட்டுத் தொடரின் ஓர் அங்கமான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் முதலாவது போட்டியில் சைனிங்ஸ் அணி தீருவில் அணியை 4:0 என்ற கோல்கணக்கில் வெற்றி கொண்டது.

சைனிங்ஸ் அணி சார்பாக பிரசாந் 3 , சுரேன் ஒரு கோல்களை போட்டனர். ஆட்டநாயகனாக சைனிங்ஸ் வீரன் செந்தூரன் தெரிவுசெய்யப்பட்டார்.

இரண்டாவது ஆட்டத்தில் நேதாஜி அணி றெயின்போ அணியை 2:1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

நேதாஜி அணி சார்பாக பகீ மற்றும் ரசிகரன் தலா ஒரு கோல்களையும் றெயின்போ சார்பாக பிரணவன் ஒரு கோலினையும் போட்டனர். ஆட்டநாயகனாக நேதாஜி அணி வீரன் பகீ தெரிவு செய்யப்பட்டார். (க)

# இறுதியில் வடமாகாணம்



அநுராதபுரத்தில் நடைபெற்று வரும் 45ஆவது தேசிய விளையாட்டு விழாவின் துடுப்பாட்ட போட்டியில் வடமேற்கு, கிழக்கு மாகாணங்களை வீழ்த்தி முதன்முறையாக வட மாகாண அணி இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது. (க)

## கொடிகாமத்தைச்...

கொடிகாமத்தைச் சேர்ந்த 23 வயது இளைஞரே பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு நேற்று அதிகாலை 3 மணிக்கு வருகை தந்த இளைஞனின் உறவினர் அடையாளம் காட்டினார்.

கொடிகாமம் கச்சாயைச் சேர்ந்த செல்வரத்தினம் கவிகஜன் (வயது - 23) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார்.

தென்மராட்சியிலிருந்து 3 மோட்டார் சைக்கிள்களில் 6 இளைஞர்கள் நேற்றிரவு புறப்பட்டனர் என்று இளைஞனின் உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் தப்பித்த அனைவரும் தென்மராட்சியைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

உயிரிழந்த இளைஞனின் தந்தை புற்றுநோயால் உயிரிழந்துவிட்டார் என்றும் ஒரே ஒரு பிள்ளையான இவர் தாயாருடனே வாழ்ந்து வந்தார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

மானிப்பாய் - இணுவில் வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தவர் மீது பொலிஸார் நடத்திய தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு 8.40 மணியளவில் இடம்பெற்றது.

ஆவா குழுவைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கும் பொலிஸார் சம்பவ இடத்திலிருந்து 2 வாள்களையும் மீட்டிருந்தனர்.

அத்துடன். உயிரிழந்தவர் பயணித்த மோட்டார் சைக்கிளின் இலக்கத் தகடு போலியானது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (3)

## முதுகுப் பக்க...

பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட இளைஞனின் முதுகுப் பக்கமாகப் பாய்ந்த துப்பாக்கி ரவை முதுகெலும்பில் பட்டுத் திருப்பமடைந்து இதயத்தைத் தாக்கியுள்ளது என்று சட்ட மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் கூறினர்.

சம்பவம் தொடர்பில் நேற்று அதிகாலை 3 மணியளவில் சம்பவ இடத்தில் விசாரணைகளை முன்னெடுத்த நீதிவான், கொல்லப்பட்ட இளைஞனின் சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

இளைஞனின் சடலம் நேற்று மாலை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (3)

## சடலத்தை...

பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த இளைஞனின் சடலத்தைப் பார்வையிட யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு வருகை தந்த 4 பேர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொடிகாமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் நால்வரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். கொல்லப்பட்ட இளைஞனின் சடலத்தைப் பார்வையிடுவதற்காக நேற்று காலை அவர்கள் நால்வரும் வேறு சிலருடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு வந்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் நால்வரும் கொல்லப்பட்டவருடன் அலைபேசி ஊடாக இறுதியாகத் தொடர்பு வைத்திருந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (3)

## 16 ஆயிரம் பட்ட...

இதனைக் கூறியுள்ளார்.

தமிழ் மொழி பேசும் பட்டதாரிகளுக்கும் நியமனம் வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் மூன்று மாத காலப் பகுதியில் இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (3)

## இன்னொரு சமூ...

தேசிய ஒருமைப்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

குறித்த அமைச்சின் திட்டமிடலிலான நடமாடும் சேவை நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "நாட்டில் ஐக்கியம் வேண்டுமானால் அனைத்து இனங்களுக்குள்ளும் சமத்துவம் ஏற்பட வேண்டும். ஒரு பகுதி வளரும்போது இன்னுமொரு பகுதி வளராமல் இருந்தால் சமத்துவமோ, ஐக்கியமோ வராது.

எனது ஒதுக்கீடுகள் எங்கு குறைகள் அதிகமாக இருக்கின்றதோ அங்கே தான் செல்லும். எல்லோருக்கும் கிடைக்கக்கூடியதாக இருக்கும். ஒரே பகுதிக்குச் சென்று நிறைய வளங்கள் சேருவதும் வேறுசில பகுதிகளுக்கு ஒன்றுமே கிடைக்காமல் இருப்பதும் பிழையான விடயமாகும்.

எமது மொழியின் வரலாற்றினை, பெருமையினை நாங்கள் உரக்கப் பேச வேண்டும். அதேபோன்று சகோதர இனத்தவர்கள் மீதும் அக்கறை கொள்ள வேண்டும். அவர்களையும் அரவணைக்க வேண்டும். ஆனால அரவணைப்பதாகக் கூறிக் கொண்டு அவர்களின் காலடியில் கிடப்பதை ஏற்க முடியாது" என்று அவர் தெரிவித்தார். (3)

## 16 வெளிநாட்டு...

யடுத்து நீர்கொழும்பில் தங்க வைக்கப்பட்டிருந்த ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அகதிகளில் ஒரு தொகுதியினர் இரண்டு கட்டங்களாக அழைத்து வரப்பட்டு வவுனியா பூந்தோட்டம் பகுதியில் உள்ள வடமாகாண கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

பிரதேச அரசியல்வாதிகள், பொது அமைப்புக்கள் எனப் பலரது எதிர்ப்புக்கு மத்தியில் அவர்கள் இராணுவ பொலிஸ் பாதுகாப்புடன் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 12 ஆண்களும் 4 பெண்களும் என 16 வெளிநாட்டு அகதிகளை மீள நீர்கொழும்புக்கு அழைத்துச் சென்றுள்ளனர். (3,250)

## கோரிக்கைகள்...

சமகாலப் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உயர்மட்டம் நேற்று கூடியது. இதன்போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டார்.

"ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட தாக்குதல்களையடுத்து முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகள் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் தாக்குதல்களை அடுத்துக் கைது செய்யப்பட்ட அப்பாவிகளை விடுவிக்குமாறும் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை அரசு இன்னும் நிறைவேற்றவில்லை என்று இந்தக் கூட்டத்தின்போது சுட்டிக்காட்டப்பட்டது.

அதனால் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் தம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்குத் தீர்வை வழங்கும்வரை அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்பதில்லை என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது" என்றும் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். (3)

## சிறுபான்மை...

பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவிக்கையில், "இதுவரையில் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் தெரிவுக்கு ஐந்து பேரின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எதிரணியில் அங்கத்துவம் வகிக்கும் அனைத்து கட்சிகளினதும் அபிப்பிராயங்களுக்கு அமையவே ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு செய்யப்படுவார்.

இதேவேளை, தேர்தலில் தமிழ் - முஸ்லிம் மக்களின் வாக்குகளைப் பெற முடியும் என்ற நம்பிக்கை காணப்படுகின்றது. எம்மை புறக்கணிப்பதற்கான உரிய காரணம் ஏதும் கிடையாது. போலியான குற்றச்சாட்டுக்களுக்கு மத்தியிலேயே ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டன. சுமத்தப்பட்ட குற்றங்கள் ஏதும் இதுவரையில் நிரூபிக்கப்படவில்லை.

தேர்தலை கருத்திற்கொண்டு அரசாங்கம் தற்போது மாறுபட்ட பல விடயங்களை முன்னெடுக்கின்றது. தேர்தல் வெற்றிக்காக இம்முறை மேற்கொள்ளும் உபாயங்கள் ஏதும் பயனளிக்காது" என்று அவர் குறிப்பிட்டார். (3)

## சிங்கள இளை...

கலந்து கொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

பௌத்த நாட்டின் மரபுரிமைகள் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகின்றது. அரசியல்வாதிகள் அனைவரும் ஆட்சியில் இருக்கும் காலத்தில் எவ்வளவு நிதி சேமித்துக் கொள்ளலாம் என்று மாத்திரமே நினைக்கின்றார்களே தவிர, நாடு தொடர்பில் எவ்வித அக்கறையும் கொள்வது கிடையாது.

தற்போது நாடு எதிர்கொண்டுள்ள சவால்களுக்கு பௌத்த மத பிக்குகளினால் மாத்திரமே தீர்வு வழங்க முடியும். அரசியல்வாதிகள் தயவு செய்து விலகிக்கொள்ள வேண்டும்.

பௌத்த பிக்குகள் அரசியல் பேதங்களை துறந்து பௌத்த சாசனத்திற்கு அமைய ஒன்றுபட்டு செயற்பட வேண்டும்.

அத்துடன் பௌத்த மதத்தின் மரபுரிமைகளும், கோட்பாடுகளும் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் சிங்கள இளம் தலைமுறையினர் அனைவரும் பௌத்த மதத்தினை முழுமையாக முறையாக பின்பற்ற வேண்டும். சிங்கள இளைஞர்களின் கைகளிலே நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது என்றார். (3)

## முஸ்லிம் கிராமங்...

உரித்துக்கள் பறிபோகின்றதாகவும், இதற்கு காரணமாக முஸ்லிம்கள் இருப்பதாகவும் மக்களால் என்னிடம் கூறப்பட்டது. அதாவது குறைந்த விலையில் உள்ள காணிகளை கூடிய விலை கொடுத்து வாங்குவதாக கூறப்படுகின்றது. எமது மக்கள் ஏதோவொரு காரணத்திற்காக விற்பனை செய்து விட்டு சென்றார்கள் என்றால் அந்த இடத்தில் வந்து முஸ்லிம்கள் குடியிருக்கின்றார்கள்.

வறுமையின் காரணமாக எமது பெண்கள் மதம் மாறுவது பிரச்சினையாக உள்ளது. இதனால் எமது உரித்துக்கள் பறிபோகின்றன. இவற்றுக்கெல்லாம் எவ்வாறு முகம்கொடுக்க வேண்டும் என்பது கேள்விக்குறியாக உள்ளது.

நாங்கள் எங்களைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும். நாங்கள் பலமாக இருந்தால் எங்கள் பெண்கள் வெளியில் போக மாட்டார்கள், எங்களது காணிகளை மற்றவர்கள் கொள்வனவு செய்வதற்கு அவசியம் இருக்காது.

ஏனெனில் நாம் பொருளாதார ரீதியாக நல்ல நிலைமைக்கு வந்தால் எமது காணிகளை விற்பனை செய்ய வேண்டிய அவசியம் இருக்காது. ஏழ்மை நிலையில், வசதியற்ற நிலையில் இருந்தோமானால் மற்றவர்களின் சதிக்குள் செல்ல வேண்டிய நிலை வரும்.

தங்கள் வாழ்க்கை நிலைமையை மாற்ற சகலதையும் செய்ய வேண்டும். உங்கள் கிராமத்தை முன்னேற்ற நீங்கள் முன்வர வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக எங்களால் முடியும் என்ற நம்பிக்கை வரவேண்டும்.

புதிய வாழ்க்கையை கொண்டு வரவுள்ளோம் என்ற நம்பிக்கை உங்களிடம் இருக்க வேண்டும். அத்தோடு பொறுமையும் இருக்க வேண்டும். எங்களுடைய கனிய வளங்களை பெறுவதற்காக மக்களிடம் பல பொய்களை கூறி வளத்தினை பெற்றுள்ளார்கள் என்பது தெளிவாக தெரிகின்றது.

எனவே இதனை எவ்வாறு தடை செய்யலாம், இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கலாம், இதனை பாதுகாக்க என்ன செய்ய வேண்டும் என்று பல கோணங்களில் இருந்து பார்க்க வேண்டிய அவசியம் உள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள எமது தமிழ் மக்களின் நிலை கேள்விக்குறியாக உள்ளது. எல்லாம் போய் விட்டது இனி என்ன நடக்கப் போகின்றதோ என்ற சந்தேகம் மக்கள் மனதில் உள்ளதை நான் காண்கின்றேன் என குறிப்பிட்டுள்ளார். (3)

## தந்தையின் இழப்...

தந்தையின் பிரிவை தாங்க முடியாத அவரது மகன் உயிரை மாய்த்த பரிதாபச் சம்பவம் நேற்று முன்தினம் யாழில் இடம்பெற்றுள்ளது.

கந்தர்மடம் மணற்தரை லேனைச் சேர்ந்த யாழ். இந்துக் கல்லூரியில் உயர்தரத்தில் கல்வி பயிலும் கிருஸ்ணகுமார் மதுராங்கன் என்ற 19 வயது மாணவனே இவ்வாறு பரிதாபகரமாக தனது உயிரை மாய்த்துள்ளார்.

குறித்த மாணவனின் தந்தை அண்மையில் உயிரிழந்திருந்தார். இதனால் அவரது இழப்பை தாங்கமுடியாமலேயே இவ்வாறு மகனும் உயிரை மாய்த்துள்ளதாக அறிய முடிகிறது. (3)

## இராணுவ மயப்படுத்தப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள்

### தமிழர் மரபுரிமை பேரவை சுட்டிக்காட்டு

(வவுனியா)

பல தசாப்தங்களாகவே திட்டமிட்டு இராணுவ மயப்படுத்தப்பட்ட சிங்கள குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டு வருவதாக தமிழர் மரபுரிமை பேரவை தெரிவித்துள்ளது.

இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்பிருந்தே ஆரம்பிக்கப்பட்ட இந்த குடியேற்றங்கள், இத்தனை தசாப்தங்களாக பரிணாம வளர்ச்சி பெற்று தமிழரின் இனப் பரம்பலை மாற்றியமைத்துள்ளதாக பேரவையின் இணைத் தலைவர் வி.நவனீதன் வரலாற்று ரீதியாக சுட்டிக்காட்டியுள்ளார்.

வவுனியாவில் நேற்று ஞாயிற்றுக் கிழமை 'நலிவுற்றுப்போன நல்லாட்சியும் தமிழ் மக்களின் எதிர்காலமும்' எனும் கருத்தாய்வு நிகழ்வு மன்னார் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (3,250)

### கொவிசெத

| | |
|---|---|
| திகதி | 2019.07.21 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2185 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 19 27 55 57 |

### தன நிதானய

| | |
|---|---|
| திகதி | 2019-07-21 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 177 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 43 56 67 70 |

### மஹஜன சம்பத

| | |
|---|---|
| திகதி | 2019/07/21 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 3964 |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கங்கள் | 6 2 4 1 7 1 |

### நீரோகா லக்ன ஜய

| | |
|---|---|
| திகதி | 2019/07/21 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0574 |
| லக்கினம் | கும்பம் |
| வெற்றி இலக்கங்கள் | 33 53 57 63 |

பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு
தகுதி - 30 வயதிற்கு உட்பட்டவர்கள் - O/L, A/L எழுதியவர்கள் விரும்பத்தக்கது
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் V2 TRAVELS
எமது கிளைகள்
கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, கொடிகாமம், கோப்பாய், சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, மருதங்கேணி, புத்தூர்
- எமது அனைத்து கிளைகளிலும் 6 மாத கால பயிற்சியுடன் வேலை வாய்ப்புக்கள் உண்டு.
- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -7'500/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்
- சம்பளம் -15'000/- (C-7018)
16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 0768226243 v2vacancies@gmail.com

ஆங்கில வகுப்பு
தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken With Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும். (9882)
தொடர்புகளுக்கு : 076 707 0069 M.Suren

# ஈஸ்ரர் தாக்குதலை வைத்து அரசியல் லாபம் தேட முயற்சி

## ரணில் விக்கிரமசிங்க குற்றச்சாட்டு

(குருணாகல்)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை அடிப்படையாகக்கொண்டு சில வங்குரோத்து அரசியல்வாதிகள் அரசியல் லாபம்தேட முயற்சித்தனர். இதற்கு நாங்கள் இடமளிக்க மாட்டோம். அத்துடன் வன்முறைகளில் ஈடுபட்டவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும். அவர்களை மன்னிக்க முடி யாது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

குருணாகல்பண்டுக்ஸ்வத்த முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த விஞ்ஞான ஆய்வு கூட கட்டடத்திறப்பு விழா நேற்று இடம் பெற்றது.

இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கட்டடத்தை திறந்துவைத்து அங்கு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

முஸ்லிம்களுக்கு எதிராக இங்கு பிரச்சினையை ஏற்படுத்தினால் மத்திய கிழக்கில் தொழில் புரியும் எமது மக்களை அவர்கள் நாட்டுக்கு திருப்பி அனுப்புவார்கள்.

அந்த மக்கள் பல நோக்கங்களுக்காக தொழிலுக்கு சென்று, வெறும் கையுடன் திரும்பினால் என்ன நடக்கும்.

பாரியளவில் பொருளாதார பிரச்சினை ஏற்படும். இதனை ஏற்படுத்துவதே வன்முறையாளர்களின் நோக்கமாகும் எனவும் பிரதமர் இதன் போது சுட்டிக்காட்டினார். (3)

CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.
விசேட விலைக்கழிவு
CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145 077 2931062 077 6655413
(C-7056)

துரித தபால்கள் பொதிகள் சேவை
11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு UK - 600/= Germaney - 700/= France - 700/=
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S.Road, Jaffna.
கிளை : திருநெல்வேலி, நெல்லியடி. 0777 554 528
(C-7067)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240 V2 TRAVELs
மானிப்பாய் • யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

FLC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்ச்
Embassyஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 27.07.2019 சனி காலை 10 மணி
181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456 / 0762 669 614 ஆரம்பம் : 29.07.19 3.30 pm
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.
(C-7055)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(9661)

DMI JAFFNA
பொறியியல் தொழில்நுட்பவியல்
2019 - A/L
பரீட்சையை நோக்கிய கருத்தரங்கு எதிர்பார்க்கப்படும் வினாக்கள்
- குடிசார் பொறிமுறை
- மின் மற்றும் இலத்திரனியல் முகாமைத்துவம்
N.S.றஜிதரன்
23 / 07 - செவ்வாய் - 8.30 - 12.00
24 / 07 - புதன் - 8.30 - 12.00
(C-7066)

முகாமைத்துவ உதவியாளர்
யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் நிறுவன மொன்றிற்கு முகாமைத்துவ உதவியாளர் (ஆண்கள்) பதவி வெற்றிடமாகவுள்ளது. பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்கமுடியும்.
1) க.பொ.த உயர்தரம் சித்தி (வணிகம்)
2) மோட்டார் வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரம்
3) கணனி பிரயோக அனுபவம்
4) யாழ் நகரில் இருந்து 9 கி.மீ தூரத்தினுள் வசிப்பவராயின் விரும்பத்தக்கது
5) தொழில் முன்னனுபவம் மற்றும் ஆங்கில அறிவு மேலதிக தகைமையாக கருதப்படும்.
விண்ணப்பங்கள் யாவும் 7 வேலை நாட்களுக்குள் கிடைக்கக் கூடியவாறு பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.
இல.54, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(C-7058)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்
(9612)

Parcel.lk
வெளிநாட்டு பொதிகள் சேவைக்கு முகவர்கள் தேவை
யாழ் மாவட்டத்தில் உள்ள பிரபல பொதிகள் சேவைகள் நிறுவனமான பார்சல் லங்கா க்கு சேவை முகவர்களை வழங்க எண்ணி உள்ளோம் ஆகையால் உங்கள் பெயர் வியாபாரத்தின் பெயர் முகவரி தொலைபேசி இலக்கம் என்பவற்றை கீழ்காணும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
agency@parcel.lk
(C-7062)

31ஆம் நாள் நினைவஞ்சலி பிற்போடப்பட்டுள்ளது

அமரர் இராஜதுரை செல்வராசா (மேபி)



அவர்களின் 22.07.2019 அன்று நடைபெற இருந்த வீட்டுக்கிருத்தியம் மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தியேட்டர் லேன், இணுவில் கிழக்கு. தகவல் : குடும்பத்தினர் (9558)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536
நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576
(C-7057)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.07.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.